# ஞான கலசம்

2017




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானகலசம்

## மணிவிழா மலர்

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
அதிபர்

**உயர்திரு. வே. ஞானகாந்தன்**

**04-01-2017**

வெளியீடு
**மணிவிழாக்குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **ஞானகலசம்** |
| வெளியீடு | : | **மணிவிழாக்குழு** |
| முதற்பதிப்பு | : | **தை 2017** |
| பதிப்புரிமை | : | **மணிவிழாக்குழு** |
| பக்கங்கள் | : | **92** |
| பிரதிகளின் எண்ணிக்கை | : | **300** |
| வடிவமைப்பும் அச்சுப்பதிப்பும் | : | **பிறிண்ட் மாஸ்ரர், கொக்குவில்.** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன்



உயர்திரு. வே. ஞானகாந்தன் J.P. அவர்கள்
B.A., M.Ed., S.L.P.S. I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)

ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870 ஸ்தாபிதம் : 1966

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

...... ...... 20........



## ஆசிச் செய்தி

**ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள்**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஈழத்து தமிழ் புலமையாளர்களுள், புகழுக்குரியவர்களாகத் திகழும் திரு. வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்களின் அறுபதாவது ஆண்டுகளைத் தொட்டு இன்று நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளின்படி மணிவிழாக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

அறியாமையை நீக்கி அறிவு நலத்துடன் வாழத் துணை செய்வது கல்வி. கல்வி நிலையங்கள் அறிவுத் திறனை ஊட்டுவதோடு, பல்திறனையும் பண்பையும் வளர்க்கும் கருணை நிலையங்களாக விளங்குகின்றன. மாணவர்களின் திறனை அறிந்து அவர்களைத் துறைதோறும் ஊக்குவித்து பல்திறனோடு உருவாக்கும் பணியை அர்ப்பணிப்போடு செய்தவர்.

சைவமும் தமிழும் தழைக்க பணியாற்றும் இவரின் சேவை தொடர நல்லைக்குருமணியின் பாதம் பணிந்து ஆசி கூறுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

**சிவஸ்ரீ. சிவதாஸக் குருக்கள்**
பிரதமகுரு.
கொக்குவில் அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகள் தேவஸ்தானம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. வே. ஞானகாந்தன் அவர்கள் அகவை அறுபதையிட்டு எமது கல்லூரியில் கடந்த நான்கு வருடங்களாக பாடசாலையை இந்து சமய விழுமியங்களுடன் கொண்டு சென்றவர். பாடசாலையின் வளர்ச்சியில் தூர நோக்கு சிந்தனை கொண்ட அவர், ஓய்வு பெறும் காலத்தில் குடும்பத்தவர்கள், சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம்வல்ல வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ கிருபாகர சிவசுப்ரமணிய சுவாமியின் ஆசிகள் அவருக்கு கிடைத்தருள வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவமயம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

SRI NAGAPOOSHANI AMMAN KOVIL

Regd.No / பதிவு இல: HA/5/JA/567

நயினாதீவு
NAINATHIVU
SRI LANKA

தொலைபேசி / Telephone } யாழ்ப்பாணம் / Jaffna 070-213024


# ஆசிச் செய்தி




**திரு. ஆ. தியாகராசா**
தலைவர்,
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவில்,
நயினாதீவு.


ஈழமணித் திருநாட்டின் பெருமைக்கு முத்தாரமாக விளங்கும் மணிபல்லவம் என்னும் நயினையம்பதியின் தொல்குடி மரபில் பிறந்தவர் தான் இன்று மணிவிழாக் காணும் மதிப்பிற்குரிய வேலாயுதபிள்ளை ஞானகாந்தன். இவரது குடும்பத்திற்கும் எமது குடும்பத்திற்கும் நெருங்கிய தொடர்பு தொன்றுதொட்டு இன்று வரை தொடர்கின்றது. இவர் சிறுவனாக இருந்த காலத்தில் எமது தொடர்புகளை ஓரளவு அறிந்திருந்தார். இவரின் உடன் பிறப்புக்களின் மூலம் உறவு முறையை நன்கு அறிந்ததும் மிகவும் பற்றுடனும் பாசத்துடனும் பழகி உறவைப் பலப்படுத்திக் கொண்டார். எமது இரத்த உறவில் திருமணம் செய்தார்.

இவரின் தந்தையார் ஒரு சிறந்த புராணவித்தகர் எனது தந்தையாருடன் வந்து நான் சிறுவனாக இருந்த காலத்தில் புராணங்களின் உள்ளார்ந்த தத்து வங்களைப் பற்றி கலந்துரையாடுவதை நான் அவதானித்துக் கொண்டிருப்பேன். இந்த வகையில் தனது பிள்ளைகளையும் சிறந்த கல்விமான்களாக ஆக்கி, பெருமைதேடிக் கொண்டார். இன்று மணிவிழாக் காணும் அதிபர் உயர்திரு ஞானகாந்தன் அவர்கள் நயினை மண்ணின் ஒரு நாகமணி முத்து. அன்னை ஸ்ரீ நாகபூஷணி யின் அருளோடு பல்லாண்டு வாழ்ந்து பெருமைபெறவேண்டும் என வாழ்த்துகின்றேன். இதனை வள்ளுவர் இப்படிச் சொன்னார்,

மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை
எந்நோற்றான் கொல் எனும் சொல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

## Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.


T.P No : 021 - 3213151

E.Mail:- Thurkaiammantemple@gmail.com
Face Book:- tellidurga@gmail.com


திகதி:..............................

Fax:- 021 2241909

தலைவர்:
செஞ்சொற் செல்வர்
கலாநிதி. ஆறு திருமுருகன்
Dr. ARUTHIRUMURUGAN

E.Mail:- Aruthirumurugan@gmail.com Hot Line:- 0776258511


# செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி




**கலாநிதி ஆறு. திருமுருகன்**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
தலைவர்,
சிவபூமி அறக்கட்டளை,
இலங்கை.


கல்விப்பணியால் பலரது பாராட்டைப் பெற்ற அதிபர் திருமிகு. ஞானகாந்தன் அவர்களின் மணிவிழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வளர்ச்சியில் அயராது உழைத்த பெருந்தகை. ஆண்டுதோறும் புலமைப்பரிசில் பரீட்சையில் இந்து ஆரம்பப் பாடசாலை மகத்தான சாதனையை நிலைநாட்ட அல்லும் பகலும் உழைத்தவர். அரங்கில் தானே தேவார திருவாசகத்தைப் பாடி மாணவர்களை ஆன்மீகநெறியில் வளர்த்தவர். மூத்தவர்களைத் தாழ்பணிந்து வணங்கும் சுபாவமுடையவர்.

இளைப்பாறிய ஆசிரியர்களின் இல்லம் சென்று அவர்களின் ஆசியைப் பெறும் நற்பழக்கமுடையவர். இரக்க சுபாவமுடைய பண்பாளர் பகை அறியாத பண்பாளர். கனகரத்தினம் மகாவித்தியாலய அதிபராகப் பொறுப்பேற்றபின் விடுதிச் சாலையில் மாணவரை சகல வசதிகளுடன் கற்பதற்கு வழி செய்தவர். கொக்குவில் இந்துக் கல்லூரியின் அரியாசனத்தில் அமர்ந்து பணியாற்றும் அரிய வாய்ப்பு அவரது சேவையின் சிறப்புக்கு இலக்கணமாகக் கிடைத்தது.

ஆளுமைமிக்க அதிபரின் நிறைந்த சேவையை மதித்து அன்பர்கள் எடுக்கும் மணிவிழாச் சிறக்க வாழ்த்துகிறேன். சகல வளங்களுடனும் மன நிறைவுடனும் அதிபரும் அவர் குடும்பமும் சிறக்கத் துர்க்காதேவியைப் பிரார்த்தித்து அமைகிறேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

No: 3233

කාර්යාලය / அலுவலகம் / Office } 021 221 9376

ෆැක්ස් / தொலைநகல் / Fax } 021 221 9374

වෙබ් අඩවිය / இணையம் / Web } www.np.gov.lk

මගේ අංකය / எனது இல / My No } G/NPC/OP/HG/2016

රෙජිනෝල්ඩ් කුරේ
ரெஜினோல்ட் குரே
**Reginald Cooray**
ආණ්ඩුකාරවර, උතුරු පළාත
ஆளுநர், வட மாகாணம்
**Governor, Northern Province**


ආණ්ඩුකාරවර කාර්යාලය
ஆளுநர் செயலகம்
**Governor's Secretariat**

පැරණි උද්‍යානය, නුවර පාර, චුන්ඩිකුලි, යාපනය, ශ්‍රී ලංකාව.
பழைய பூங்கா, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், இலங்கை.
Old Park, Kandy Road, Chundikuli, Jaffna, Sri Lanka.

දිනය / திகதி / Date } 2016/12/28

# Felicitation Message from Hon.Governor, Northern Province to the Diamond Jubilee Celebration of Mr. Velayuthapillai Gnanakanthan

**Principal, J/ Kokuvil Hindu College**



**Reginald Cooray**
Governor,
Northern Province.

It is excellent that Mr. Velayuthapillai Gnanakanthan, the Principal of J/ Kokuvil Hindu College is celebrating his Diamond Jubilee exposing his long service and encouraging him to lead a happy and healthy life after his retirement.

I profoundly congratulate Mr. V. Gnanakanthan on his Diamond Jubilee Celebration of his precious and beautiful life with his great dedication in the field of Education to the young generation of Northern Province of Sri Lanka for thirty nine years which comprise of as a teacher for thirteen years and as a principal for twenty six years.

I have heard that he has been one of the successful principals in the North because he is a man of peace, tolerance, spiritual strength, stamina, good principles and ethics.

It should be very much appreciated that his efficient and effective service as Principal in J/ Jaffna Hindu Primary School, J/ Kanagaratnam Madhya Maha Vidyalayam and in J/ Kokuvil Hindu College has produced a good yield in Education Sector of Jaffna in the last fifteen years.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I understand that he has maintained a good rapport and coordination with and among students, teachers, old students, parents, Educational Officials, elected representatives of the people and well-wishers & benefactors of the schools. Therefore, he has become a successful educator and principal to guide and facilitate the students' population to achieve much success in curricular and extra-curricular activities at District, Provincial and National levels.

He may be a great role model to other teachers and principals. I am sure that his devoted education service to the country, Province and his people is a greatest inspiration.

I am sincerely glad to use this opportunity to congratulate Mr. Gnanakanthan on his Diamond Jubilee Celebration. Wish him good luck and health, and to stay such a clever, responsible and strong man in his life and continue his service for his community.

Thank him for all his hard-work and devoted service.


May God Bless him with many more years.

**Reginald Cooray**
**Governor**
**Northern Province**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துச் செய்தி



**நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்**
முதலமைச்சர்,
வடமாகாணம்.

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக விளங்கும் திரு.வே. ஞானகாந்தன் அவர்கள் தமது அகவை அறுபதை நிறைவு செய்து 04.01.2017இல் மணிவிழாக் காணவிருக்கின்றார். அவருக்கான மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி ஒன்றை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

திரு.ஞானகாந்தன் அவர்கள் நயினாதீவில் நாகபூசணி அம்மனின் அருட்கடாட்சத்துடன் பிறந்து தமது கல்வி நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொண்டு பட்டதாரி ஆசிரியராக 17.03.1978இல் நியமனத்தைப் பெற்றுக் கொண்டு கடந்த 38 வருடங்கள் மிகச் சிறப்பான சேவைகளை ஆற்றி வந்துள்ளார். பாடசாலைப் பிள்ளைகளும் பெற்றோரும் போற்றிக் கௌரவிக்கக்கூடிய வகையில் தமது சேவையைச் சிறப்புற ஆற்றி ஓய்வுபெறும் இச் சந்தர்ப்பத்தில் அவரை வாழ்த்திக் கௌரவிப்பது எமது தலையாய கடமை எனக் கருதுகின்றேன்.

பல ஆசிரியர்கள் தாம் எந்தப் பாடசாலையில் கற்பிக்கத் தொடங்கினார்களோ அதே பாடசாலையிலேயே ஓய்வுபெறுங் காலம் வரை சேவையாற்றி ஓய்வு பெறுவதை பல சந்தர்ப்பங்களில் நாம் அவதானித்திருக்கின்றோம். ஆனால் திரு. ஞானகாந்தன் அவர்கள் எந்தெந்தப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றாரோ அந்தந்தப் பாடசாலைகளில் எல்லாம் தமது சேவையை திறம்பட, அப்பழுக்கன்றி ஆற்றி வந்துள்ளார் என்று அறிகின்றேன். சிறந்த ஆசிரியராக, சிறந்த அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறவிருக்கின்ற திரு.ஞானகாந்தன் அவர்கள் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் மாணவர்களையும் குழந்தைகளையும் நெறிப்படுத்துகின்ற தார்மீகக் கடமையில் தொடர்ந்து ஈடுபடுவார் என்று எதிர்பார்க்கின்றேன். அவர் நீடுழி காலம் சிறந்த உடல்நிலையுடன் மக்கள் சேவையில் ஈடுபட்டு வளமாக வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**த. குருகுலராசா**
அமைச்சர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாண சபை.

திரு.வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்கள் 13 வருடங்கள் ஆசிரியராகவும் 26 வருடங்கள் அதிபராகவும் பணியாற்றி இளைப்பாறியுள்ளார். அவரின் சேவைநலன் பாராட்டு விழாவிலே வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

வடபுலத்தின் கல்விப்பணியிலே இவருடைய பங்கு மிகக் காத்திரமானது. யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த ஆரம்பப் பாடசாலையான யாழ்/இந்து ஆரம்பப் பாடசாலையில் 12 ஆண்டுகள் அதிபராகப் பணியாற்றினார். இலங்கைக் கல்வி வரலாற்றில் இப்பாடசாலை புலமைப்பரிசில் பரீட்சையில் அதிஉயர் பெறுபேறுகளைப் பதிவாக்கியிருக்கின்றமை ஒரு முக்கிய விடயமாகும். இதனைவிட யாழ்ப்பாணத்தில் பிரபலமான பாடசாலைகளான யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் பணியாற்றினார்.

கல்வித்துறையில் மட்டுமல்லாமல் பொதுச்சேவையிலும் யாழ்ப்பாணச் சமூகத்திற்காக இவர் பணியாற்றியிருக்கின்றார். இவ்வாறு ஆசிரியராக, ஒரு அதிபராக, நல்லதொரு கல்விமானாக மிளிர்ந்து இந்தச் சமூகத்திற்கு பணியாற்றிவிட்டு ஓய்வுபெறுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் அவரை பாராட்டி வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



**நா. வேதநாயகன்**
அரசாங்க அதிபர் மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டம்

திருவாளர் உயர். திரு. வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்கள் மணிவிழாக் காணும் இவ் வேளை மணிவிழா நாயகனை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைவதோடு மணிவிழா மலர் மலர்ந்து நறுமணம் பரப்பி அவர் புகழ் பரப்பவும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

திரு. வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்கள் நயினாதீவில் பிறந்தவர். நயினாதீவு மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர். பேராதனை பல்கலைக் கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்றவர். முது கல்வியில் பட்டப்பின்கல்வி, ஆசிரியர் பயிற்சி கலாசாலை ஆகிய துறைகளில் சிறந்த தொழிற்தகைமை பெற்றவர்.

சிறந்த ஆசிரியராக, அதிபராக பல உயர்வுகளைக் கண்டு மாணவர்களின் கல்விப் பாரம்பரியத்திற்கு பெருமை சேர்த்தவர். சிறந்த சமூகப்பணிகளிலும் பொதுச் சேவைகளிலும் தளராது முனைப்புடன் தனது பணியினை வழங்கிக் கொண்டிருப்பவர். யாழ் மாவட்ட கல்வி மேம்பாட்டுக் கழகத்தின் பொருளாளராக பதவி வகித்தவர். நல்லை தமிழ் சங்கத்தின் தலைவராகவும், ஆரிய திராவிடபாஷாவிருத்திச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராக, பரீட்சை உதவிச் செயலாளராக பொது நிறுவனங்களின் முதன்மை செயலதிகாரியாகவும் சமாதான நீதவானாகவும் சிறந்த பணியினை ஆற்றி வருபவர்.

அவரது சேவை சமுகத்திற்கு தொடர்ந்து கிடைக்க எல்லாம் வல்ல இறைபரம் பொருளை வேண்டுவதோடு அவரது சேவை பார்புகழும் வகையில் மணிவிழா மலர் இதழ் விரிக்க பணியாற்றும் மணிவிழாக் குழுவினருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர் தனது நிறைவான சேவையினை சமூகத்திற்கு தொடர்ந்து வழங்கவும், நீண்ட ஆரோக்கியத்துடன் வாழவும் வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ආණ්ඩුකාර කාර්යාලය
උතුරු පළාත
48, වනසංරක්ෂණ කාර්යාලය පටුමග,
චුන්ඩුක්කුලි, යාපනය

ஆளுநர் செயலகம்
வட மாகாணம்
48, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

GOVERNOR'S SECRETARIAT
NORTHERN PROVINCE
48, Forest Office Lane,
Chundukkuli, Jaffna

செயலாளர் / ලේකම් / Secretary: 021-2220660
பொது / පොදු / General: 021-2220660
தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021-2220661

எனது இல: / මගේ අංකය / My No: G/NPC/ Gen /2016
திகதி / දිනය / Date: 25.12.2016


# ஆளுநரின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



**இ. இளங்கோவன்**
ஆளுநரின் செயலாளர்,
வட மாகாணம்.

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் திரு. வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்களுடைய மணிவிழாவிற்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் உவகை அடைகின்றேன்.

அரச சேவையில் 60 அகவையுடன் ஓய்வுபெறுதல் என்ற நியதியோடு தனது சேவையை 39 வருடங்கள் ஆற்றி முழுமையாக நிறைவு செய்தவர் என்ற வகையில் அவரின் ஓய்வு திருப்திகரமாக அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. திரு.வே. ஞானகாந்தன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் அதிபராக சேவை புரிந்த காலத்தில் சிறார்களின் ஆரம்பக்கல்வி வளர்ச்சியில் விடாமுயற்சியுடனும், ஆளுமைமிக்க ஆசிரியர் குழாத்தினதும் சமூக ஒன்றிணைப்புடனும், பாடசாலை அபிவிருத்தியோடு பல்பரிமாண செயற்பாடுகளையும் முன்னெடுத்தமை பாராட்டுக்குரியது.

மேலும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் முகாமைத்துவ பொறுப்பை ஒரு தளம்பல் நிலையில் பொறுப்பேற்றபோது தனக்கே உரிய சாதுரியத்தாலும் சாணக்கியத்தாலும் சாதகமாக மாற்றியமைத்து கல்லூரியை வளர்ச்சிப்பாதைக்குக் கொண்டு சென்றமையோடு வட மாகாணத்தில் முக்கியமான இருபாலருக்குமான பாடசாலையான கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்று கல்வி மற்றும் கல்விசாரா செயற்பாடு களின் வெற்றிக்காக பாடுபட்டமை இத்தருணத்தில் போற்றுதலுக்குரியது. மேலும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அரச சேவையோடு சமய சமூகப்பணிகளிலும் தனது ஊக்கத்தையும் நேரத்தையும் பயன்படுத்தி வந்தமையும் குறிப்பாக, பூவரசங்குளம் பாலசுப்பிரமணியர் ஆலய பரிபாலன சபையின் செயலாளராக இருந்து மகா கும்பாபிஷேம் நடத்தியமை மற்றும் அதிபர் சங்கத்தினூடாக பணிகள் ஒழுங்கமைக்கப்பட்டமை போன்றவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

இவர் தன் பெயருக்கேற்ற வகையில் தனது அறிவார்ந்த ஈர்ப்பினைக் கொண்டு தமது சேவையில் பல அணியினரை உருவாக்கியமை சிறப்பானது. அதுமட்டுமல்லாமல் யாழ்ப்பாண மத்தியஸ்தர் சபையின் உறுப்பினராகவும், உதவித் தவிசாளராகவும் கடமையாற்றியதோடு இவரது சேவையைப் பாராட்டி சமாதான நீதவான் நியமனம் வழங்கப்பட்டமை இவரது சேவைக்குக் கிடைத்த கௌரவமாகும்.

நிறைவாக அன்னாரின் ஓய்வுக்காலம் சிறப்பாக சகல சம்பத்துக்களுடனும் பொலிவுற வாழ்த்தி தனது ஓய்வுக் காலத்திலும் சமய சமூக கல்விப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு சமூகத்திற்கு தனது அனுபவத்தினை தந்து மகிழ்ச்சியான வாழ்வு வாழ நயினை நாகம்பாள் ஆசியினையும் இறைஞ்சி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**இ. இரவீந்திரன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வட மாகாணம்.

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி 60 வயதைப் பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் திரு.வே.ஞானகாந்தன் அவர்களின் கல்விச் சேவையை வாழ்த்தி நடாத்தப்படும் மணிவிழாவில் வெளியிடப்படவிருக்கும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.


நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது பாடசாலைக் கல்வியை யா/நயினாதீவு மகா வித்தியாலயத்தில் பயின்றார். இவரது முயற்சியின் பயனாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டதாரிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகல்விமாணி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். 1978ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டத்தில் ஆசிரியராக கல்விப் பணியை ஆரம்பித்த இவர் 39 வருட காலத்திற்கு மேலாக ஆசிரியராக, அதிபராக, படிப்படியாகத் தர உயர்வுபெற்று மாணவர் சமுதாயத்துக்கு அர்ப்பணிப்புமிக்க சேவையினை வழங்கியுள்ளமை பாராட்டத்தக்கதாகும். தனது அயராத முயற்சியின் காரணமாக 1991இல் ஆசிரிய சேவையிலிருந்து இலங்கை அதிபர் சேவைக்கு தரமுயர்த்தப்பட்டார். சிறந்த ஆளுமையும் தலைமைத்துவத்தையும் கொண்ட அவர் தான் பணியாற்றிய பாடசாலைகளில் கல்விப் பணிக்குப் பெரும் பங்காற்றியிருந்தார். அத்துடன் தனது சேவைக்காலத்தில் பல சமய, சமூகப் பணிகளை ஆற்றியுள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

இவர் தனது ஓய்வுக்காலத்தில் பல சமூக, சமய பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**திரு. செ. உதயகுமார்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்ளம்,
வடக்கு மாகாணம்.

*யா/கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு.வே. ஞானகாந்தன் அவர்கள் அகவை அறுபதில் ஓய்வுபெறுவதையிட்டு வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.*

*அதிபர் திரு.வே. ஞானகாந்தன் அவர்கள் சிறந்த ஆசிரியராகவும், சிறந்த அதிபராகவும் கல்விப்புலத்தில் சேவையாற்றி ஓய்வு பெறுகின்றார். வவுனியா மாவட்டத்தில் ஆசிரிய நியமனத்தினைப் பெற்று மிக நீண்ட காலம் வெளி மாவட்டங்களில் ஆசிரியர் பணியினை ஆற்றி யாழ். மாவட்டத்தில் ஆசிரியராக, அதிபராக சிறப்பான பாடசாலைகள் அனைத்திலும் அப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இப்பாடசாலைகள் கல்வியிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் உயர்ந்துள்ளமையைக் காணமுடிகின்றது.*

*கலைமாணிப் பட்டதாரியான இவர் கல்வி முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுள்ளதுடன் 13 வருடங்கள் ஆசிரியராகவும், 26 வருடங்கள் அதிபராகவும் கல்விப்புலத்தில் 39 வருடங்கள் அரும்பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதுடன் அவர் தனது ஓய்வுக் காலத்தில் மகிழ்வோடு வாழவும், கல்விப் புலத்திற்கு தனது பணியினைத் தொடரவும் வாழ்த்துகின்றேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



**திரு. ந. தெய்வேந்திரராஜா**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

கல்வித்துறையில் கிட்டத்தட்ட 39 வருடங்கள் பணிபுரிந்து இளைப்பாறும் அதிபர் திரு.வே. ஞானகாந்தன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.


இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக சிறந்த ஓர் அதிபராகப் பணியாற்றிய பெருமை அவருக்குண்டு. யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் வளர்ச்சியில் இவரின் பங்கு மகத்தானது. பின்னர் யா/கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் சிறப்பாகப் பணியாற்றியதன் விளைவாக யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டார். இக் கல்லூரியின் வளர்ச்சியில் ஈடுபாட்டுடன் பணிபுரிந்தார். தான் எதிர்நோக்கிய சவால்களை எதிர்கொண்டு வெற்றியீட்டினார். இவரது முகாமைத்துவம் முரண்பாடற்றதாகவும் ஏனையோரை அரவணைத்துச் செல்லும் தன்மையையும் கொண்டதாக விளங்கியது. தனது குறிக்கோளில் தெளிவாக இருந்ததோடு அதனை அடைவதற்காகக் கடுமையாக உழைத்தவர். அவரது திறமையாலும் விடாமுயற்சியாலும் கொக்குவில் இந்துக் கல்லூரி கல்விப் பெறுபேறுகளிலும், விளையாட்டுத்துறைகளிலும் ஏனைய துறைகளிலும் பல சாதனைகளை ஈட்டியது. அவரது பொறுமையும் நிதானமும் அவரது பணிக்கு மெருகூட்டின. மாணவர்களினதும், சக ஆசிரியர்களினதும் அன்பைப் பெற்றவர். கல்வித் திணைக்களத்துடன் சிறந்த உறவுகளைப் பேணியதோடு தனது பாடசாலைக்கான தேவைகளைப் பெற்றுக்கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

கல்வித்துறையில் அயராது பணியாற்றி ஓய்வுபெறும் இவரது ஓய்வுக்காலம் மகிழ்ச்சியாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்க்கணிய சிந்தனை கொண்ட அதிபர்



**பேராசிரியர் க. தேவராஜா**
யாழ். பல்கலைக்கழகம்.
தலைவர், மணிவிழாக்குழு.
முன்னாள் செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் உயர்திரு. வே. ஞானகாந்தன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் புகழ்பூத்த அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெறுகின்ற அதிபர் திரு. ஞானகாந்தன் அவர்கள் தான் வகித்த பதவிக்கே இலக்கணமாகத் திகழ்ந்தவர் எனக் கூறினால் அது மிகையாகாது. தான் பதவியில் இருந்த காலத்தில் அப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கு அவர் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் எல்லோராலும் பாராட்டப்படும் வகையில் பதவியை அலங்கரித்தவர். அத்தகைய பெருமைக்குரிய அதிபர் இன்று இளைப்பாறுவது எமக்கு மனச்சுமையை ஏற்படுத்தினாலும் அவரது ஆலோசனையும் வழிகாட்டலும் தொடர்ந்தும் கிடைக்கும் என்ற நம்பிக்கை மனதைத் தேற வைத்துள்ளது.

அதிபர் உயர்திரு வே.ஞானகாந்தன் தான் பெற்றுக் கொண்ட உயர் கல்வியினாலும் அனுபவத்தினாலும் தலைசிறந்த அதிபராக விளங்க முடிந்துள்ளது எனக் கூறினால் அதில் மிகையொன்றும் இல்லை. முதல் பட்டம், இரண்டாம் பட்டம், மூன்றாம் பட்டமென கல்வியுலகிற்குத் தேவையான உயர்பட்டப் படிப்புக்களை நிறைவு செய்த காரணத்தினால் பாடசாலை நிர்வாகத்தைத் திறம்பட மேற்கொள்வதற்குத் தேவையான அறிவும் ஆளுமையும் அவரிடம் நிறையவே காணப்பட்டன. அதுமட்டுமன்றி பாடசாலைச் சமூகத்தை விளங்கி, அவர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றும் ஆற்றல் அவரிடம் காணப்பட்டமையை எவரும் மறுக்கமுடியாது. இன்றைய காலத்தில் முகாமையின் வெற்றிக்கு அடிப்படையில் அமையக்கூடிய நேர்க்கணிய சிந்தனையை அவர் கொண்டிருந்த காரணத்தால் முரண்பாடுகள் இல்லாத நிர்வாக முறையை அவரால் பின்பற்ற முடிந்தது. பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களையும், கல்வி கற்கும் மாணவர்களையும் மட்டுமன்றி, பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என பாடசாலைச் சமூகத்தவர்கள் அனைவரையும் பாடசாலையின் இலக்குநோக்கி நகர்த்திச் சென்ற பெருமை அவருக்குரியதேயாகும். இத்தகைய நேர்க்கணிய சிந்தனையே அவரின் வெற்றிகரமான நிர்வாகத்துக்கு அடிப்படையில் அமைந்ததெனக் கூறமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் உயர்திரு. வே. ஞானகாந்தன் அவர்களின் அர்ப்பணிப்பான சேவை அவர் பணியாற்றிய எல்லாப் பாடசாலைகளையுமே புகழ்மிக்கவையாக மாற்றியுள்ளது. கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் மேலோங்கி சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெற்றுக்கொள்ளவும் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பல்கலைக்கழகம் பிரவேசிக்கவும் அதிபர் அவர்களின் காலம் உதவியுள்ளது. அதுமட்டுமன்றி பாடசாலைகள் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் முன்னணியில் திகழ்ந்து மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பல விருதுகளைப் பெற்றுக்கொள்ளவும் அதிபரின் பதவிக்காலம் உதவியுள்ளது. அவரின் மென்போக்கு அவரது மேலதிகாரிகளான கல்வித்திணைக்கள அதிகாரிகளுடன் சுமுகமான உறவைப் பேணவும், அதனூடாக பாடசாலை அபிவிருத்திக்கான ஒத்துழைப்புக்களைப் பெறவும் வழிவகுத்துள்ளது. இதனால் பௌதிக வளங்களையும், ஆளணி வளத்தையும் விரைவாக அபிவிருத்தி செய்யும் சாத்தியம் பாடசாலைகளில் அதிபரூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பதனை எவரும் மறுப்பதற்கில்லை.

அதிபர் உயர்திரு.வே. ஞானகாந்தன் அவர்கள் கல்விச் செயற்பாடுகளில் மட்டுமன்றி சமூகசேவைச் செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். சமாதான நீதவானாக நியமிக்கப்பட்ட இவர், சர்வதேச சேவை அமைப்பான லயன்ஸ் கழகத்தில் இணைந்து அவர் சமூகத்திற்கு ஆற்றிவரும் பல்வேறு சேவைகளையும் நான் நேரடியாகவே கண்டு வியந்திருக்கின்றேன். இவரது கல்விப்பணியும் சமூகப் பணியுமே இன்று நமது சமூகத்தில் மக்கள் போற்றும் அதிபராக அவரை மாற்றியுள்ளது. கொக்குவில் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபராகப் பணியாற்றி இளைப்பாறும் உயர்திரு வே. ஞானகாந்தன் அவர்கள் ஓய்வின் பின்னரும் உற்சாகத்துடன் இயங்குவதற்கு எல்லாம்வல்ல இறைவன் நல்ல உடலாரோக்கியத்தை வழங்கவேண்டுமென இறைஞ்சுவதுடன் அவரது மனைவி, பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக வாழவேண்டுமென வாழ்த்தி அவரது தன்னிகரற்ற சேவைக்கு எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட அதிபர்
# உயர்திரு. வே. ஞானகாந்தன்



**மருத்துவர் க.ஸ்ரீதரன்**
முன்னாள் செயலாளர்,
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
செயலாளர், மணிவிழாக்குழு.

*2003ம் ஆண்டு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் எனது மகளின் அனுமதியோடு அதிபர் திரு.வே.ஞானகாந்தன் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அந்தச் சந்திப்பு அவரோடு குடும்ப நண்பனாகப் பழகும் வாய்ப்பாக மாறிவிட்டது. பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தில் இணைந்ததன் பயனாக அவரின் ஆழத்தை அறியும் வாய்ப்புக் கிட்டியது. பாடசாலையே தன் வீடு என்கிறமாதிரி பாடசாலையில் முழுநேரமும் அவரைக் காணலாம். யாழ். இந்து ஆரம்ப பாடசாலையை தேசிய ரீதியில் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியில் அறியச் செய்த பெருமை இவரைச்சாரும். பாடசாலைக்கட்டிடம், நூலகம், மைதானம், பச்சைவீட்டுத்திட்டம் என்பன இவரின் அரும்பணியால் பாடசாலையில் மிளிர்ந்தது எனலாம். பாடசாலையில் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் சகல நிகழ்வுகளுக்கேற்ப மாணவர்களை இணைப்பது, இசையும் அசைவும் நிகழ்வு மூலம் வெளிப்புற கல்விச் செயற்பாட்டில் நவீன தொழில்நுட்பத்தை கையாண்டவர்.*

*பாடசாலை ஆசிரியர்களைக் கல்விச்சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லும் போது மருத்துவர் என்ற ரீதியில் நானும் பங்கு கொண்டேன். சுற்றுலா ஒழுங்கமைப்பு, தங்குமிட வசதி, சாப்பாடு, பாதுகாப்பு என்றெல்லாம் அவர் மேற்கொண்ட விடயங்கள் அவரின் ஆளுமையை எடுத்தியம்பின. பரீட்சை பெறுபேறுகள் வரும்வேளையில் இரவிரவாக பாடசாலையில் இருந்து அப்பெறுபேறுகளை கிரமமாக எடுத்து வெளியிடும் ஆற்றல் அவருக்கு நிகர் அவரே. பாடசாலையுடன் தொடர்புடைய பல பேருடன் பழகும் ஆற்றல், சிரித்த முகம், ஆட்களைக் கவரும் வசீகரம், அவரின் பேச்சாற்றல், மற்றவர்களின் இன்பதுன்ப விடயங்களில் பங்குபற்றல், எல்லோருக்கும் மரியாதை செலுத்துதல் அவரின் பண்பான குணங்களைப் பார்த்து நான் வியந்து போனதுண்டு. எளிமையான வாழ்க்கையும், இயல்பான நடையும், கோபம் கொள்ளாத முகபாவனை அவரின் பொக்கிசம் எனலாம். நயினை அம்பாளின் கடாட்சம், கண்கூர்மை சார்ந்த குணம் இவை அவரின் வசீகரத்தன்மைக்கு எடுத்துக்காட்டு. அவருடைய பதவிக்காலத்தில் ஜெய்க்கா செயற்திட்டத்தில் பாடசாலையை அழகுபடுத்தி, செயற்பாடுகளை எளிமைப்படுத்துவதில் திறம்பட செயற்பட்டு யாழ். மாவட்டத்தில் முதன்மைப் பேறைத் தனதாக்கிக் கொண்டது மட்டுமல்ல, அந்தச் செயற்பாட்டை தன் வாழ்நாளிலும் கடைப்பிடிக்கும் மனிதர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாடசாலைக்கு மைதானம் வேண்டும் என்று கருதி காணிக்கொள்வனவு செய்யும்போது அவர் காணி வேண்டும் என்ற கோதாவில் காணிக்காரனின் காலில் வீழ்ந்து காணி வேண்டும் என்று அழுத கண்ணீர் அதன் பலன் காணி கிடைக்க வேண்டி வந்ததையும் எவ்வளவுக்கு தன் பாடசாலையை தன் குடும்பத்திற்கு மேலாக நேசித்திருக்கிறார் என்பதை எடுத்தியம்புகிறது. தான் விட்டுச் சென்ற பணியை தொட்டுச் செல்வதற்கு ஏற்ப ஒருவரைத் தேடிச்செல்லும் பாக்கியம் அவருக்குண்டு. யாழ். இந்து ஆரம்ப பாடசாலை நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சையில் ஒரு தடவையில் சித்திபெறும் மைல்கல்லை எட்டிச்சென்று அதனைத் தக்கவைத்த பெருமையும் இவரைச்சாரும். இப்பாடசாலையில் கற்கும் பாலர்கள் இடைநிலைக் கல்வியைச் சிறப்பாகச் செய்யவேண்டும் என்ற கொள்கையில் பாடவிதானங்களைப் புடம்போட்டு கற்பிக்க உதவியவர். பாடசாலையில் விளையாட்டுடன் சேர்ந்த கல்வி, பொது வகுப்பறைக் கல்வி, வெளிப்புற கல்வி, இசையும் அசைவும் இந்தச் செயற்பாடுகளை அடித்தளமிட்டதால் இந்தப் பாடசாலை மாணவர்களில் பெரும்பாலானவர்கள் பல்கலைக்கழக வாய்ப்பு பெற வழிவகுத்தது. கல்வியில் பட்டப்பின் கற்கைநெறிதனை நிறைவு செய்ததன் பயனாக முதலாம்தர அதிபராகி யாழ். கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திற்கு அதிபராக மாற்றலாகிச் சென்றார். கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதற்கிணங்க அப்பாடசாலையில் வணிகப்பிரிவில் மாணவர்கள் 3ஏ சித்தி, 23 வருடங்களாகச் செயற்படாதிருந்த விடுதி திறக்கப்பட்டு வெளிமாவட்ட மாணவர்கள் கல்வி பயில வழிவகுத்தவர். பின் அவர் யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அதிபராக நியமனம் பெற்றுச் சென்றார். அவர் காலத்தில் பாடசாலை ஒழுக்கம், தேசியமட்ட சாதனைகள் பல.

கல்விப்பொது சாதாரண, உயர்தர பெறுபேறுகளின் அடைவுமட்டம் உயர்ந்தது. பாடசாலையும் புகழ்பெறத் தொடங்கியது. 2017ம் ஆண்டு ஆறாம் அனுமதிக்கு வெட்டுப்புள்ளி யாழ். இந்துக் கல்லூரிக்கு 160, கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு 156 என்ற அளவு கோலில் அவரின் திறமையின் எடுத்துக்காட்டு தெரிகிறது. பாடசாலை மட்டுமல்லாமல் சமூகத்தோடு இணைந்து செயலாற்றியமை அவரின் வினைத்திறனான ஆளுமையை எடுத்தியம்புகிறது. இன்னும் பல சாதனைகள். இவரின் காலத்தில் நானும் வாழ்ந்தேன் என்ற பெருமை எனக்கும் ஏற்படுகிறது. அந்த வகையில் நான் கண்ட அதிபர் திரு. வே. ஞானகாந்தன் இனிவரும் அதிபர்களுக்கெல்லாம் ஒரு றோல்மொடல் என்றால் மிகையாகாது. இந்தப் பெருந்தகையின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய எல்லாம்வல்ல நயினை நாகபூசணி அம்பாள் அருள்புரிவாராக என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம்மிக்க மணிவிழா நாயகனே வாழ்க!



**திரு.க.ஜெயபாலசிங்கம்**
முன்னாள் தலைவர்,
பழைய மாணவர் சங்கம்,
கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

அதிபர் வே. ஞானகாந்தன் அவர்கள் தன்னுடைய கல்விப் பணியை முடித்து இன்று மணிவிழாக் காணுகின்ற போது அவருடைய சேவைக்கால செயற்பாடுகளை எண்ணிப் பார்க்கின்ற தேவை எமக்கு இருக்கின்றது.

ஒரு சமுதாயத்தின் உயர்நிலையானது மாணவர்களுடைய உயர் நிலையைப் பொறுத்தே அமைகின்றது. மாணவர்களிடையே துலங்கும் அமைதி சமாதானம் சகோதரத்துவம், ஆளுமை முதலிய பண்புகள் அவர்களை மேல் நிலையடைய வைக்கின்றன. சமுதாயத்தின் விருத்திக்கு மாணவர்களைத் தயார் நிலைப்படுத்துகின்ற பாரிய பங்களிப்பினை பாடசாலைகளே ஏற்படுத்துகின்றன என்பது வெளிப்படையே. சமுதாயத்தின் முதுகெலும்பாக இருக்கின்ற இளம் சந்ததியினரை வழிப்படுத்துகின்ற அற்புதமான பணியைத் தனது அதிபர் சேவைக்காலத்தில்மணிவிழா நாயகன் செய்திருக்கின்றார் என்றால் மிகையாகாது.

எமது கல்லூரியில் இரண்டு ஆண்டு காலத்தின் செயற்பாடுகளிற்கு நிகர் அவர் என்றே கூறவேண்டும். எமது கல்லூரி யுத்தத்தால் அழிந்த இரண்டு விடுதிகளை (ஆண், பெண்) யும் மீளவும் ஆரம்பிப்பதில் அவர் காட்டிய பங்கு மிகவும் மகத்தானது. புனரமைப்பதிலும் நிதிப்பங்கினைப் பெறுவதிலும் இரவு பகல் பாராது உழைத்தமையானது எமது கல்விச் சமூகத்தால் மறக்கவும் மறுக்கவும் முடியாதது ஆகும். தாய் தந்தையர் உறவினர் அற்ற 100 (நூறு) மாணவர்களை விடுதியில் இணைத்து எமது பழைய மாணவர்களின் உதவியோடு கல்வியூட்டியமை நினைவில் கொள்ளத்தக்கது.

அதுமட்டுமல்லாது எமது கல்லூரியின் மாபெரும் துடுப்பாட்டப் போட்டியின் தந்தையும் அவரே. ஆசிரியர், மாணவர், பழைய மாணவர் மனநிலைகளை அறிந்து உடனுக்குடன் செயல்வடிவம் கொடுத்து ஓர் அறிவுத் தொண்டனாகவும் ஆன்மீக போதனையாளராகவும், கல்விச் செயற்பாட்டாளராகவும் கல்லூரியில் விளங்கினார். திடீரென மாற்றம் கிடைத்தபோது எமது கல்லூரியின் நன்மை கருதி புதிய அதிபரைப் பெற்றுத் தந்தமையும் அவரையே சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்கு உதவி செய்கின்ற செயற்பாடாக இருக்கலாம் தன்னைத் தேடி வந்து வேண்டுகின்ற உதவியாக இருக்கலாம். தனக்கு அப்பால் செயற்பட வேண்டிய விடயங்களாக இருக்கலாம், கட்டிக்கழித்துவிடாது தன்னால் முடிந்த வரை தீர்வையும் தேடலையும் காணுகின்ற மனப்பாங்கு கொண்டவராக மணிவிழா நாயகன் வாழ்ந்தார் என்றால் மிகையாகாது.

சமய நிகழ்ச்சியாக இருக்கலாம். கல்லூரியின் விழாக்களாக இருக்கலாம். விளையாட்டுப் போட்டியாக இருக்கலாம், அவர் காட்டுகின்ற அக்கறையும் செயற்பாடுகளும் அவரிடத்தில் கல்விச் சமூகம் சார்ந்தவர்கள் அறிவதற்கும் கற்றுக் கொள்வதற்கும் நிறையவே உண்டு என்பது எனது கருத்தாகும். அன்போடு அறிவு ஆற்றலோடு ஆளுமை அடக்கம் என்ற பண்போடு கடவுளை மறந்தாலும் கடமையை மறக்காத செயலோடும் கல்வியின் வளர்ச்சிக்கென்றும் கலை விளையாட்டுக்கு என்றும் பள்ளியில் காட்டிய பண்பான உழைப்போடு கிட்டத்தட்ட 39 ஆண்டுகள் கல்விப் பணியை நிறைவு செய்து இன்று மணிவிழாக் காணுகின்ற எமது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய திரு.வே. ஞானகாந்தன் அவர்கள் சமூகசேவையில் தொடர்ந்தும் ஈடுபட்டு சமூகம் வளர்ச்சிபெற உழைக்க வேண்டியும் குடும்பத்தினரோடு சிறப்பாக வாழவும் எல்லோர் ஆசியும் இறைவன் ஆசியும் கிடைக்க மனதார வாழ்த்தி, எமது கல்லூரிச் சமூகம் சார்பாகவும் ஆசிகூறியும் நிறைவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் நெகிழ்ந்த நல்வாழ்த்துக்கள்



**செல்வி சு. அருளானந்தம்**
ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர்,
முன்னாள் துறைத்தலைவர்,
கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

என் அன்பிற்கும் பண்பிற்கும் உரிய மாணவராகிய ஞானகாந்தனுக்கு மணிவிழா நாளில் வாழ்த்துரைப்பதில் எல்லையற்ற பெருமகிழ்வடைகின்றேன். இவ்விழா நாயகன் அவர்களை 1994ம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பணப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வித்தகைமை நெறிக்குப் புகுமுக மாணவனாக வருகை தந்தபோதுதான் முதல்முறையாகச் சந்தித்திருந்தேன். அவரது அமைதியான சுபாவம், மரியாதைக்குரிய பண்பு என்பன முதலில் எனக்கு நல்லாசிரியன் என்ற உணர்வைப் பிறப்பித்திருந்ததில் வியப்பில்லை. அக்காலத்தில் பல்கலைக்கழக கல்விக்கழக பெரும் பொருளாளர் பணி சிரேஷ்ட விரிவுரையாளராக விளங்கிய எனது பொறுப்பில் இருந்தது. பொருளாளர் என்பவர் பல்கலைக்கழக நிதிப் பிரமாணங்களுக்கு வகை கூறுபவராகவும் இருந்தார். இரண்டாம் வருட மாணவர்கள் கழகத்தின் தலைவர், செயலாளர் பதவிகளை வகித்தல் மரபு. ஆனால் இளம் பொருளாளர் முதல் வருடத்தைச் சார்ந்தவராக வகுத்துக் கொண்டமைக்கு தொடர்ந்து பயின்று வருதலால் வகைகூறும் தன்மைக்கு உரியதாக இருந்தது. அந்த வகையில் இளம் பொருளாளராக ஞானகாந்தன் அவர்களே தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எமது துறைத்தலைவர் திருவாளர் ஆறுமுகம் அவர்கள் 60வது அகவையை நிறைவு செய்யும் செய்தியை உணர்ந்து அவருக்கு மணிவிழா ஒன்றைக் கல்விக்கழகம் செய்யத் திட்டமிட்டிருந்தவேளை அதற்கான நிதிகளை திரட்டி திட்டமிட்ட வகையில் சிறப்பாக அந்த விழாவினைச் செய்துமுடித்த பெருமை இளம் பொருளாளரையே சார்ந்தது என்றால் மிகையாகாது. அத்துடன் அவரால் கையளித்த கணக்கு விபரங்கள் பல்கலைக்கழக நிதிக் கிளையால் கணக்காய்வு செய்யப்பட்டு திருப்தி என்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது தான் இவரின் உள்ளார்ந்த ஆளுமைப் பண்புகளையும் சமூக நிலையில் முன்னின்று தயக்கமின்றி செயலாற்றும் நடத்தைகளையும் கண்டு இறும்பூதெய்தி வாழ்த்தத் தலைப்பட்டேன். இவருடைய காலப்பணிக்குப் பின் இதுவரை காலமும் இளம் பொருளாளர் பணி செயலிழந்த தொன்றாகவே இருந்து வருகின்றமையை நான் அவதானித்து வந்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பார்வையில் பட்டுத் தெளிந்த பளிங்காக விளங்கிய இவரின் எதிர்காலக் கல்விப்பணி எவ்வாறு அமையும் என்பதை அப்போதே தெரிந்துகொண்டேன். தென்மராட்சி இடப்பெயர்வுகளைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் நான் வசித்து வந்தவேளை எனது பேரனை யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் சேர்க்கவேண்டிய நிலையில் அன்று அதிபராக விளங்கிய இவரைச் சந்தித்து அனுமதி பெற்றுக் கொண்டேன். அன்றுமுதல் அப்பாடசாலையின் சமூகத்தினருடன் இணைந்து கொண்டேன். அப்பொழுதுதான் அக்கல்லூரியின் அற்புதங்களை என்னால் நேரில் கண்டு அனுபவிக்க முடிந்திருக்கின்றது. நானும் அப்பாடசாலையுடன் இணைந்து கொண்டபோது அப்பாடசாலையின் வளர்ச்சிப் பாதைகளின் வடிவமைப்போடு ஆரோக்கியமான பள்ளியாகவும், இலங்கையில் எப்பாகத்திலும் கொண்டிராத செயலூக்கம் கொண்ட செழுமையான ஊற்றாகப் பிரவாகித்திருப்பதைக் கண்டு மெய்சிலிர்த்தேன். இதற்கு செயல்நிலை சார்ந்த இயங்கியல் பண்பிற்குக் காரணமாக இருந்தவர்கள் அங்கு கற்பித்த அனைத்து ஆசிரியர்களும் தான் என்றால் மிகையாகாது. எல்லோரிடமும் நன்கு பழகிப் புரிந்து கொண்டதன் அடிப்படையில் அதிபர் அவர்களின் ஒன்றிணைத்து மகிழ்ச்சியுடன் செயலாற்றும் மரபொன்றைத் தோற்றுவித்திருந்த பெருமைமிகு பண்பு வெளிப்படையாகத் தென்பட்டது.

பாடசாலை காலை தொடக்கம் மாலை வரை எப்போதும் திறந்திருக்கும். எந்த வேளையிலும் அதிபர் பாடசாலைக்குரிய பணிகள் தொடர்பான செயற்பாடுகளை முன்நிலைப்படுத்திக் கொண்டிருப்பதோடு ஏதோ ஒரு பக்கத்தில் ஆசிரியர்கள் பிள்ளைகளுடன் மேலதிக வகுப்புக்களை நடாத்திக் கொண்டிருப்பார்கள். தன்பணி உணர்ந்து எவ்வித கட்டுப்பாடுமற்று வீட்டைமறந்து செயலாற்றும் தெய்வீக நோக்குமிக்க பள்ளியைப் பன்னீராண்டு செழுமையாக வழிநடத்தி இலங்கையின் புகழ்பூத்த ஆரம்ப பள்ளியாக பரிணமிக்கச் செய்ததோடு பல பதவி உயர்வுகள் பெற்று 1AB பாடசாலைகளை வெற்றியுடன் வழிநடத்தி மணிவிழாக் காணும் மகத்தான மாணவனுக்கு என் இதயம் நெகிழ்ந்த நல்வாழ்த்துக்களை நிதமும் சொரிந்து நிற்கின்றேன். அத்துடன் அவர்கள் குடும்பத்தினருடன் என்றும் குதூகலமாக வாழ்ந்து கல்விப்பணியைத் தொடர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



**பேராசிரியர் மா. சின்னத்தம்பி**
முன்னாள் தலைவர் - கல்வியியல்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் திரு. வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் தமது அரசபணியினை நிறைவு செய்து ஓய்வு பெறுகிறார். அரசின் தொழில் நிபந்தனை அவரை ஓய்வு பெறுமாறு வற்புறுத்துகிறது. ஆனால் திரு. ஞானகாந்தனது உடலும் உள்ளமும் மூளையும் செயற்றிறனும் மேலும் இருபது வருடங்களுக்கு அதிபராகச் செயலாற்றக்கூடியளவு உயிர்ப்பு மிக்கனவாகவே உள்ளன.

ஏறக்குறைய நான்கு தசாப்த காலம் மாணவர்களுடனும், கற்றல் - கற்பித்தலுடனும் பிரிக்கமுடியாத வாழ்வைக் கொண்டவர் அவர். அதிபராக 26 வருடங்கள் பணியாற்றியவர். இரண்டு வட மாகாணத்தின் புகழ்பூத்த கல்லூரிகளை முன்னேற்றியவர். அவரது கல்விப்பணி உன்னதமானது; பாராட்டுக்குரியது; மதிக்கத்தக்கது.

எனது மதிப்புக்குரியவர்களின் பட்டியலில் முதல் நிரலில் இருப்பவர்களில் திரு. ஞானகாந்தனும் ஒருவர்.

ஓய்வுக் காலத்தில் அவர் ஆரோக்கியமும் குதூகலமும் இணைந்து வாழ வாழ்த்தி மகிழ்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவத்தில் தனக்கென முத்திரை பதித்த திரு.வேலாயுதபிள்ளை ஞானகாந்தன்



**பேராசிரியர் தி. வேல்நம்பி**
பீடாதிபதி, வணிக முகாமைக்கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் உயர்திரு வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்கள் 1957 தை மாதம் 01ம் திகதி நயினாதீவிலே பிறந்தார். இவர் தனது கல்வியை நயினாதீவு மகாவித்தியாலயத்தில் கற்றுப் பின் உயர்கல்வியைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கற்று கலைமாணிப் பட்டதாரியாகச் சித்திபெற்றார்.

ஆசிரியப்பணியை வ/பறையனாலங்குளம் அ.த.க பாடசாலையில் ஆரம்பித்து வ/பூவரசங்குளம் மகாவித்தியாலயம், யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் மேற்கொண்டார். அதிபராக யா/ கல்வியங்காடு இ.த.க. பாடசாலை, யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம், யா/இந்து ஆரம்பப் பாடசாலை, யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் மற்றும் யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் பணியாற்றி மணிவிழா காண்கிறார்.

திரு.ஞானகாந்தன் அவர்கள் கல்விப்பணியுடன் பல சமூகப்பணிகளையும் ஆற்றியுள்ளார். நல்லைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவராகப் பணியாற்றி கருத்தரங்கு களையும் கவியரங்குகளையும் நடாத்தியமை, பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் உபதலைவராக இருந்து பாரம்பரியக் கலைகளை அடையாளப் படுத்தியதோடு போட்டிகளை நடாத்தி ஊக்கப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. யா/கொக்குவில் இந்துக் கல்லூரியானது இவருடைய சேவைக்காலத்திலே பல தேசியமட்ட விருதுகளைப் பெற்றுள்ளது பெருமைக்குரிய விடயமாகும்.

இத்தகைய பெருமைமிக்க பெருந்தகை பதவியிலிருந்து இளைப்பாறி னாலும் அவர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் இந்த அவனியில் வாழ்ந்து கல்வி மற்றும் சமூகப்பணிகளைத் தொடர்ந்து ஆற்றவேண்டும் என எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை மிக்க அதிபர்



**கலாநிதி. ச.க.கண்ணதாஸ்**
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திக்குழு.
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

திருவாளர் வே. ஞானகாந்தன் அவர்கள் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் அதிபராக இருந்த காலத்திலிருந்து எனக்கு அறிமுகமானவர். அவரது மலர்ந்த செளிப்பான முகம், மனிதநேயப் பண்பு, ஆழமான சிந்தனை, காத்திரமான பேச்சுத்திறன், செயற்திறன் என்பன என்னைக் கவர்ந்த குணாதிசயங்களை ஆகும். பாடசாலை நிர்வாகத்திலும் பொது விடயங்களிலும் அவரது தூரநோக்கும், சிந்தனைத் தெளிவுமிக்க தெளிவுமிக்க செயற்பாடுகளும் அவருக்கே உரித்தான சிறப்பான பண்புகளாகும்.

திரு.வே. ஞானகாந்தன் தனக்கே உரித்தான சிறந்த சிந்தனைகள், செயற்பாடுகள், பண்புகள், ஆளுமை என்பன காரணமாக தான் அதிபராக கடமையாற்றிய பாடசாலைகளின் சாதனைகளுக்கும், வேகமான வளர்ச்சிக்கும் உரியவராக விளங்கியவர். அவரது காலத்திலே யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை யாழ் மாவட்டத்திலே ஆரம்பக் கல்விக்கென தனித்துவம் பெற்ற பாடசாலையாக மிக வேகமாக வளர்ந்தது என்றால் அது மிகையாகாது. நிதானமான முடிவுகள், காலத்திற்கேற்ற திட்டங்கள், பாடசாலைச் சமூக அமைப்புகளை ஒருங்கிணைக்கும் ஆளுமை, செயற்றிறன், நலன் விரும்பிகளை அரவணைத்துச் செல்லும் செயற்றிறனும் அவரது வெற்றிக்கு துணைநின்ற காரணிகளாகும்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபராக திரு.வே. ஞானகாந்தன் பொறுப்பேற்ற நாளிலிருந்து அவருடன் நெருக்கமாகப் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அவர் தான் பொறுப்பேற்ற பாடசாலை மீது கொண்ட பற்றுதல், அதனை ஏனைய முன்னனணிப் பாடசாலைகளுக்கிணையானதாக வளர்க்க வேண்டுமென்ற அவா, பாடசாலையில் காணப்பட்ட குறைபாடுகளை அடையாளங்கண்டு கொண்ட வேகம், சவால்களை எதிர் கொள்ளக்கூடிய தந்திரோபாயமான செய்றபாடுகள், ஆசிரியர்களை தட்டிக்கொடுக்கும் மனப்பாங்கு போன்ற தெளிவான சிந்தனைகளைக் கொண்டிருந்த திரு. ஞானகாந்தன் காலத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி மேலும் உயரும் என்ற நம்பிக்கை எல்லோருடைய மனங்களிலும் ஏற்பட்டது. அவருடைய செயற்பாடுகள் அந்த நம்பிக்கையை வலுவூட்டின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது காலத்திலே கொக்குவில் இந்துக் கல்லூரியிலே பல சவால்கள் இடர்கள் ஏற்பட்டபோதும் அவற்றைக் கண்டு அவர் துவண்டுவிடவில்லை. பாடசாலைப் பாதைப் பிரச்சனை அவரை நீதிமன்றம் வரை கொண்டு சென்றது. எதற்கும் கலங்காது உறுதியுடன் திடமான நகர்வுகளை மேற்கொண்டு இடர்கள், சவால்கள் எல்லாவற்றினையும் வென்ற ஞானியாக செயற்பட்டார் ஞானகாந்தன். அவருடைய தெளிவான அணுகுமுறை மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஒன்றிணையவைத்தது. அதனால் பாடசாலைக் கல்விச்செயற்பாடுகளில் உன்னதமான பெறுபேறுகளைப் பெற்றது. விளையாட்டு, கலைநிகழ்வுகள், புத்தாக்கங்கள், கட்டுரைப்போட்டிகள் என்பனவற்றிலே பாடசாலை மாவட்டம், மாகாணம், தேசியம் என்ற நிலைகளில் பல வெற்றிகளைப் பெற்று உயர்வடைந்தது.


திரு.வே. ஞானகாந்தன் கொக்குவில் இந்துக்கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி அதன் வரலாற்றில் தனி முத்திரையையும் பதித்தவர். அவரது காலத்திலே பாடசாலை பௌதீகவளமும் காலத்தின் தேவைக்கேற்றவாறு விருத்தியும் செம்மையும் பெற்றிருக்கிறது.

இவ்வாறு கொக்குவில் இந்துக்கல்லூரியின் உயர்வில் விருப்புடனும் அர்ப்பணிப்புடனும் பங்காற்றி அதன் சாதனைகளின் நாயகனாக தடம் பதித்த திரு. வே. ஞானகாந்தனது ஓய்வு பாடசாலைக்கு இழப்பாக இருப்பினும் அவரது ஓய்வுக்காலம் பயனுள்ளதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் அமைய இறைவனை வேண்டி நிற்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**திரு. கோ. வரதராஜமூர்த்தி**
கல்வி நிர்வாகம்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

யாழ். வலயப் பாடசாலைகளில் அதிக மாணவர்களையும் ஆசிரியர்களையும் உள்ளீர்த்த மாகாணப் பாடசாலைகளில் ஒன்றாகிய கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் திரு. ஞானகாந்தன் அவர்கள் தமது அதிபர் ஆசிரியப் பணிகளில் 39 ஆண்டுகள் நிறைவை தம் உயரிய ஆளுமைப் பண்பின் வலிமையால் செவ்வனே நடாத்தி யாழ். வலயத்தில் ஒரு தனி இடத்தைப் பிடித்துள்ளார் எனக் கூறுவதில் நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன். அவர் பிரபல்யம் பெற்ற பாடசாலையான கனகரத்தினம் ம.ம.வி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் பணியாற்றியதன் மூலம் தம் ஆளுமைப் பண்பை வளர்த்துள்ளார் என்பதில் எம்மிடையே மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. பாடசாலை, வலயம், அமைச்சு, பாடசாலைச் சமூகம் என்பவற்றில் தொடர்பை வலுப்படுத்தி அதனூடாகப் பெறவேண்டிய வளங்களைப் பெறுவதில் அவர் வெற்றிகண்டார் எனக் கூறுவதில் தவறில்லை என்பது எமது எண்ணம்.

பாடசாலையில் பௌதிகவளப்பற்றாக்குறை காணப்பட்டபோதிலும் ஆசிரிய வளத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலம் பாடசாலையில் பாடவிதானம், இணைப்பாடவிதானம் என்பவற்றின் பெறுபேற்றில் உயர்ச்சியை ஏற்படுத்தினார் என்று கூறின் மிகையாகாது. புதுக்கோயில் நிர்வாகத்தினால் நெருக்கடிகள் பாடசாலை நிர்வாகத்திற்கு கொடுக்கப்பட்டபோதும் அதில் உள்நுழைந்து அந் நெருக்கடியை உடைத்து பாடசாலை மாணவர்களுக்கு அதன் மூலம் சமூகத்திற்கு என பல மட்டங்களிலும் எடுத்துக்காட்டி தனியொருவனாய் நின்று தனிப்பெருமை சேர்த்தார் எனக் கூறின் அது பிழையில்லையென்றே கூறலாம்.

இவ்வகையில் தமது அளப்பரிய பிரச்சினைகள் எதிர்கொண்ட சேவையின் மூலம் தம் உயரிய ஆளுமையை வளர்த்தவர் எனக் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வகையில் தமது அறுபது வயதில் ஆளுமையின் சின்னமாக இருந்து வந்தார் எனக் கூறி அவரையும் அவரது மனைவி புத்திரர்களையும் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**திரு. நா. தணிகாசலம்பிள்ளை**
ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
வடக்கு, கிழக்கு மாகாணம்.

உயர்திரு. வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்கள் நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்டவர். சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் செயல்ரூபம் கொண்டவர். கல்வி ரீதியாகவும், வாண்மை ரீதியாகவும் படிப்படியாக உயர்ந்து சிறப்புப் பெற்றவர்.

அவர் கற்பிப்பதில் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக, பதவி வகித்து தான் பொறுப்பேற்ற நிறுவன வளர்ச்சிக்கு உயராது உழைத்து ஓய்வு பெறுகின்றார். ஆரம்பப் பாடசாலைகள், உயர்நிலைப் பாடசாலைகளை திறம்பட நடாத்திபட்டறிவு கொண்டவர், புகழ் கொண்டவர், சாதனை படைத்தவர்.

யான் 1998ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் யாழ். வலயத்தை கல்விப் பணிப்பாளராக பொறுப்பேற்றபொழுது யாழ் நகரப் பாடசாலைகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் கூடிய மாணவர்களை வருடா வருடம் சித்தியெய்த வைத்து புகழுடன் அங்கு அவ் ஆரம்ப பாடசாலையில் சகல வளங்களையும் ஏற்படுத்தி, உயர்தரப் பாடசாலைகளில் அவ்வளர்ச்சியைக் காண இடமாற்றலாகிச் சென்றார்.

அவர் என்னைப் பதவி ஏற்ற காலத்தில் வாழ்த்த வந்த அறிமுகத்துடன் அடிக்கடி பாடசாலை வளர்ச்சிக்காகத் தொடர்பு கொண்டார். உங்கள் பிள்ளைகள் ஐவரும் எங்கள் ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று மருத்துவர், பொறியியலாளர், பிரதம கணக்காளர், விவசாய, தமிழ்த்துறைப் பட்டதாரிகளாகி சிறப்பு நிலையில் உள்ளனர். ஆதலால் எங்கள் பாடசாலைக்கு அந்த நன்றிக்கடனுக்கு உதவவேண்டும் என்று உரிமையோடு கேட்டுக் கொண்டார். அவரது கோரிக்கையில் நியாயம் கண்ட நான் அப்பாடசாலைக்குரிய நூல் நிலையத்தையும் விஞ்ஞான ஆய்வு கூடத்தையும் எமது அரச நிதி ஒதுக்கீட்டில் இருந்து பெற்றுக் கொடுத்தேன். அதனை அவர் சிறப்புடன் நிர்மாணித்து என்னைக் கொண்டே திறப்பித்தும் வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான் 2000ம் ஆண்டு மாகாணக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட பொழுது திரு. ஞானகாந்தன் அவர்கள் பாடசாலைச் செயற்பாட்டுன் புறநிலைச் செயற்பாடான பண்டிதர் வகுப்பை நடாத்துவதற்கும் முன்னின்று உழைத்தவர்.

அவரது கல்வித் தராதரங்கள் B.A, ஆசிரிய கலாசாலைப் பயிற்சி, Dip. in. Edu, M.Ed போன்ற வாண்மைத் தேர்ச்சியையும் வாண்மை உயர்வுக்காக சமமாகப் பெற்றுக் கொண்டார். அவரது கல்வி வாண்மைத் தகுதிகள், அவரது பட்டறிவு அவரைப் பெரிய கல்லூரிகளை சிக்கலின்றி முகாமை செய்ய உதவியது. அவரது உயர்வும், தொழில் திருப்தியும், ஆற்றலும் ஏனைய ஆசிரியர்கள், அதிபர்களுக்கு முன்மாதிரியானவை.

திரு. ஞானகாந்தன் அமைதியும் புன்சிரிப்பும், முகாமைத்துவ நுட்பம், ஆற்றல் படைத்தவர். "ஆட்"களைக் கண்டவுடன் சிரித்து உள்வாங்கும் பண்பாளர். அதுவே மாணவ, ஆசிரியர், பெற்றோர், நலன்விரும்பிகளை கல்வி அலுவலர்களின் நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் பெற்று அவர் எங்கெங்கு பள்ளிக் கூடங்களைப் பொறுப்பேற்றாரோ அவற்றை உயர வைத்தது.

அவர் வளமுடன் வாழவும், ஓய்வின் பின் கல்விப்பணி, சமூகப்பணி, சமயப்பணி ஆற்ற இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**திரு. ப. விக்னேஸ்வரன்**
ஓய்வுநிலை வடமாகாணக் கல்விப்பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.

உயர்திரு. வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்களை மணிவிழா நன்னாளில் வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன். இவர் நயினாதீவில் உயர் குடும்பத்தில் பிறந்து நாகபூஷணி அம்பிகையின் அருட்கடாட்சத்துடன் ஆசிரிய பணியில் இணைந்து கொண்டவர். கடந்த 38 வருடங்களாக ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக சீரியபணியாற்றியவர்.

இவர் பணியாற்றிய இடங்களிலெல்லாம் சமூகத்தடன் இணைந்து பல சேவைகளை செய்து தனக்கென தனி ஒரு முத்திரை பதித்துள்ளார். சாதுவான போக்குடைய இவர் அன்பினால் ஆசிரியர், மாணவர், பெற்றோரை அரவணைத்து சிறந்த பெறுபேறுகளை மாணவர் பெற்றுக் கொள்ள வழிப்படுத்தியுள்ளார். தமிழ்ப்பணி, சமயப்பணி, பொதுப்பணி என சிறந்த சேவைகளை தனது உத்தியோகப் பணிக்கு மேலதிகமாக சமூகப் பொறுப்புடன் பணியாற்றியுள்ளார் என்றால் அதில் மிகைபொன்றுமில்லை.

கனிவான மனைவியையும் பிள்ளைகளையும் பெற்றுள்ள இவர் தொடர்ந்த ஓய்வு காலத்திலும் சீரிய சமூகப்பணியாற்ற எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை அறுபதில் அகமகிழ்வுடன் வாழ்க

**திருமதி. செ. மகாலிங்கம்**
ஓய்வுபெற்ற யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளரும்
யாழ்ப்பாண மாவட்ட
மேலதிக கல்விப் பணிப்பாளரும்.

தம்பி ஞானகாந்தன் அவர்கள் கல்விப்புலத்தில் எனக்கு அறிமுகமாகியவர்களுள் ஒருவராவார். கல்வி வளர்ச்சியில் எனது நோக்கங்கள், அபிலாஷைகள் போன்ற சமாந்தரமான கொள்கைகள் கொண்டவர். இவர் ஒரு பயிற்சிபெற்ற ஆசிரியருடன் பட்டதாரியுமாவார். ஆரம்பக் கல்வியைப் பிறந்த ஊரிலும் தொடர்ந்து உயர்கல்வியைக் கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கற்று, ஆளுமைமிக்க ஆசிரியராக வவுனியா, யாழ்ப்பாண மாவட்டங்களில் கடமைபுரிந்து தொடர்ந்து அதிபராகப் பல கல்லூரிகளிலும் சேவையாற்றித் தனது 39 வருடங்கள் கல்விப்புலச் சேவையை 2017ம் ஆண்டு நிறைவு செய்கின்றார்.

என்ன விடயத்தைப் பிறர் கேட்டாலும் சம்மதித்துச் செயற்படும் தன்மையும் பிறரின் கண்டிப்புக்களையும் பெருமையுடன் ஏற்றுக்கொள்ளும் பண்பும் இருந்தமையே இவரை ஒரு பெருந்தகையாக வாழவைத்தது என்பது எனது கருத்தாகும்.

இவரது கல்விச் சேவையிலே இவர் அதிபராக இருந்த காலத்தில் தனக்கு முன்னர் சேவையாற்றிய அதிபர்களின் நல்வழிகாட்டலுடன் செயற்பட்டமையும், தனக்குத் துணை நின்று சேவையாற்றிய உப அதிபர்களுடனும் ஆசிரியர்களுடனும் மனப்பூர்வமாக ஒன்றிணைந்து செயற்பட்டமையுமே இவரை மேம்படுத்தியது.

இதனைத் தவிர இவருடைய கல்விச் சேவையில் இரு முக்கிய அம்சங்கள் எனது கவனத்தை ஈர்த்தன. ஒன்று மாணவரை வேறுபாடற்ற முறையிலும், இலகுவில் பயின்றுகொள்ளக்கூடிய முறையிலும் கல்வி புகட்டுதல். யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்காக ஆரம்பக் கல்வியில் இவர் உருவாக்கிய “சொல் அட்டைகள்” (Blocks) மாணவர்கள் எழுத்துக்களை இனங்கண்டு கொள்ளும் வகையில் அமைந்தது. இந்தச் செயற்பாட்டால் ஆரம்பக் கல்வியில் இலகுவில் மனநிறைவுடன் ஆர்வத்துடன் மாணவர்கள் கற்கும் மனோபாவம் தென்பட்டது. இம்முறை ஆரம்பக் கல்வி கற்பித்தலின் ஒரு முக்கியமான விடயமாகும்.

இரண்டாவதாக இவர் அதிபராகக் கடமையாற்றும்போது வலயக்கல்வி அலுவலக நிர்வாகச் செயற்பாடுகளுக்குத் துணைநின்று உழைத்தமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுப் பரீட்சைக் கடமைகளின்போது பல சவால்களை எதிர்கொண்டு மிகத் திறமையாகச் செயற்பட்ட பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரியாவார். ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும்போதும், நியமனங்கள் வழங்கும்போதும் அதிபர்களிற் சிலர் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க முயற்சிப்பார்கள். இதில் தவிர்க்கப்படுகின்ற ஆசிரியர்களின் மனநிலையில் தொய்வு ஏற்படின் அவர்களின் சேவையை முழுமையாகப் பெறமுடியாத நிலை ஏற்பட்டபோது எனது வேண்டுகோளுக்கிணங்க அவர்களைத் தனது பாடசாலையில் ஏற்று அவர்களை அக்கறையும், அன்பும் காட்டி அவர்களின் சேவையைப் பிறர் போற்றும் வண்ணம் வழிகாட்டிய ஒரு சிறந்த அதிபர். இவை தவிர யா/ இந்து ஆரம்ப பாடசாலையின் பௌதீக வளங்களிற் பெரும்பாலானவை இவரின் காலத்தில் விரிவாக்கப்பட்டன.

தனது கிராமத்திலும் மாவட்டத்திலும் பிற மாவட்டங்களிலும் சமய, இலக்கிய மேம்பாட்டுக்காக உழைத்து, ஆலய பரிபாலன சபைத் தலைவராக ஆரிய திராவிட பாஷாவிருத்தி, பாரம்பரிய கலைகள் மேம்பாடு, நல்லைத் தமிழ்ச்சங்கம் ஆகியவற்றிற் சேவையாற்றி தேசிய கல்வி நிறுவகத்தில் ஆய்வாளராகக் கடமையாற்றி "சேவையாற்று" என்ற நோக்குக் கொண்ட யாழ்ப்பாண அரிமாக் கழக உறுப்பினராகவும், தலைவராகவும் பதவி வகித்த திரு. ஞானகாந்தன் அவர்கள் பிறந்த இடத்திற்கும், வாழ்ந்த இடத்திற்கும் புகழ்சேர்த்த பெருமையாளனாக இளைப்பாறித் தன் மனையாளுடனும் பிள்ளைகளுடனும் இனிதே நீடூழி வாழ நானும் எனது குடும்பத்தினரும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**திருமதி. அ. வேதநாயகம்**
ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

39 வருடங்கள் கல்விச் சேவையினை அர்ப்பணிப்புடன் ஆற்றி ஓய்வுநிலை கண்டு மணிவிழாக் காணும் யா/ கொக்குவில் இந்துக்கல்லூரியின் நேற்றைய அதிபர் திரு. வே. ஞானகாந்தன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

திரு. வே. ஞானகாந்தன் அவர்கள் யா இந்து ஆரம்பப் பாடசாலையில் 12 வருடங்களிற்கு மேல் அதிபராகப் பணியாற்றியபோது மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகம், மேலதிகாரிகள் எல்லோரதும் நன்மதிப்பினைப் பெற்று மிகச்சிறந்த பணியாற்றியமை யாவரும் அறிந்ததே. கல்வியில் மட்டுமல்ல. இணைக் கலைத்திட்ட செயற்பாடுகளிலும் பாடமேம்பாட்டுச் செயற்றிட்டங்களிலும் தமக்கு நிகர்தாமே எனப் பாடசாலை நிமிர்ந்து நிற்க அரும்பணியாற்றியமை யாவரும் அறிந்ததே.

திரு. வே. ஞானகாந்தன் அவர்கள் பிறரை மதிக்கும் உயர்பண்பு கொண்டவர். பணிவால் உயர்ந்தவர். மேலதிகாரிகளின் அறிவுறுத்தல்களை ஏற்று முழுமையாக நடைமுறைப்படுத்தி விளைவினைக்கண்டு மகிழ்ந்தவர். வலய மட்டத்தில் முன்னெடுக்கப்படும் எந்த நிகழ்வாயினும் தனது சொந்த செயற்பாடு என எண்ணி முன்னின்று செயற்பட்டு நிகழ்வுகளைச் சிறப்புற வைத்தவர்.

யா/ கனகரத்தினம் ம.ம.வி இல் அதிபராகக் கடமையாற்றிய போது பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து பல செயற்றிட்டங்களை சிறப்புற முன்னெடுத்தவர். பாடசாலை விடுதியை மீண்டும் ஆரம்பிப்பதில் முனைப்புடன் செயற்பட்டவர். அடிப்படை வசதிகள் எதுவுமில்லாத நிலையில் அன்றைய அரசாங்க அதிபரும் பழைய மாணவருமான திருமதி. இமெல்டா சுகுமார் அவர்களை அணுகி ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்று ஆரம்பித்துவைத்த பெருமை திரு. வே. ஞானகாந்தன் அவர்களையே சாரும்.

வடமாகாணக் கல்விச் செயலாளர் திரு. இ. இளங்கோவன் அவர்களின் பணிப்பின் பேரில் நயினாதீவும் பாடசாலைகளில் கல்விப்பின்னடைவு பற்றி ஆராய்ந்து என்னால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் ஒரு செயற்றிட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுப்பதில் திரு. வே. ஞானகாந்தன் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பு என்னால் மறக்க முடியாது. நயினாதீவு பாடசாலைகளில் தரம் 11 இல் கல்வி கற்கும் சகல மாணவர்களிற்கும் பாடரீதியாக கற்றலில் விழிப்புணர்வு செயலமர்வு ஒன்றினை 10 நாட்கள் வதிவிடமாக நடாத்த முனைந்தபோது அன்றைய யா இந்துக்கல்லூரி அதிபர் அவர்களும் திரு.வே. ஞானகாந்தன் அவர்களும் இணைந்து யா/ இந்துக் கல்லூரியில் தங்குமிடவசதி, பாதுகாப்பு, தேநீர் மூன்றுவேளை உணவு, எழுதுகருவிகள் என்பன பெருமனதோடு வழங்கி ஒத்துழைத்தமையால் அந்தச் செயற்றிட்டத்தில் பெரு வெற்றிகாண முடிந்தது.

யாழ் வலயக்கல்விப் பணிப்பாளராக நான் கடமையாற்றிய காலப்பகுதியில் சிறந்த பணியாற்றி எனது பணி சிறக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்கி இன்று மணி விழாக்காணும் திரு. வே.ஞானகாந்தன் அவர்களின் மணிவிழா சிறக்கவும் ஓய்வு காலம் சிறப்புற அமையவும் வாழ்த்தி மகிழ்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பநலத்துடன் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றேன்



**திரு. அ. பஞ்சலிங்கம் (ஓய்வுநிலை அதிபர்)**
தலைவர்,
பழைய மாணவர் சங்கம், நம்பிக்கை நிதியம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

மணிவிழா நாயகன் திரு. வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்க வாய்ப்புக் கிடைத்தமையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். இந் நிகழ்வினை ஏற்படுத்திய ஏற்பாட்டாளர்களுக்கு எனது பாராட்டு உரித்தாகுக.

நயினை தீவு என்ற புனிதம் வாய்ந்த புண்ணிய பிரதேசத்திலே பிறந்த இன்றைய விழா நாயகன் தன்னுடைய குடும்பநிலை காரணமோ தெரியவில்லை, தனது சொந்த ஊர் பாடசாலைகளிலேயே உயர்தரக் கல்வியைக் கற்றுக் கொண்டமையை அறிந்து கொண்டேன். தீவகங்களில் இருந்து கல்வியைப் பெறுவதற்காக நகரப் பாடசாலைகளை நாடிச் சென்றவர்களையும், பட்டினங்களில் சென்று வசித்தவர்களையும் பலரைக் கண்டுள்ளேன். இதற்கு விலக்காக தனது பெரும்பகுதி ஆரம்பக் கல்விகளை தனது பிரதேசங்களிலேயே மேற்கொண்டு தனது முயற்சியினால் கல்வியில் முன்னிலைக்கு வந்தவர் தான் இன்றைய மணிவிழாவினைக் கண்டுகொள்பவர். தனது பட்டப்படிப்புக்கள் மற்றும் ஏனைய கல்வித்தகைமைகளை பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ். பல்கலைக்கழகம் மூலம் பெற்றுக்கொண்ட இன்றைய மணிவிழா நாயகன் திரு.ஞானகாந்தன் அவர்கள் தனது கல்விச் சேவைகளை பல முன்னிலை பாடசாலைகளில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி தனது முத்திரையைப் பதித்தவராவார். அதிபர் தரம் I தகைமைகளையும், பல பாடசாலைகளிலும் சேவையாற்றிய அனுபவங்களையும் கொண்ட இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பொறுப்பினை 2012ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டார். கொக்குவில் இந்துக் கல்லூரி பிரபல்யமான கல்லூரிகளில் ஒன்றாகும். இக்கல்லூரியை மிகச்சிறப்பாக வழிநடாத்திய காலங்களில் இவருக்கு பல சவால்களும், பிரச்சினைகளும் ஏற்பட்டாலும் இவரது பொறுமை இவைகளுக்கு முகங்கொடுத்து வெற்றிபெறச் செய்தது.

திரு.ஞானகாந்தன் அவர்களின் கல்லூரி முகாமைத்துவ காலங்களில் கல்லூரி எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெற்றதைக் காணக்கூடியதாகஇருந்தது. பிறரை மதிக்கின்ற, நேசிக்கின்ற நல்ல சுபாவம், பதற்றப்படாத தன்மை, பிறர் முகம் கோணாமல் பழகுகின்ற முறை இப்படியான பல குணாதிசயங்களைக் கொண்ட இவர் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டதுடன், சமூக உறவுகளையும் பேணிக்காத்தார். திரு. ஞானகாந்தன் அவர்கள் கல்விச்சேவையில் மட்டும் அல்லாமல் பல சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகளையும் பல அமைப்புக்களின் ஊடாக ஆற்றிவருவதை அறிந்து கொண்டவன் நான். கல்விப்பணி, பொதுப்பணி ஆகியவற்றில் தன்னை ஈடுபடுத்திய இவர் ஒரு நல்ல மனிதராக சமூகத்தினரால் கணிக்கப்பட்டார்.

இவரது மனம் போல் இவரது இல்லறவாழ்க்கையும் அமைந்துள்ளது. ஒருவரது வெற்றிக்கு பின்புலம் அவர்களது துணைவி என்பார்கள். அதற்கமைவாகவே இன்றைய மணிவிழா நாயகன் நற்பண்புள்ள துணைவியைப் பெற்றுள்ளார். எல்லோரும் போற்றும் பிள்ளைகளைக் கொண்டுள்ளார். எனவே திரு. ஞானகாந்தன் அவர்களின் ஓய்வுநிலை காலங்கள் சீரும் சிறப்புடன் சகல சௌபாக்கியங்களும் அமைந்து குடும்ப நலங்களுடன் வாழவேண்டி இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவர்கள் ஆற்றிய சேவைகளுக்கு எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி



**திரு. பொ. கமலநாதன்**
இளைப்பாறிய அதிபர்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

திருவாளர் ஞானகாந்தன் அவர்கள் யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் அதிபராக இருந்த காலத்திலிருந்தே எனக்கு அறிமுகமானவராகவும் நண்பராகவும் இருந்து வருகின்றவர். இவரது அகவை அறுபது நிறைவாகும் இன்றைய தினத்தில் நடாத்தப்படும் மணிவிழா மகுடமாக வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை அலங்கரித்தவர்கள் கல்லூரியை வளர்த்தெடுப்பதில் அரும்பாடுபட்டு மாணவர்களை போட்டிகளில் ஈடுபடச்செய்து தேசியமட்டம் வரையான போட்டிகளிலும் இடங்கள் பெற்றுவந்தமை என்பன சான்றாக அமைகின்றன.

கல்லூரிச் சமூகத்துடன் இவர் கொண்டிருந்த மனிதாபகரமான உறவும், ஆனமீகச் சிந்தனையும், அமைதியான போக்கும் இவர் பணிசிறக்க வழி வகுத்தன.

இவரது ஓய்வுக்காலம் குடும்பத்தினருடன் மகிழ்வாகவும், நலமாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப்பள்ளிகளின் முன்னோடி



**அ. அகிலதாஸ்**
முன்னாள் அதிபர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ். கல்வி வலயம்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து மணிவிழாக் காணும் வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்களின் மணிவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

மணிவிழா நாயகன் கல்விப்புலத்தில் ஆசிரியராகவும் அதிபராகவும் 39 வருடங்கள் பணியாற்றியுள்ளார். சிறிய பாடசாலைகள் முதல் பெரிய பாடசாலைகள் வரை அதிபராக அர்ப்பணிப்பான சேவையை வழங்கியுள்ளார். இவர் அதிபராக சேவையாற்றிய பாடசாலைகளில் பல சாதனைகளையும் பெரும் புகழையும் மதிப்பையும் பதிவு செய்த பாடசாலையாக யாழ் இந்து ஆரம்ப பாடசாலை விளங்குகின்றது. இவருடைய காலத்தில் பௌதீக வளங்கள் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், புலமைப்பரிசில் பெறுபேறுகள் உன்னதநிலையைப் பெற்றதெனலாம். யாழ் புலத்தில் புலமைப்பரிசில் பரீட்சையின் முன்னோடிப் பாடசாலை என்ற கருத்துரு மக்கள் இப்பாடசாலைக்கு ஏற்படுத்திய பெருமை இவரையே சாரும். இதற்கு யாரும் உரிமைகோர முடியாது. இப்பாடசாலையில் உருவாக்கப்பட்ட விளையாட்டு மைதானம் இவரது சேவையின் சாட்சியாக அமைந்துள்ளது.


கொக்குவில் இந்துக் கல்லூரியில் சேவையாற்றிய காலத்தில் கல்லூரியின் பரீட்சைப் பெறுபேறுகள் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக வளர்ச்சியைப் பதிவு செய்தார். தமிழ் மொழிப்புலமை, விளையாட்டுப் போட்டிகளில் தேசிய மட்ட ரீதியில் பல வீரர்கள் பதக்கங்களைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். தனது செயற்பாடுகளை கல்வித்துறையுடன் மட்டும் நின்றுவிடாது சமூக, கலாசார, சமய நிறுவனங்களுடன் செயலாற்றி வந்ததை அவரது வரலாற்றுப் பதிவுகளில் இருந்து அறியமுடிகின்றது.

இத்தகைய பெருமைக்குரிய மணிவிழா நாயகன் தொடர்ந்து சமூக, கலாசார, சமய துறைகளில் ஈடுபட இறையருளை வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் ஞானகாந்தன் ஒரு வரலாற்று நாயகன்



**திரு. சி. மாணிக்கராசா**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

புகழ்பூத்த அதிபர் உயர்திரு வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்களை 2003ம் ஆண்டில் இருந்துதான் நான் அறிந்து வைத்துள்ளேன். நான் நேரடியாக அறிந்த 16 வருடங்களும் நண்பர்கள் ஊடாக அறிந்த விடயங்களையும் வைத்தே மரியாதைக்குரிய அதிபர் அவர்களை வரலாற்று நாயகன் என அடையாளப்படுத்தினேன்.

- நான் க.பொ.த. உயர்தரம் 1978ம் ஆண்டு கற்க ஆரம்பிக்கும்போதே நாயகன் ஆசிரியத் தொழிலைப் பொறுப்பேற்றுள்ளார்.
- 39 வருட கல்விப்பணியை முடித்து மணிவிழா காண்பவர். இது எல்லோருக்கும் கிடைக்காது.
- அதிபர் சேவையில் தரம் 1 வரை முன்னேறி 26 வருட சேவையை முடித்தவர். இதுவரை ஓய்வில் சென்ற சிலரே இத்தகைய 26 ஆண்டு அதிபர் சேவையை முடித்தவராக உள்ளார்கள்.

உயர்திரு ஞானகாந்தன் அவர்கள் தொடர்பாக நான் கோட்டக்கல்விப் பணிப்பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக, அவரது நிர்வாகத்தோடு தொடர்புபட்டிருந்த வகையில் இனங்கண்டவற்றை குறிப்பிடாமல் விட முடியாது.

### 1. அவரது சமூக இசைவாக்கம்

இலங்கையில் பிறக்கும் எந்தக் குழந்தையும் நயினை மண்ணில் புரட்டி எடுத்தால், தனியான உயர்மனித விழுமியம் தொடக்கம் அனைத்தும் கிடைக்கும் என்பது நான் கண்ட உண்மை. அந்த மண்ணில் பிறந்த விழா நாயகன், உண்மையான மனிதப்பண்பு, ஆன்மீகம் இரண்டும் நிரம்பப் பெற்ற பூரண மனிதர். இவருடன் பழகும் எவரும் அவரைப் பிரியமாட்டார்கள், பிரிய விடவும் மாட்டார்.

ஏனெனில் அவரது பெற்றோர் பாக்கிய, புண்ணியவான்களாக இருந்த காரணத்தினால் தமது மகன் எதிர்காலத்தில் எப்படி இருப்பான் என்பதனை அகக் கண்ணினால் இனங்கண்டு "ஞான" "காந்தன்" என பெயரிட்டனர் என்றே எண்ணத் தோன்றுகின்றது. "ஞானம்" என்பது மகத்தான அறிவு. "காந்தன்" என்பது அணைக்கும் சக்தி, கவரும் சக்தி கொண்டவர். ஆகவே தான் அவர் அறிவுக்கு ஊடாக அனைவரையும் அரவணைத்து நிர்வகிக்கும் கலையை நயினை அம்மன் அவருக்கு வழங்கி உதவியிருக்கின்றார். பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அதிகாரிகள், நண்பர்கள் என மிகப்பெரிய கூட்டமே அதிபர் நண்பன் பின்னே உள்ளது என்றால் அது வேறு எவருக்கும் இல்லை. அப்படி வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவருக்காவது இருந்தாலும் அது பயத்தின் நிமித்தமானதாக இருக்குமே தவிர உண்மை அன்பின் பாற்பட்டதாக இருக்காது.

**2. நிர்வாகம்**

கல்வித் துறைக்குள் 39 வருடம் என்றால் எவராலும் எட்டிப்பிடிக்க முடியாது. சகல பிரதேசங்களிலும், சகலவகைப் பாடசாலைகளிலும் கடமையாற்றிய அனுபவ, கற்றல் அறிவுகள் இவரது உயர்நிலைக்குக் காரணம் எனலாம். இவர் கடமையாற்றிய ஒவ்வொரு பாடசாலைகளிலும் முத்திரை பதித்த வரலாறு எவராலும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது. யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை என்றால் என்ன என்பதனை அனைவரது கண்களையும் அகலவிரியச்செய்த பெருமை உடையவர். உலகம், இலங்கை அனைவர் மத்தியிலும் இந்து ஆரம்பப் பாடசாலையை குன்றின் விளக்கெனத் தெரியவைத்த பெருமை அதிபர் ஞானகாந்தனையே சாரும். யா/இந்து ஆரம்பப் பாடசாலையில் 12 வருட சேவையை இந்தச் சாதனைக்காக செலவிட்ட அவரது உழைப்பு மறுக்கமுடியாது.

யாழ். கனகரத்தினம் ம.ம.வியைப் பொறுப்பேற்ற ஞானகாந்தன் அதிபர் அவர்கள், குறித்த பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பு, சமூக இசைவாக்கம், கல்வி அபிவிருத்தி போன்றவற்றில் புதியதொரு சாதனையை ஆரம்பித்து வைத்த காலங்கள் வரலாற்றுப் பதிவாகும்.

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் பிரதேச பெரியோர்களின் வேண்டுதலுடன் 2012ம் ஆண்டு 10ம் மாதம் பொறுப்பேற்ற வரலாற்று நாயகன் அவர்கள், நல்லாட்சிப்பாடசாலையாக வளர்த்தெடுக்க உழைத்த உழைப்பு எவராலும் குறைத்து மதிப்பிட்டுவிடமுடியாது. கொக்குவில் இந்துவின் 05 வருட அதிபர் சேவை வரலாறு வேறு எந்த அதிபருக்கும் கிடைக்காத வரலாறு ஆகும். அதிபர் அவர்களின் நிர்வாக ஆற்றலையும் ஆன்மீக உறுதிப்பாட்டையும் மதிப்பிட முடியாத அற்பர்கள் சிலர், பாடசாலையின் அபிவிருத்திச் செயற்திட்டங்களை முன்னெடுக்கும் பல சந்தர்ப்பங்களில் நீறுபூத்த அக்கினிக் கிடங்கில் அதிபரைத் தூக்கிப் போட்டனர். கருகி விடுவார், இறந்துவிடுவார் என கற்பனைச் சந்தோசத்தில் திளைத்தனர். ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அக்கினிக் கிடங்குகளில் கருகாது, அக்கினிக் கிடங்கையே அழகிய குளிர் தடாகமாக்கி செந்தாமரைப் பூவாக்கியதைப் பார்த்து வெட்கித் தலைகுனிந்தவர் பலர். இதனாலேயே அதிபர் ஞானகாந்தன் அவர்களை வரலாற்று நாயகன் என்றேன். ஆசிரியர், மாணவர், பெற்றோர்களு டனான சிறப்பான நிர்வாக ஒழுங்கமைப்புக்கு ஊடாக அதிபர் அவர்கள் செயலாற்றி யமையே அவர் வெற்றிபெற்ற அதிபராக அனைவராலும்மதிப்பிடக் காரணமாகும்.

பாடசாலையைப் பொறுப்பேற்றதும் வெளிப்படைத் தன்மையான நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்த அவர் எடுத்த பிரயத்தனங்களை நான் அறிவேன். வயது என்ற தடை வராது இருக்குமானால் இன்னும் பல ஆண்டுகள் கொக்குவில் சமூகத்தின் பாடசாலையின் அதிபராக தொடர்ந்திருப்பார்.

**3. பௌதீக வள அபிவிருத்தியும் கல்வி அபிவிருத்தியும்**

அதிபர் ஞானகாந்தன் அவர்கள் பொறுப்பேற்ற ஒவ்வொரு பாடசாலையும் அவரால் பெருமை பெற்றதென்றால் மிகையாகாது. பாடசாலையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்கும்போது இருந்த நிலையைவிட பாடசாலையை விட்டு வெளியேறும்போது மாணவர், மற்றும் கல்விச் சமூகத்தினர் விரும்பும் வகையில் பௌதீக வள விருத்தியை ஏற்படுத்துவதில் வல்லவர். அதிபர் அவர்கள் வார்த்தைகளை எடுத்தாளும் விதத்துக்கு இசையாத அதிகாரிகளே இல்லை எனலாம். அத்தகைய மனிதப் பண்பு மிக்கவர். எவருக்கும் ஒப்பாக முடியாதவர். அதனால்தான் வரலாற்று நாயகன் என்றேன். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, கனகரத்தினம் ம.மகாவித்தியாலயம், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி போன்றன இவர் காலத்தில் பல மில்லியன் வேலைத்திட்டங்கள் உருவாக்கப்பட்டது. அவை தனது காலத்தில் செய்துமுடித்துக் காட்டியவர்.

மாணவர்களை ஆசிரியர்களை அன்புக் கட்டுக்கோப்புக்குள் வைத்து நிர்வாகம் செய்யும் திறன் கொண்ட அதிபர் அவர்கள் கடமையாற்றிய சகல பாடசாலைகளும் முன்னர் இருந்த சித்திவீதத்தைவிட பல மடங்கு அதிகரிக்க வைத்த செயற்றிறன் கொண்ட அதிபர் ஆவர்.

### 4. சிறந்த திட்டமிடலாளர்

பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி ஆயினும் பௌதிக வள அபிவிருத்திகளாயினும், பாடசாலைக் கவிநிலை கெடாதவகையில் நன்கு திட்டமிட்டுச் செயற்படுத்தக்கூடியவர். இச் செயற்பாடுகளை அவர் அதிகமாகக் கடமையாற்றிய பாடசாலைகளில் அவதானிக்க முடியும். யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அதன் கவிநிலை, கல்வி அபிவிருத்திக்கு என்ன எல்லாம் வேண்டுமோ, அத்தனையும் சிறப்பாக செய்துமுடித்து மணிவிழாக் காணுகின்றார்.

### 5. அதிபர் அவர்களின் வாண்மை

பயிற்சி ஆசிரியராக கல்வித்துறைக்குப் புறப்பட்ட அதிபர் ஞானகாந்தன் அவர்கள் ஆசிரியர் என்றால் எப்படி இருக்கவேண்டும் என நினைப்பவர்கள், அவரை உதாரணமாகப் படிக்கவேண்டும். ஆசிரியப்பணிக்குள் வருபவர்கள் நாளாந்தம் தங்களை கற்றலுக்கு ஊடாக வளர்த்துக் கொண்டு மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும். இதனை அவர் நிறைவாக நிறைவேற்றி, பட்டதாரியாகி, பட்டப்பின் படிப்பு, முதுகலைமாணி இவற்றைப் பெற்றதுடன், அதற்கு முன்னரே, அதிபர் தரப் பரீட்சையில் சித்தியடைந்து, அதற்குரிய தடைதாண்டல் பரீட்சைகளிலும் சித்தி பெற்றமை உண்மையில் வரலாற்று நாயகன் என்ற கூற்றுக்குப் பொருத்தமானவரே.

பாடல்களை இசைப்பதிலும், மரபுக்கவிதைகளை இயற்றுவதிலும், நாடகங்களை ஆக்குவதிலும் நடிப்பதிலும் கவியரங்குகுளை நடாத்துவதிலும் அவருக்கு நிகர் அவரேதான். அந்தளவுக்கு தன்னை வளர்த்த ஒரு பெருமகன். பேச்சாற்றல் அவருக்கு ஒரு தனிக்கலை. மற்றவர் மனம் புண்படாது பேசும் ஆற்றல் மிக்கவர். தொழில் ரீதியாகத் தன்னை வருத்தியவர்களுடனும் பழிவாங்கல் இன்றி அன்பாகப் பழகும் உயர் பண்புடையவர். இதனை எல்லாரும் செய்துவிட முடியாது.

### 6. சமூகப்பணியும் அதிபரும்

அதிபர் வேலை என்றால் அடுத்த வேலைக்கு நேரமிருக்காது. அந்த அளவுக்கு சுமை நிறைந்த பணி, மற்றும் குடும்பப் பணி இவற்றுக்கிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்துக்காக ஆற்றாத பணிகளே இல்லையெனலாம். ஆன்மீக ஆற்றல் நிரம்பப் பெற்ற குடும்பப் பாங்கில் இருந்து உதித்த ஞானகாந்தன் அவர்கள், எங்கு சென்றாலும் கோவிற்பணி, அறப்பணிக்கு முதலிடம் கொடுத்து செயற்பட்டிருக்கின்றார். அதுமாத்திரமன்றி கல்வியோடு தொடர்புடைய பொதுப்பணிகளிலும் ஈடுபட்டு முத்திரை பதித்தவர். அவரின் நேர்மைத் தன்மை காரணமாக மத்தியஸ்தர் சபையை நீண்டகாலமாக அலங்கரித்து ஏழை மக்களுக்கு அவர்களது பிரச்சினைகளில் நீதி கிடைக்க நீதவானாகச் செயற்பட்ட பெருமை உடையவர். அரிமாக் கழகத்தில் தன்னை இணைத்து சமூகத்துக்கு ஆற்றிய பணிகள் ஏராளம். இந்த வகையில் 04.01.2017இல் மணிவிழாக் காணும் அதிபர் அவர்கள் வரலாற்று நாயகனாகப் பார்க்கப்படக்கூடியவர், மற்றவர்களால் பின்பற்றக்கூடியவர் என்ற கருத்துக்கு மாற்றுக்கருத்து இருக்கமாட்டாது என்பது எனது நம்பிக்கையாகும்.

## 7. குடும்பமும் வாழ்க்கையும்

பாடசாலைப் பணிகளில் ஈடுபடுவர்களுக்கு அதிகாரிகள் கொடுக்கும் வேலைப்பழுக்கள் தாங்கமுடியாதவை. மாணவர் ஒழுக்கம், பெறுபேற்று உயர்வு, சித்தி வீதம், கணிப்பீடு, தரவு ஏற்றம், SBTD, மதிய உணவு, விசேட செயற்திட்டங்கள், வெளிவாரி, உள்வாரி மதிப்பீடு ZMP, செயலமர்வுகள், ஆசிரியர் ஆளணிப்பிரச்சினை, பெற்றார் ஊடல், ஆசிரியர் கட்டுக்கோப்பு, விசேட சுற்றுநிருப நடைமுறைகள், பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள், இருநகர இணைவுகள், போட்டிகள் என மூளையாலோ உடலாலோ சமாளிக்க முடியாத இத்தனை சுமைகளுக்கு எல்லாம் ஈடு கொடுத்து தனது குடும்பத்திலும் எதுவித ஈடாட்டங்களும் இல்லாது பாதுகாத்த பெருமைக்குரிய குடும்பத் தலைவராகவும் ஞானகாந்தன் விளங்கி மணிவிழாக் காண்பது என்பது மானிடப் பிறப்பில் கிடைத்ற்கரியது. அழகான குணமான மனைவி, உயர் கல்வியுடைய பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள் இவர்களது அனைவரது ஒத்துழைப்பும் கிடைத்த படியாற்றான் காலை 7.30க்கு முன் அவரால் பாடசாலைகளில் நின்று நல்லதிபர் என்ற பெயரைத் தான் சார்ந்த பாடசாலைச் சமூகங்களிடம் இருந்து பெற்ற அதிபராக மதிக்கப்படுகின்றார்.

சூரிய சந்திரர்களில் பல களங்கங்கள் உண்டென விஞ்ஞானிகள் வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் எந்த இடத்திலும் சமூக வாழ்வோ, பாடசாலைக் கடமைகளிலோ இம்மியளவேனும் களங்கப்படாத மணிவிழா நாயகனுக்கு பிரதீபா விருதுக்கான சிபார்சுகள் கிடைக்கவேண்டிய இடங்களில் இருந்து கிடைக்காவிட்டாலும் கல்விப்புலத்தில் 31 வருடங்கள் நிலைத்து நிற்பவன் என்ற அடிப்படையில் எத்தனை தடைவ ஜனாதிபதி விருது கொடுத்தாலும் அதற்குத் தகுதி உடையவரே மணிவிழா நாயகன் உயர்திரு ஞானகாந்தன் அவர்கள்.

39 வருடங்கள் கல்விப் பணியாற்றிய அதிபர் உயர்திரு. ஞானகாந்தன் அவர்களின் மணிவிழாவுக்கான வாழ்த்துச் செய்தி எழுதக்கிடைத்த சந்தர்ப்பத்துக்காக மகிழ்ச்சியடைவதுடன், ஓய்வுக்கால வாழ்வு சிறப்புற அமைய நயினை அம்மன் ஆசி கிடைக்கவேண்டுமென வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்களில் மாணிக்கம்



**திரு. எப்.எக்ஸ் அன்ரன்**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
நல்லூர் கல்விக்கோட்டம்.

முன்னுதாரணமான அதிபராக-ஆசிரியராகக் கல்விப்புலத்தில் 39 அகவைகள் அரும்பணியாற்றி பணியோய்வு பெறும் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பெருமதிப்புக்குரிய திரு.வே.ஞானகாந்தன் அவர்கட்கு மணிவிழா வாழ்த்துரைப்பதில் மகிழ்வடைகின்றேன்.

கல்விப்புலமையும், நிர்வாகத் திறனும், நல்ல தொடர்பாடல் திறனும் மிக்க திரு.வே.ஞானகாந்தன் அவர்கள் தான் பணியாற்றிய இடங்களில் எல்லாம் அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை சமூகத்தின் நன் மதிப்பைப் பெற்றவர். சக அலுவலகர்களுக்கு என்றும் ஆலோசனையும், உதவிகளும் வழங்கிட்ட நட்பின் சிகரம் அவர். வடபுல கல்வியுலகின் புகழ்பூத்த கல்விச்சாலைகளாகிய யா/இந்து ஆரம்ப பாடசாலை, யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றுடன் நல்லூர் கோட்ட பாடசாலைகள் பலவற்றில் பணியாற்றி அப்பாடசாலைகளின் வளர்ச்சியில் எழுச்சியில் வரலாற்று நாயகனாக விளங்குகின்றார்.

என்னுடைய அன்பிற்குரிய அதிபரும் நண்பருமாகிய மணிவிழா நாயகனை நலமோடு வளமோடு புகழோடு நீடு வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனை
## வளமுடன் வாழ மகிழ்வுடன் மனதார வாழ்த்துகின்றேன்



**திரு. இ. செல்வநாதன் J.P. (நகுலன்)**
செயலாளர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க
நம்பிக்கை நிதியம்

*உயர்திரு. வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்கள் 04.01.2017 இன்று 60வது அகவை பூர்த்தியெய்தியதையொட்டி சமூகத்தினரால் மணிவிழா கொண்டாடப்படுவது சாலச்சிறந்ததாகும். நயினை புண்ணிய பூமியில் மலர்ந்த உயர்திரு. ஞானகாந்தன் அவர்கள் தான் பிறந்த ஊர் பாடசாலைகளிலேயே ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி ஆகியவற்றைப் பூர்த்தி செய்து இதன் பிற்பாடு பட்டப்படிப்பினை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட பிற்பாடு Dip in Edu., MEd போன்ற கல்வித்தகைமைகளை யாழ். பல்கலைக்கழகம் மூலம் பெற்றுக் கொண்டார்.*

*திரு. ஞானகாந்தன் அவர்கள் பல பாடசாலைகளில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றிய பின் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார். இக்காலப்பகுதியில் இவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அதற்கு முன்பாகவே அரிமா கழகத்தின் ஊடாக (Lions Club) அறிமுகமாகி பல சமூக சேவைகளில் அவருடன் இணைந்து செயற்பட்ட காலங்களை எண்ணிப் பார்க்கின்றேன். மிக எளிமையாகவும், அமைதியாகவும் பழகிக்கொள்ளும் சுபாவம் கொண்ட இவர் தனது பொறுப்புவாய்ந்த அரச சேவை மத்தியிலும் பொதுப்பணிகளில் சலிக்காமல் பங்குகொண்டு சேவையாற்றியமை பாராட்டுக்குரியதொன்றாகும்.*

*மிகுந்த இறைபக்தியும், கவிப்புலமையும் கொண்ட இன்றைய விழா நாயகனுக்கு வள்ளுவருக்குக் கிடைத்த வாசுகிபோல எமது கல்லூரி பழைய மாணவியான "கேதாரபூரணி" அவர்கள் துணைவியாகக் கிடைத்தது இறைவன் கொடுத்த வரமாகும். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பார்கள். அதேபோல இவர் தம்பதியினர் மூன்று பிள்ளைகளைப் பேறாகப் பெற்று, அவர்களைச் சான்றோர்களாக்கி, பேரப்பிள்ளைகளுடன் மனம்போல் மாளிகையாகச் சீரும், சிறப்புடன் வாழ்ந்து கொண்டிருப்பதையிட்டு மகிழ்வடைகின்றேன்.*

*இன்றைய விழா நாயகன் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபராக இருந்த காலப்பகுதியில் கல்லூரி கல்வித்துறையிலும், விளையாட்டுத் துறையிலும், மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும், பௌதீக*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வளங்களிலும்ஓங்கி நின்றமை பாராட்டப்படவேண்டியதொன்றாகும். இவர் கல்லூரி அதிபராகஇருந்த காலத்தில் மாணவர்கள் பல போட்டிகளில் பங்குபற்றி மாகாணமட்டம், தேசியமட்டம் அளவில் வெற்றிபெற்று விருதுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

எனவே இன்று மணிவிழாக் காணும் நாயகன் உயர்திரு. வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்களும் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் அனைவரும் சுகதேகியாக நீண்ட ஆயுளைப்பெற்று வளமுடன் வாழவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர்கள் பல வெற்றிகொண்ட மணிவிழா நாயகனே நீடூழி வாழ்க



**பொ. சந்திரநாதன்**
உபதலைவர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திருவாளர் வே. ஞானகாந்தன் அவர்களின் அகவை அறுபது நிறைவை முன்னிட்டு வெளிவரும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திருவாளர் ஞானகாந்தன் 2012ம் ஆண்டு கல்லூரியின் அதிபர் பதவியைப் பொறுப்பேற்று ஐந்து வருடங்கள் பணியாற்றி இன்று இளைப்பாறுகின்றார். இவரின் பதவிக்காலத்தில் கல்லூரி பல துறைகளிலும் உன்னத நிலை அடைந்து வந்ததினை நாம் அறிவோம். அவை கலைத்திட்ட செயற்பாடுகளாக இருப்பினும் சரி மற்றும் விளையாட்டுத்துறை, கலைத்துறை, பரீட்சைப் பெறுபேறுகள், பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர் எண்ணிக்கை யாவற்றிலும் மாவட்டப் பாடசாலைகளுள் உயர்நிலையில் திகழ்ந்தது. கல்லூரி மாணவர்கள் பல்வேறு போட்டிகளிலும் தேசிய மட்டம்வரை பங்குபற்றச் செய்து வெற்றிகள் பல பெறச் செய்த பெருமையும் இவருக்குண்டு.

இவரிடம் காணப்பட்ட சிறந்த ஆளுமை, மனிதநேயம், அமைதியான நற்பண்பு என்பன மாணவர்களாலும் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் யாபேரினதும் அனுசரணையைப் பெற்று கல்லூரியின் பெருமையை வளர்த்தெடுக்க வாய்ப்பாயிருந்ததெனலாம். கல்லூரி விழாக்களை கோலாகலமாக நடாத்துவதில் பெருவிருப்புக் கொண்ட இவர் அவற்றுக்குத் தலைமை தாங்கி நடாத்திய பெருமை அவருக்குண்டு.


தனது பதவிக் காலத்தில் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய தேவைகளில் எல்லாம் அவற்றை வெற்றிகரமாக தீர்த்துவைத்த செயல்வீரனாகவும் விளங்கியவர்.

இன்றைய மணிவிழா நாளிலே இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவேண்டுமென கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளையும், மஞ்சவனப்பதி முருகனையும் பிரார்த்தித்து நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி



**ஐ. தயானந்தராஜா**
அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

சகோதரர் வேலாயுதபிள்ளை ஞானகாந்தனுடன் எனக்கரிய நட்பு கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலானது மட்டுமல்ல, அவரது குடும்பத்தினர் எனக்கு மிக வேண்டியவர்களாக மிகந்த அன்புரிமையோடு பழகும் குணம் கொண்டவர்கள். நயினாதீவில் சைவத்தமிழர் பாரம்பரியத்தில் பிறந்து அம்மனின் அருளாட்சி பெற்ற பெருமக்களில் சகோதரர் ஞானகாந்தன் அவர்களும் மிகவும் முக்கியமானவர்.

இளமையிலே நிறைந்த கல்வியறிவும் பக்தியும் கொண்ட இவர் எடுத்த எக்காரியத்தையும் கச்சிதமாக முடிக்கும் ஆற்றல் கொண்டவர். எவருடனும் எந்தச் சந்தர்ப்பத்திலும் முரண்படாது பணியாற்றி தான் நினைத்த இலக்கை அடைவதில் வல்லவர். மனிதநேய சிந்தனையுடன் சமூகத்தில் பல பொறுப்பான பதவிகளை தமது ஆசிரியர், அதிபர் சேவைக்கு அப்பாலும் ஆற்றி மக்களின் அபிமானம் பெற்றவர். அதிபர் சேவையிலே நிறைவாக பணியாற்றிய புகழ் பெற்ற இந்து ஆரம்ப பாடசாலை, கனகரத்தினம் ம.ம.வி, கொக்குவில் இந்துக் கல்லூரி என்பன யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய கல்விக்கூடங்கள். அவற்றில் பணிபுரிந்து ஒரு நிறைவான சேவையைச் சமூகத்துக்கு வழங்கி கடந்த தசாப்தத்தில் மிகவும் புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் சகோதரர் ஞானகாந்தனும் இடம்பிடித்திருக்கின்றார் என்ற பெருமையை இங்கே பதிவு செய்வதில் மகிழ்வடைகின்றேன்.

என்றும் மிகவும் இளமையான தோற்றத்துடன் காணப்படும் ஞானகாந்தன் அவர்களுக்கு இன்று அகவை 60. இது இவரது அதிபர் பணிக்கான ஓய்வு மட்டுமே. ஆனால் மிகுந்த துடிப்பும், ஆர்வமும், இளமையும் கொண்ட ஞானகாந்தன் அவர்கள் அடுத்துள்ள கல்வி, சமய, சமூகப் பணிக்கு தன்னை மீண்டும் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதற்கான ஆரம்பமாகவே இவரது 60 அகவையைக் கருதுகின்றேன். சிறந்த சமூக சிந்தனை கொண்ட யாவருக்கும் வயது என்பது ஒரு தடையே இல்லை.

அன்பான குடும்பத்துணையையும் அருமையான மக்கள் மருமக்களையும் தனதாக்கிக் கொண்ட ஞானகாந்தன் அவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் நாளும் பொழுதும் நலமே வாழ நயினை நாகபூசணி அம்மனை வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**நா. மகேந்திரராசா**
அதிபர்,
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

கல்வி உலகில் சிறந்த சேவையாற்றி ஓய்வுபெறுகின்ற திரு.வே. ஞானகாந்தன் அவர்களின் மணிவிழாவினை முன்னிட்டு வெளிவருகின்ற இவ்விதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வுறுகின்றேன். கல்வியுலகத்தில் சவால்மிக்க காலத்தில் தனது பணியை வெற்றிகரமாக நிறைவு செய்வது என்பது சாதனையே. ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்து இளவயதிலேயே அதிபராகப் பணியாற்றத் தொடங்கி சவால்மிக்க களங்களில் தனது பணியை திரு.வே.ஞானகாந்தன் அவர்கள் ஆற்றியிருப்பது அவரது ஆளுமையின் வெளிப்பாடு ஆகும்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் 12 வருடங்கள் சேவையாற்றியுள்ளார். இவரது யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் சேவைக்காலம் என்பது இப்பாடசாலையின் வரலாற்றில் ஒரு பொற்காலம். பாடசாலையின் செயற்பாடுகளை உச்சம் நோக்கிக் கொண்டு சென்றவர். பாடசாலைக்குத் தேவையான மைதானக் காணியை கொள்வனவு செய்வதில் பல்வேறு தந்திரோபாயங்களை வகுத்து செயலாற்றி வெற்றி கண்டவர். பாடசாலையில் கற்றல் அடைவுகள், பௌதீகவள விருத்தி என எல்லாவற்றையும் உயர்நிலைக்குக் கொண்டுவந்த முன்னாள் அதிபர் வரிசையில் தன்னையும் ஒருவராக நிலைநிறுத்தியுள்ளார்.

இவர் தற்போது பணியாற்றி ஓய்வுபெற்ற யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் சிறந்த சேவையாற்றி தனது ஆளுமையின் இன்னுமொரு பக்கத்தை எமக்கு வெளிக்காட்டியுள்ளார். குறுகிய காலத்தில் இப்பாடசாலையில் அதிபர் பணியாற்றிப் பாடசாலையின் வினைத்திறனில் முக்கிய பங்காற்றியுள்ளது, 2015 க.பொ.த. உயர்தர பரீட்சை முடிவுகளில் பிரதிபலிக்கின்றது.

கல்விப்பணி மட்டுமன்றி சமூகப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். இவரது ஓய்வுக்காலத்தில் சிறந்த உடல், உள நலத்துடன் குடும்பத்தினருடன் மகிழ்ந்திருக்க எல்லாம்வல்ல கொண்டலடி விநாயகப் பெருமான் அருள்புரிய வேண்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை மிக்க நாயகன்



**பே.தனபாலசிங்கம்**
அதிபர்,
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

மணிவிழாக்காணும் மணிவிழா நாயகன் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய எமது தாய்ப் பாடசாலையின் முதல்வர் உயர்திரு. வே. ஞானகாந்தன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கொக்குவில் இந்துக்கல்லூரி வரலாற்றில் தடம்பதித்து கல்லூரியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து அகவை அறுபதில் மணிவிழாக்காணும் உயர்திரு. வே. ஞானகாந்தன் அவர்கள் உயரிய பண்பாளர் அவர் சைவத்தின்பால் கொண்ட பற்று இயல்பாகவே அவரிடம் காணப்படுகின்ற இரக்கசுபாவமும் பதட்டமற்ற சிரித்த முகமும் அவரை எல்லோர்பாலும் கவர்வதற்கு காரணமாக இருந்தது.

கல்விப்புலத்திலே கொண்டிருந்த நீண்ட அனுபவமும் அறிவும் அவரை மேலும் மேலும் உயர்வடைய வைத்தது. தன்னிடம் நாடிவருபவர்களை நேர் மனப்பாங்குடன் அணுகுகின்ற தன்மையும் அவருக்கு வருகின்ற பிரச்சனைகளை இலகுவாகவும் கையாண்டு வெற்றிகொள்ள வழியமைத்தது எனலாம்.


மணிவிழா நாயகனின் அளப்பெரிய சேவையை பல பாடசாலைகளின் வரலாற்றுத் தடங்களில் காண்பது மட்டுமல்லாது அச்சேவை காலம் காலமாகப் பேசப்படும் என்பதும் உண்மை.

மணிவிழா நாயகன் மதிப்பார்ந்த வே. ஞானகாந்தன் ஐயா அவர்கள் தங்கள் ஓய்வு காலங்களில் தேகசுகத்தோடும், மனநிறைவோடும் பல்லாண்டு காலம் மகிழ்வுடன் வாழ எல்லாம் வல்ல கிருபாகரசுப்ரமணிய சுவாமிகளின் பாதாரவிந்தங்களைப் பணிந்து வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்முகச் செம்மலே! வாழ்க !



**திரு.T. மோகனதாஸ்**
பிரதி அதிபர்,
கொக்குவில் இந்துக்கல்லூரி.

கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபராக இருந்து மணிவிழாக்காணும் திரு.வே. ஞானகாந்தன் அவர்களின் சிறப்பினையும், பெருமையினையும், சேவையினையும் தாங்கும் மலரில் நானும் ஒரு இதழாக இருந்து வாழ்த்துவதில் மனமகிழ்வடைகின்றேன்.

"தோன்றில் புகழோடு தோன்றுக....." என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்கணமாக திகழ்ந்து அறுவதாவது அகவையினை எட்டிக்கொண்டாலும் என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற பெருங்கூற்றினை தனது அணிகலனாக கொண்டவர். ஆசிரியப்பணி, தொடர்கல்விப்பணி எல்லோருக்கும் வாய்ப்பது அரிது. ஆனால் திரு. ஞானகாந்தன் விருப்போடு தொழில் செய்யக் கிடைத்ததுடன் அப்பணியில் சாதனையாளராக விளங்குகின்றார்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையினை உலகறியச் செய்த உத்தமர் கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்தை உயரவைத்து எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்த முதல்வர் கொக்குவில் இந்துக் கல்லூரி அன்னை தலைமகனாகத் தேர்ந்தெடுத்தபோது இன்முகத்துடன் அவன் பாதம் தொட்டு வந்து சோதனைகள் பல ஏற்பட்டபோதும் அனைத்தையும் சாதனையாக்கிய செயல்திறன்மிக்கவீரன். மனிதம் தொலையும் இக்காலத்திலும் மனிதனாக வாழ்ந்துகாட்டிய வள்ளல். எதிரியாக இருந்தாலும் தன்னைத் தேடிவரும் அன்பனை எழுந்து நின்று இருகரம்கூப்பி அமரவைக்கும் அண்ணலவர். எனது மனம் கவர்ந்த நண்பன் என் குடும்பத்தினருக்கு ஆலோசனை செய்யும் மந்திரி, ஆறுதல் தருவதில் தாயாய் விளங்கிய அவரை எப்படி வாழ்த்துவது சொற்களால் வடிக்கமுடியாது.

"தாம் இன்புறுவது உலகு இன்புறுக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார் "

என்ற கூற்றுக்கு சமூகத்துடன் ஒன்றுபட்டு உழைக்க வல்லவர் தமிழ் மூதாட்டியின் அறமுணர் சொல்லுக்கு இலக்கணமானவர், கவிதை புனைவதில் கவிஞன். சைவமும் தமிழையும் போற்றுவதில் புலவர். கல்வி மேம்பாட்டிற்கு உழைப்பதில் அறிஞர். பேச்சுத்திறத்தால் யாவரையும் கவரும் தன்மை மிக்கவர். அவர் யாரையும் எதிரியாக காணவில்லை. எல்லோரையும் இன்புறச்செய்யும் ஆன்மீகவாதி. எனவே அன்புதான் சிறந்தது என வாழ்ந்து காட்டிய பெருந்தகையவர். அவர் மேலும் புகழோடும் ஆரோக்கியத்தோடும் இளமைத்துடிப்பு குன்றா மாமனிதனாக மக்கள் சேவையே மகேசன் சேவை எனக்கொண்டு வாழவேண்டும். அவர் குடும்பம் நலனுடன் புகழ்பூத்து கிளைபரப்பி இன்புற்று இருக்க அவர் தெய்வமாம் நாகபூசணி அம்பாள் அருள்பாலிக்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளமுடன் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக்காணும் அன்புள்ளம் கொண்ட அதிபர்




**இ.ச. உமாசுதன்**
(உப அதிபர்)
செயலாளர்,
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி.


எமது கல்லூரியில் அதிபராக இருந்து அகவை அறுபதில் ஓய்வுபெற்று மணிவிழாக்காணும் திருவாளர் வே.ஞானகாந்தன் அவர்களுக்கு வாழத்துரை வழங்க வாய்ப்பு கிடைத்தமையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

சப்ததீவுகளில் ஒன்றாகவிளங்கும் நயினாதீவில் பிறந்து தனது சொந்த ஊரில் உயர்கல்வி கற்று தனது 21ஆவது வயதில் ஆசிரியராக வ/பறையனாலங்குளம் அ.த.க.பாடசாலையில் நியமனம் பெற்று 13 வருடங்கள் பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் பின் யாழ் கோட்ட ஆசிரியர் ஆலோசகராகவும் கடமையாற்றி 1991 இல் அதிபராக பதவியுயர்வு பெற்று 26 வருடங்கள் அதிபராக கடமையாற்றியுள்ளார்.

இவர் தனது வான்மைவிருத்தியின் பொருட்டு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியையும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும் யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணி போன்ற பட்டங்களையும் பெற்று கல்வித்துறையில் தன்னை வளப்படுத்திக்கொண்டார்.


இவர் தனது சேவையில் அதிபர் தரம் -1 தகைமையையும், பல பாடசாலைகளினூடாக அனுபவங்களையும் பெற்று 2012இல் கொக்குவில் இந்துக்கல்லூரியில் கடமையேற்று தனது சேவையின் இறுதி நான்கு வருடங்களாக சிறப்புறச் சேவையாற்றினார். இவர் பல சவால்களின் மத்தியில் அன்புடன் கூடிய பொறுமையின்மூலம் வெற்றிகண்டார். தனது செயல்திறமையாலும் கல்லூரி சமூகத்தின் அன்பான அரவணைப்பாலும் கல்லூரியின் கல்விப் பெறுபேறுகளும், இணைபாடவிதான செயற்பாடுகளான விளையாட்டுத்துறை, புத்தாக்கப்போட்டி, சக்திவளப்போட்டி, கட்டுரைப்போட்டி, சித்திரப்போட்டி எனப் பல போட்டிகளில் தேசியமட்டம் வரை வெற்றி பெறுவதற்கு வழிவகுத்தது. இவரது சேவை கல்வித்துறையில் மட்டுமல்லாது பொதுச்சேவையிலும் சிறப்புற அமைந்து வருகின்றது.

மணிவிழாக்காணும் இவரது ஓய்வுக்காலம் சீரும் சிறப்புடனும் அமைய "கிருபாகரசிவசுப்ரமணிய சுவாமிகளை வேண்டி அவர் ஆற்றிய சேவைகளுக்கு எமது ஆசிரியர் நலன்புரிக்கழகத்தின் சார்பில் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பணிநிறைவெய்தும் காலை பணிவுடன் வாழ்த்துகின்றோம்"



**கலாபூஷணம் கு. சரவணபவானந்தன் J.P.**
மேனாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
வேலணை.

மணிவிழாக் காணும் நாளில் மாதவம் செய்தீரையா
பணிதனைச் சேவையாக பாங்குடன் ஆற்றி நின்றீர்
அணியெனக் கல்வியாளர் ஆர்வமாக விழாவெடுத்து
பணிநிறைவெய்தும் காலை பணிவுடன் வாழ்த்துகின்றோம்.

வன்னியில் சேவையேற்று வவுனியா மண்ணில் தொட்டு
பின்னரும் முத்துத்தம்பி கல்வியில் முகிழ்த்து நின்று
தன்னிகரில்லாச்சேவை தளைத்திட ஆசிரிய ஆலோசகராகி
நுண்ணிய அறிவினூடே நுகர்ந்திட வைத்தீர் கல்வி.

கல்வியங்காடு இந்து கவினுரு சோலையாக்கி
துல்லியமாகப் புலமைப் பரீட்சையில் துலங்க வைத்து
வல்லவன் ஞானகாந்தன் வடித்திடு வார்த்தை கண்டு
மெல்லவே இந்து ஆரம்பபள்ளியில் மேன்மை கண்டார்.

இந்துவின் கல்வி ஓங்கி இலங்கிட மகுடம் சூட்டி
சிந்தனை செய்து கல்வி சிறந்திட திட்டம் தீட்டி
விந்தையாய் புலமைப்பரீட்சையில் சித்தி நூறினைத்தாண்டி
சிந்தியே உழைத்த நாளும் சிறப்புடன் நினைவில் நிற்கும்.

மத்திய கனகரெத்தின மகாவித்தியாலய அதிபராகி
நித்திய சேவையங்கு நிலைத்திட பெயரும் வைத்து
கொக்குவில் இந்துதன்னில் கொண்டிடு பற்றினாலே
சொக்கிட வைத்தீர் கல்வி சோர்விலா மேன்மையாலே.

மனையறம் சிறக்கவாழி
மாண்புடன் நிதமும் வாழி
இணையுடன் நீடு வாழி
இல்லறம் சிறக்க வாழி
வினைத்திறன் தொடர்ந்து வாழி
விளங்கிடு சேவை வாழி
அணைத்திடு உள்ளம் வாழி
ஆண்டுகள் நூறாய் வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணைமிக்க கல்வியாளன்



**வி. ஸ்ரீசக்திவேல் J.P.**
முன்னாள் தவிசாளர்,
யாழ். மத்தியஸ்தர் சபை.

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டில், அன்ன யாவிலும், புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு அறிவு புகட்டல் என்ற பாரதியார் வாக்குக்கிணங்க திரு. வேலுப்பிள்ளை ஞானகாந்தன் அவர்கள் ஆசிரியப்பணியே அறப்பணி என ஏற்று கருணைமிக்க கண்ணியமான ஆசிரியரானார். பின்னர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்று, பயிற்சி பெற்று புலமை வாய்ந்த ஆசிரியரானார். இத்துடன் நின்றுவிடாமல் மேலும் தனது கல்வித் தகைமையை விருத்தி செய்ய பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி ஆனார். தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகத்தில் கல்விக்கான டிப்ளோமாவும், கல்வியில் முதுமானிப்பட்டமும் பெற்று தனது கல்வித் தகைமை விருத்தி செய்துள்ளார்.

இவ்வாறு ஆசிரியத் தொழிலில் சுமார் பத்து ஆண்டுகள் கடமையாற்றிக் கொண்டு வருகையில் யாழ். கோட்டக் கல்வி ஆசிரிய ஆலோசகராக நியமிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளின் பின் அதிபர் சேவையில் உள்வாங்கப்பட்டார். பல பாடசாலைகளில் அதிபர் பதவியேற்று, யாழ் இந்து ஆரம்ப பாடசாலையைப் பொறுப்பேற்று அதன் வளர்ச்சியிலும் மாணவர்களின் கல்விப் பெறுபேறுகளிலும் உந்துசக்தியாகச் செயற்பட்டு, பாடசாலைக்கென ஒரு விளையாட்டு மைதானத்தையும் அமைத்துக் கொடுத்த பெருமை அவரையே சாரும். இவ்வாறு கடமை தவறாது அர்ப்பணிப்புடன் கல்விச் சேவையாற்றிய திரு. ஞானகாந்தன் அதிபர் அவர்கள் பழமை வாய்ந்த அரசாங்கப் பாடசாலையான கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு பொறுப்பேற்க அழைக்கப்பட்டார். இவரது காலத்தில் உயர்தர வகுப்பு மாணவர்களின் பெறுபேறுகள் சிறப்பாக அமைந்தன.

எல்லா விடயங்களிலும் விட்டுக்கொடுத்தும், அவரவர் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்தும் ஒரு கௌரவமான அதிபராகத் திகழ்ந்தார். இதனைத் தொடர்ந்து கொக்குவில் இந்துக் கல்லூரியைப் பொறுப்பேற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் எந்த இடர்கள் வந்தாலும் அதனை ஒரு புன்சிரிப்புடன் சமாளிக்கும் ஆற்றல் கொண்ட திரு. ஞானகாந்தனின் மணிவிழா சிறப்புடன் நடைபெற வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக ஆசிரியப்பதவி வகித்தவர்கள் சமூகசேவையில் ஈடுபாடு காட்டுவது மரபு. இந்த வகையில் திரு.ஞானகாந்தனும் சமூகப்பணியிலும், சமய சேவையிலும் தன்னை ஈடுபடுத்தி பாராட்டுப்பெற்றுள்ளது போற்றத்தக்கது.

ஒரு ஆலய மகா கும்பாபிஷேகம் செய்து முடிப்பது இலகுவான காரியமல்ல. அந்த வகையில் பூவரசங்குளம் பாலசுப்பிரமணியர் ஆலய பரிபாலன சபையின் செயலாளராக இருந்து மகா கும்பாபிஷேகம் நடத்தி முடித்தமை மிகவும் பாராட்டுக்குரிய செயல்.

யாழ். அரிமாக்கழகத்தின் உறுப்பினராகவும், தலைவராகவும் சமூகசேவை செய்தது பாராட்டுக்குரியது.

2006ம் ஆண்டு யாழ். மத்தியஸ்தர் சபை உறுப்பினராக எனது நம்பிக்கை மிக்க மத்தியஸ்தராக எப்பிணக்கையும் கருணை உள்ளம் கொண்டு அணுகித் தீர்வு காண்பது அவரின் தனித்துவச் சிறப்பாகும்.


இவரின் சிறப்பான சேவையின் காரணமாக 2016இல் அடியேனுக்கு உதவி தவிசாளராக திரு.ஞானகாந்தன் நியமிக்கப்பட்டார். அவ்வாறு கடமையாற்றிய காலம் பொற்காலமெனலாம். பல பிணக்குகளை என்னுடன் கலந்து சுமுகமாகத் தீர்வுகாண வழிகோலியமையை நன்றிப்பெருக்குடன் நினைவு கூர்கின்றேன்.

இத்தகைய பெருமகனார் மணிவிழாவிற்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மட்டற்ற பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எனது நண்பர் மேலும் பல அறப்பணிகளில் இணைந்து ஓய்வுக் காலத்தை மகிழ்வுடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் உணர்ந்து பணிபுரிந்த பெரியோன்



**கலாபூசணம் சி. சிவதாசன்**
தலைவர், பழைய மாணவர் சங்கம்,
யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

*"தாம் இன்புறுவது உலகு இன்புறுக் கண்டு*
*காமுறுவர் கற்றறிந்தார்"*

கற்றல், கற்பித்தல், நிர்வாகத்திறன் மிக்க பெருந்தகை திரு.வே. ஞானகாந்தன் அவர்கள் தன் சேவைக்காலத்தில் ஆற்றிய அளப்பரிய சேவையை யாரும் மறந்துவிடலாகாது. மணிவிழாக்காணும் பெருமைக்குரிய வித்தகர் தன்னுடைய சேவைக்காலத்தில் எமது கல்விப்பீடமான யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் (ஸ்ரான்லி கல்லூரி) இரண்டு வருட காலம் தடம்பதித்திருந்தார். இந்தக் காலகட்டமானது எமது பாடசாலை வரலாற்றில் பொறிக்கப்படவேண்டிய காலகட்டமாகவே சிறப்புப் பெறுகின்றது.

இந்த இரு வருட காலத்தில் எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக முழு மூச்சாகச் செயற்பட்ட அதிபர் இவராவார். மூடிக்கிடந்த பாடசாலையின் ஆண், பெண் விடுதிகள் இரண்டினையும் சீரமைத்து வெளியிடங்களில் வாழும் மாணவ மாணவிகள் தங்கியிருந்து படிக்க வசதி செய்து கொடுத்தார். "கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி" என்ற பழந்தமிழ் மூதாட்டியின் அறமுணர் சொல்லிற்கிணங்க இப்பணியை நிறைவேற்றியதோடு நின்றுவிடாது மாணவர்களின் விளையாட்டிற்காக பாடசாலையின் மைதானத்தில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை மேற்கொண்டு நிறைவேற்றி வைத்தார்.

கவிதைத் துறையில் ஆற்றல் மிக்கவரான இவர் தமிழில் மற்றவர்களைக் கவரும் விதத்தில் பேசவல்லவர். மாணவர்களோடு, ஆசிரியர்களோடு மட்டுமல்லாது, பழைய மாணவர் சங்க நிருவாகிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகளோடு நேர்முகமாய் தொடர்புகளை ஏற்படுத்தி பாடசாலையின் முன்னேற்றத்திற்கான பணிகளை தன் சேவைக்காலத்தில் நிறைவேற்றி வைத்தமையை நாம் என்றும் மறவோம்.


தமிழ்ப் பஞ்சாங்கத்தின்படி ஒரு மனிதன் எந்த ஆண்டில் பிறந்தானோ அந்த ஆண்டானது திரும்பவும் வரும் ஆண்டே அவனது அறுபதாவது அகவையாகும். அதனை ஒரு சகாப்தம் என்றே கூறலாம். இதனை மணிவிழா என நாம் கொண்டாடுகின்றோம். இந்த ஒரு சகாப்த காலத்தின் பின்னால் மலரும் புதிய சகாப்த காலத்திலும் சகல வளமும் பெற்று விழாவின் நாயகர் வாழ நானும் எமது பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினரும் வாழ்த்துகிறோம்.

*"நல்லநேர் அதிபர் ஞானச்சந்திரன் என்னும்*
*வல்லோன் நலமுற நீடு வாழி"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் கலைஞானச்சுடர்
**திரு.மு. திருஞானசம்பந்தபிள்ளை**
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை,
ஓய்வுநிலை அதிபர்.

*யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் முன்னாள் அதிபர் திரு.வே. ஞானகாந்தன் அவர்களின் மணிவிழா மலர் ஊடாக எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.*

*எமது அன்புக்குரிய மதிப்பார்ந்த வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்கள் ஈழத்தின் சக்திபீடமாக விளங்கும் நயினையம்பதியில் அன்னை நாகபூஷணியம்மன் திருவருட் கடாட்சம் பெற்று வாழ்ந்த வேலாயுதபிள்ளை சிவயோகம் தம்பதிகளுக்கு அருமைப் புத்திரனாக 1957.01.04ஆம் திகதி தோன்றியவர்.*

*இவரின் இளமைக்காலக் கல்வியினை நயினாதீவு மகாவித்தியாலயத்தில் பெற்றபின் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாகியும், ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்தும் நல்லாசிரியனாக வவுனியா பிரதேசத்திலும், யாழ் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்திலும் கடமையாற்றிய பின், யாழ்ப்பாணக் கோட்ட ஆசிரிய ஆலோசகராகக் கடமை புரியும்போது கல்வியங்காடு இ.த.க. பாடசாலையில் 1992-10-09ஆம் திகதியன்று அதிபராகக் கடமையேற்றார். பின்னர் முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தின் அதிபராக இவர் சேவையாற்றிக் கொண்டிருந்தார். யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்குத் தகுந்த அதிபர் ஒருவரை நியமிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டபோது இவரையே தெரிந்து யாழ். இந்து ஆரம்ப பாடசாலைச் சமூகம் இவரை உள்வாங்கியது.*

*1998-01-27ஆம் திகதியன்று யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அதிபரான இவர் 2010-06-15ஆந் திகதி வரை சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அதன் அதிபராக விளங்கினார்.*

*யாழ். குடாநாட்டு மக்களின் இடப்பெயர்வினால் சகலதுறை நிறுவனங்களும் மீண்டு நிலைபெறவேண்டிய காலகட்டத்தில் இப்பாடசாலையின் அதிபராக அமர்ந்த இவர், பாடசாலைச் சமூகத்தினர் அனைவரையும் ஒன்றிணைத்தும் கல்விப்புல நிருவாகக் கட்டமைப்பினரின் உதவி ஒத்தாசைகளுடனும், தனது அயரா முயற்சி உழைப்பு என்பவற்றை அர்ப்பணித்து யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் பௌதிக வளங்களை மிக விரைவாக முன்னெடுத்து உயர்வுக்குக் கொணர்ந்தார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கட்டட வசதிகள், இடப்பற்றாக்குறையை நிவிர்த்திக்கக் காணிக்கொள்வனவு, விளையாட்டு மைதானம், கணினிக்கூடம், நூலகம் போனற் அத்தியாவசிய வளங்கள் ஏற்பட்டன.

இவற்றுடன் ஆரம்ப பாடசாலையின் உச்ச எதிர்பார்ப்பான கற்றல் அடைவாக மிளிரும் 5ம் ஆண்டுப் புலமைப்பரிசில் தேர்விலும் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை இலங்கைத் தமிழ் ஆரம்ப பாடசாலைகளில் முன்னிலைப் பாடசாலையாகக் கணிக்கப்படும் நிலையைக் கல்விக்கூடத்தின் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் நிலைநிறுத்தினார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடைய அதிபராக விளங்கிய இவர், யாவரோடும் அன்புடனும் பண்புடனும் மரியாதையுடனும் பழகும் இயல்பினர். "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்" என்பதை நெஞ்சத்து நிறைவாக உள்வாங்கியவர்.


சைவத்தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப்போற்றும் மண்வாசைன பிறந்த மண் வாசைன இவரிடம் நிறைந்து உள்ளது என்பதே உண்மை. இவர் பிறந்த மண்ணில் தோன்றிய முன்னோர்கள் பலரைப்போல இவரும் மரபுவழிக் கவிதை யாக்கும் ஆற்றலையும் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கது.

பழகுவதற்கு எளியவராக, இனியவராக, நன்னெறியுணர்த்துபவராகச் சமய சமூகத் தாபனங்களுடன் சேர்ந்து சேவை செய்பவராக விளங்கி அகவை அறுபதில் தமது ஆசிரிய அதிபர் தொழிலில் இருந்து ஓய்வுநிலையடையும் மதிப்பார்ந்த அன்பன் ஞானகாந்தன் அவர்கள் ஓய்வுக்காலத்தில் தமது குடும்ப உறுப்பினர்களோடும், சமூகத்தோடும் நல்லுறவாடி, நற்பணியாற்றி மனமகிழ்வு பெற்று, உடல் நலத்துடன் இன்னும் பல்லாண்டு வாழ அன்னை நாகபூஷணியம்பாள் அருள்பாலிக்க வேண்டுமெனப் போற்றி வணங்கி வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க பல்லாண்டு! வாழ்க நலமுடன்!



**ரகு, சுகன்யா, றொஷான் தேவராசா**
(கனடா)

நாம் கல்வி கற்றுத் தேர்ந்த எமது கொக்குவில் இந்துக் கல்லூரியில் தற்போதைய அதிபராகக் கடமையாற்றி தனது 60ஆவது அகவை நிறைவில் அப்பணியில் இருந்து ஓய்வுபெற்று மணிவிழா காணவிருக்கும் மதிப்பிற்குரிய திரு.வே. ஞானகாந்தன் அவர்களை மனமார வாழ்த்துவதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

கல்லூரிக்கு அவர் ஆற்றிய அரும்பெறும் சேவைகளைப் பாராட்டி அவரை கௌரவிக்குமுகமாக நடத்தப்படும் இம்மணிவிழாவை முன்னிட்டு வெளியிடப்படவிருக்கும் மணிவழா மலரில் எமது வாழ்த்துச் செய்தியும் இடம்பெற வாய்ப்பளித்தமைக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு.ஞானகாந்தன் அவர்கள் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றதன் பின்னரே அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும், தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பமும் எமக்குக் கிடைத்தன. இன்றைய விழா நாயகனைப் பற்றிய நீண்டகாலப் பார்வை எமக்கு இல்லையெனினும், அவருடன் பழகிய அக்குறுகிய காலத்திலேயே அவருடைய பண்புகள், திறமைகள், சேவைகள் ஆகியவை பற்றிக் கேள்வியுற்றும், கல்லூரிக்குச் சென்றபோது நேரில் பார்த்தும் அறிந்து கொண்டோம்.

நாம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று வெளியேறிய பின்னர், நீண்ட காலத்துக்கு அப்பால், பழைய மாணவர் என்ற ரீதியில் மீண்டும் கல்லூரியுடன் இணைந்து கொண்டோம். இக்காலப்பகுதியில் மாணவர்களின் நலன்கருதி பல திட்டங்களை முன்வைத்தோம். முன்னாள் அதிபர்களைத் தொடர்ந்து அத்திட்டங்களை திரு. ஞானகாந்தன் அவர்களும் திறம்பட நடைமுறைப்படுத்தி வந்தவர் என்றால் அது மிகையாகாது. குறிப்பாக, தேவராசா இல்லம் - தேவராசா சதுக்கம் ஆகியவற்றில் நடைபெற்று வரும் செயற்பாடுகளே இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், எம்மை வளர்த்தெடுத்த எமது கல்லூரித் தாயைப் பார்வையிடுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு மிக நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நாம் அண்மையில் குடும்பமாக தாயகம் சென்றிருந்தோம். அங்கு நமது கல்லூரிக்குச் சென்றிருந்தபோது, நாம் சற்றும் எதிர்பாராத வகையில் பல வரவேற்பு நிகழ்வுகளை மணிவிழா நாயகனும், அதிபருமான திரு. ஞானகாந்தன் அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார். அவருடன் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், கல்லூரிச் சமூகம் என எல்லோரும் இணைந்து இவ்வரவேற்பு நிகழ்வுகளை வழங்கி எம்மை வியப்பிலாழ்த்தியமை எமது வாழ்க்கையில் என்றும் மறக்கமுடியாததொன்றாகும். எமது இன்றைய விழா நாயகன் உட்பட, அனைத்து அன்புள்ளங்களுக்கும் நாம் நன்றியுள்ளவர்களாக இரும்போம்.

மணிவிழா காணும் திரு. ஞானகாந்தன் அவர்கள், அவரது துணைவியார் கேதாரபூரணி, மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி காலம் வாழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Felicitation



**Lion A.C. Loyola**
*President 2016/2017*
*Lions Club of Jaffna.*

Indeed, I have great to pen this felicitation to Mr.V.Gnanakanthan, Past President of Lions Club of Jaffna in the Lionistic Year 2010/2011. I have known him and his dedicated services to education and social welfare well before he joined the Lionism. He joined as a member of Lions Club of Jaffna in 2005 and became a service partner of Lions Clubs international.

Since the year 2006 to date he serves as a Board of Director of Lions Club of Jaffna. During his president ship in the year 2010/2011 our club carryout many service projects to the needy and the President of the International Association of Lions Clubs and the District Governor, 306B1 have awarded Appreciation Awards to Mr. Gnanakanthan in recognition of his services and leadership. Further in the particular year our club was identified as well administrated club. His leadership qualities and leadership style guide me even today to perform my duties as current President of Lion Club of Jaffna.

He earned his leadership qualities through his education and 39 years of teaching services including 26 years of principal services. He also served in key positions in various social service organization and as Justice of Peace by which he reached many people.

While I pray a peaceful and prosperous retirement life to Mr. Gnanakanthan, I hope he will continue to contribute much in serviing the needy people with his expertise and experience.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத்துவத்தால் உயர்ந்த செம்மல்



**திரு. சு. தியாகலிங்கம்**
ஓய்வுநிலை அதிபர்,
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

*"அன்புடைமை ஆன்றகுடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு*

பிறர்மேல் அன்பு உடையனாதலும் உலகத்தோடு அமைந்த குடியின்கண் பிறத்தலும் ஆகிய இவ்விரண்டும் ஒருவருக்கு பண்புடைமை என்று உலகத்தார் சொல்லும் நன்னெறி என்பது வள்ளுவர் வாக்காகும்.

இவற்றைத் தனது வாழ்வில் அணிகலனாகப் பூண்டு கல்விச் சேவையில் தடம்பிடித்த அதிபர் திரு. வேலுப்பிள்ளை ஞானகாந்தன் 2017.01.04ஆம் திகதி தனது அகவை அறுபதை அடைந்து ஓய்வுபெறுகின்றார். 1978.03.17இல் ஆசிரியர் சேவையில் இணைந்து, கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடன் மிளிர்ந்த நல் ஆசிரியராக செயலாற்றி நன்மதிப்பைப் பெற்றவர். இத்தகைய சேவையின் மகத்துவத்தாலும், தன்னலம் கருதா உள்ளத்தினாலும் தொழில்வாண்மைத்துவத்தின் உயர்வினாலும் ஆசிரிய ஆலோசகராக உயர்வுபெற்று, தொடர்ந்து அதிபராகத் தன்னைத் தகுதியுடையவராக்கிக்கொண்டவர்.

அதிபர் சேவையை வகை 3 பாடசாலையில் ஆரம்பித்து வகை 1யுடீ பாடசாலை வரை பணியாற்றி வெற்றிகண்டவர். இவரது வெற்றிக்கு அப்பாடசாலைகளின் ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர் போன்ற அனைவரையும் அரவணைத்துச் செல்லும் இவரது ஆளுமைப்பண்பே எடுத்துக்காட்டாக விளங்கியது எனலாம்.

இவர் அதிபராகக் கடமையாற்றிய பாடசாலைகளில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் நிர்வாகச் செயற்பாடுகளிலும் மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளிலும் ஆசிரியர்களுடன் இணைந்த சேவைகளிலும், பாடசாலைச் சமூகத்தினரின் அனுசரணைகளிலும் அதிபரும், யானும், ஏனையோர் கூறுவது போல இராமன் இலட்சுமணன் போன்ற ஒரு சகோதரத்துவத்துடன் பாடசாலையின் வளர்ச்சியிம் உயர்ச்சியிலும் பணியாற்றி காலம் பாடசாலை வரலாற்றில் ஒரு பொற்காலமாகும். பாடசாலைகளின் இணைச் செயற்பாடுகளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5ளு செயற்றிட்டம், விளையாட்டு மைதானக் கொள்வனவு, வகுப்பறைச் செயற்பாடுகளில் நவீன தர உள்ளீடுகள், புலமைப்பரிசில் பரீட்சை வழிப்படுத்தற் செயற்பாடுகள் போன்றவை பாடசாலையின் தடம்பதித்த விடயங்களாகும். இத்தகைய வளர்ச்சிப்படிகளின் நர்வாக அதிகூடிய புள்ளிகளைப் புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்று அகில இலங்கை ரீதியில் "ஜப்பான்" கல்விச் சுற்றுலாவுக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு உன்னதமான சேவையை எமது மண்ணின் குழந்தைகளுக்கு 13 வருடங்கள் ஆசிரிய சேவை மூலம் 26 வருடங்கள் அதிபர் சேவை மூலமும் வழங்கிய பெருமை இவருக்குரியதாகும். இவரது இச்சீரிய சேவையின் சிறப்பினால் பல சமூக சேவைகள் புரிவதற்கான வாய்ப்புகளும் நாடிவந்தமை இவரது சேவையின் மகத்துவத்திற்கு எடுத்துக்காட்டாகும். இச்சேவைகளையும் தன்னலம், தன்மதிப்பு கருதாது பொதுநோக்கோடு பணியாற்றி வெற்றிகண்டவர். இந்த வகையில்

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கமைய அன்புடைமை, பண்புடைமை, புத்தியுடைமை என்பன இவரது சிறப்பிற்கும் இல்வாழ்வின் மக்கட் செல்வங்களின் உயர்விற்கும் நலத்திற்கும் வித்திட்டன எனக் கூறுவது சாலப்பொருத்தமுடையதாகும்.

இவ்வாறாக பாடசாலைகளுக்கும் சமூகத்திற்கும் ஆற்றிய உயர்ந்த இவரது சேவைகளைப் பாராட்டிக் கொள்வதுடன் அவர் குடும்ப சேமத்துடன் பல்லாண்டு காலங்கள் வாழ்ந்து, மேலும் பல சமூகப்பணிகள் ஆற்றி மனமகிழ்வுடன் வாழ்வதற்கு எல்லாம்வல்ல நயினை நாகபூசணி அம்பாளின் பாதங்களைப் பணிந்து இதயபூர்வமாக வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் கலங்கரை விளக்கு ஞானா!



**நா. சுந்தரராசா**
ஓய்வுநிலை கிராம அலுவலர்
முன்னாள் செயலாளர் - பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

இந்துமாக் கடலின் முத்தென விளங்குவது இலங்கைத் தீவு. இத்தீவின் தலையாய விளங்கும் யாழ்ப்பாணத்தின் கலங்கரை விளக்குகளாகக் காணப்படும் சப்த தீவுகளின் தங்கத்தீவாய் அழியா அழகுடனும் புகழுடனும் அழகொளி காட்டியிருப்பது தான் அன்னை நாகேஸ்வரி வாசம் செய்யும் நயினாதீவு எனும் புண்ணிய பூமி இந்தப் பூமியில் கற்றறிந்து பல அறிஞர்கள், புலவர்கள், கல்விமான்கள், நிர்வாகிகள் என பலர் வாழ்ந்து வந்தனர்.

இந்த வரிசையிலேதான் பெரியார் வேலாயுதபிள்ளை சிவயோகம்மா தம்பதியினருக்கு 1957ம் ஆண்டு தை மாதம் திரு. ஞானகாந்தன் எனும் நாமம் கொண்ட நல்லவர் பிறந்தார். இவர் தமது இளமைக் காலத்திலேயே பாடசாலைக் காலங்களில் நல்லொழுக்கம், பணிவு, தெய்வபக்தி என்பவற்றில் சிறந்து விளங்கினார். அதனால் அவர் தனது எதிர்காலத்தை கல்விப்புலம் சார்ந்த ஈடுபாட்டோது தன்னை வளர்த்துக் கொண்டார்.

இவர் தனது ஆசிரியத் தொழிலை 17.3.1978இல் ஆரம்பித்து 03.01.2017 வரையான 39 வருட காலப்பகுதியாய் ஆசிரியராக, ஆசிரிய கல்வி ஆலோசகராக, அதிபராகக் கடமையாற்றி 04.01.2017ல் தமது 60ஆவது அகவையில் மணிவிழா கொண்டாடும் காலம்வரை இவர் தான் சேவை செய்த பாடசாலைகளின் கல்வி முன்னேற்றத்துக்காக உழைத்தார். இவரது கல்விச்சேவையில் இவர் அதிபராகக் கடமையாற்றிய காலங்களில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மற்றும் யாழ். கனகரெத்தினம் மகாவித்தியாலயம், யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி என்பன ஒரு பொற்காலமாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் ஏறக்குறைய 12 வருடங்களுக்கு மேலாக இருந்து அதிபராகப் பணி செய்தவர் இந்தக் காலத்தில்தான் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினராக பல வருடங்களும் சங்கத்தின் செயலாளராக இரு வருடங்களும் சேவை செய்ய வாய்ப்புக் கிடைத்தது. இக்காலப்பகுதியில் திரு. ஞானகாந்தன் அவர்கள் இந்தப் பாடசாலையில் மாணவர் நலன்களிலும் பாடசாலையின் பௌதீக வளங்களை அபிவிருத்தி அடையச் செய்வதில் முக்கிய பங்காற்றினார். இப்பாடசாலையை மாவட்டம், மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதையும் தாண்டி தேசிய மட்டம் வரை சென்று ஆரம்பப் பாடசாலைகளின் ஒரு முன்னோடிப் பாடசாலையாக ஆக்கிய பெருமை இவரையே சாரும்.

இவரது காலத்தில் இந்து ஆரம்பப் பாடசாலையில் புதிதாக இருமாடிக் கட்டிடங்கள், நவீன வசதியான மலசலகூடம், சகல வசதிகளுடனான நூலகம், மாணவர்களுக்கான கணனிக்கல்வி, கற்றல்களுக்கான வசதிகள், புதிய அதிபர், உப அதிபர்களுக்கான ஆரோக்கியமான அலுவலகங்கள் என்பன ஏற்படுத்தப்பட்டது. இது போன்ற மாணவர் மாணவர் கல்வி கற்றல் கற்பித்தலில் புதிய புதிய உத்திகளை பயன்படுத்தி மாணவர்களுக்கான கல்வி ஊட்டலை நெறிப்படுத்தினார். இதன் காரணமாக வருடந்தோறும் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் மாவட்டம், மாகாணம், தேசியமட்டத்தில் முன்னிலை வகிக்கக்கூடியதாகவும் ஆரம்பக் கல்வியில் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார். இதன் காரணமாக இரு தடவைகள் இப்பாடசாலை மாணவர்கள் ஜப்பான் சென்று வரும் வாய்ப்பும் கிடைக்கப்பெற்றது. ஜெய்கா நிறுவனமும் இப்பாடசாலையின் கற்றல் கற்பித்தல், ஒழுக்கம், முகாமை வளச் செயற்பாடுகள் போன்ற நடவடிக்கைகளை ஆரம்பித்து மாதிரிப் பாடசாலைக்கான விருது வழங்கிக் கௌரவித்தது.

திரு. ஞானகாந்தன் அவர்களது கல்விச் செயற்பாட்டுக்கு அவரது அணுகுமுறைகள், தொடர்பாடல் என்பன கைகொடுத்து உதவியது. அவர் பாடசாலைப் பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் மற்றும் கல்வி அதிகாரிகள், மாணவர்கள், ஆசிரியர்களுடனும் மிகவும் நன்புரிமையுடனும் அன்பாகவும் பண்பாகவும் பேசி காரியங்களைச் சாதிக்கும் பக்குவமுடையவர். இதன் காரணமாக இவர் தனது காலத்தில் இப்பாடசாலைக்கென மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டுக்கான மைதானத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் பாடசாலைக்கருகில் ஒரு கோடி ரூபா பெறுமதியான காணியை வாங்கி ஒரு மைதானத்தினையும் அமைத்துள்ளார். அதுமட்டுமல்லாமல் பாடசாலைச்சூழலை கல்விச் செயற்பாட்டுக்கு ஏற்றற்போல் பேணி பசுமையான நிலையில் அழகுபடுத்தியும் எமது பாரம்பரிய மருத்துவ மூலிகைத் தோட்டத்தை ஏற்படுத்தியும் மாணவர் நலன்களில் அதிக அக்கறையோடு செயற்பட்டார்.

மொத்தத்தில் இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர் ஞானகாந்தன் அவர்கள் மாணவர்களை பரீட்சைகயில் சித்தி எய்த வைத்தல் என்பதற்கும் மேலாக இப்பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளைகள் ஒழுக்கம், பண்பு, கடமையுணர்வு என்பவற்றோடு ஆன்மீகச் செயற்பாடுகளிலும் ஆர்வம் கொண்ட நல்ல ஒரு பண்பாடுடைய சைவத்தமிழ் பாரம்பரியமுடைய ஆரோக்கியமான பிரஜைகளாக வளர்ப்பதில் இவர் தற்கால நாவலராகச் செயற்பட்டவர் என்பதனை என்னால் கூடிமுடியும்.

அதிபர் அவர்கள் இந்து ஆரம்பப் பாடசாலையில் இருந்து யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திற்குச் சென்று அங்கு தமது கடமையாற்றியிருப்பினும் அக்குறுகிய காலத்தில் பிள்ளைகளின் கல்வி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைச் சூழல் மற்றும் கட்டிடம், விளையாட்டு போன்ற நடவடிக்கைகளில் முன்னேற்றம் காணச் செயற்பட்டார். பின்பு தமது அதிபர் சேவையின் இறுதிக்கால கட்டத்தில் 5 வருடங்களாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறும் வரை அக்கல்லூரியில் கல்விச் செயற்பாடு, விளையாட்டு, கலை, கலாசார நடவடிக்கைகள் என்பவற்றிலும் மாணவர் ஒழுக்கங்களிலும் அதிக அக்கறையுடன் செயற்பட்டு கல்லூரியின் முன்னேற்றத்துக்காக உழைத்தவர், அதில் வெற்றியும் கண்டவர். இன்று கல்லூரி ஒரு தேசியப் பாடசாலையின் தரத்திற்கு உயர்வடைந்தமையைக் காணக்கூடியதாக உள்ளது.

திரு.ஞானகாந்தன் அவர்கள் தமது கல்விச் செயற்பாட்டோடு மட்டுமல்லாமல் தான் வாழ்ந்த சமூகத்தோடும் ஒன்றி பல சமூகப்பணிகளையும் நலத்திட்டங்களையும் செய்து வந்துள்ளார். குறிப்பாக யாழ். அரிமாக்கழகம், யாழ். மத்தியஸ்தர் சபை, சமாதான நீதிவான் போன்ற பதவிகளின் ஊடாக மக்களிடையே நீதி, நியாயம், சமாதானத்துடன் இணக்கப்பாடு, புரிந்துணர்வை வளர்ப்பதில் முன்னின்று உழைத்தவர். அரிமாக் கழகத்தின் ஊடாக நலிந்த மக்களுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் விசேட தேவை உடையவர்களுக்கும் அவர்களது தேவையறிந்து நிறுவனத்தினூடாக உதவிகளைச் செய்தார். இத்தோடு இவர் நல்லை தமிழ்ச்சங்கம், ஆரிய பாஷாவிருத்திச் சங்கம், பாரம்பரிய கலை மேம்பாட்டுச் சங்கம் போன்றவற்றில் உறுப்பினராக இருந்து தமிழுக்கும், இலக்கியத்துக்கும், சைவத்திற்கும் அருந்தொண்டாற்றியவர் என்பதில் நான் அவரைப் பெருமையுடன் பாராட்டுகின்றேன்.

இதற்கும் மேலாக இவரது இந்தச் சேவைகளைச் செய்வதற்காக தானும் ஒரு முன்பள்ளி பொறுப்பாசிரியராக இருந்து செயற்பட்டுக்கொண்டு குடும்பப் பொறுப்பையும் சுமந்து கொண்டு தமது கணவரின் பணிகளை எதுவித இடையூறின்றிச் செய்வதற்கு இன்முகத்துடன் இடம்கொடுத்த அவரது மனைவி அன்னை கேதாரபூரணிக்கும் எனது நன்றி கலந்த பாராட்டுக்களைக் கூறிக் கொள்கின்றேன்.

திரு. ஞானகாந்தன் அதிபர் அவர்கள் தமது அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவரது கல்விப்புலம் சார்ந்த நிலையிலும் மற்றும் தமிழ் இலக்கியம், சமயம் சமூகம் சார்ந்த சேவைகளையும் தொடர்ந்து செய்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து புகழ்சேர்க்க எல்லாம்வல்ல நயினை நாகபூஷணி அம்மனைப் பிரார்த்தித்து என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரோடும் ஒப்பிடமுடியாத சேவையாளன்



**கே.வி. குணசேகரன்**
முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்.

திரு.வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்களுடன் 2005ஆம் ஆண்டிலிருந்து நெருங்கிப் பழகவேண்டிய சந்தர்ப்பம் உண்டானது. நான் நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுச் சென்றபோது இன்முகம் காட்டி வரவேற்றதோடு தேவையான உதவிகள் அனைத்தையும் நான் கேட்காமலே செய்து தந்தார். சிரித்த முகத்துடன் எல்லோரிடமும் கலகலப்பாகப் பேசிப் பழகுவார். அத்துடன் யாழ்ப்பாணம் இந்துப் பாடசாலையின் உச்ச வளர்ச்சிக்குக் காரணகர்த்தாவாக இருந்தார்.

அவர் நல்லூர்க்கோட்ட அதிபர் சங்கத் தலைவராக 2005ஆம் ஆண்டு தொடக்கம் நான் ஓய்வுபெறும் வரை (2009) பொறுப்பாக இருந்து நல்லூர்க் கோட்டப் பாடசாலைகள் அனைத்திற்கும் பெரும் பெறும் உதவிகள் செய்தவர். 2005ஆம் ஆண்டில் இருந்து 2009ம் ஆண்டு வரை தரம் ஐந்து புலமைப்பரிசில் வினாத்தாள்களைத் தனது ஆசிரியரான திரு.வே. அன்பழகனைக் கொண்டு தயாரித்து நல்லூர்க் கோட்டப் பாடசாலைகள் அனைத்திற்கும் இலவசமாகக் கொடுக்க வசதி செய்தார்.

கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள், தமிழ்த்தினப் போட்டிகளின் போது கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு மதிய உணவும் சிற்றுண்டி வகைகளையும் கொடுப்பதற்கு உதவியவர். விழாக்கள் என்று வந்துவிட்டால் அது பாடசாலையாக இருந்தாலென்ன, கோட்டமாக இருந்தாலென்ன தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயலாற்றுபவர். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையை இலங்கையில் உள்ள முதற்றரமான பாடசாலைகளுக்கு நிகராக உருவாக்கியவர். அதன்பின் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்று அதன் வளர்ச்சி குன்றாமல் பாதுகாத்தார். அவரின் காலத்தில் அப்பாடசாலையில் நல்ல பெறுபேறுகள் கிடைத்தன.

நல்ல மொழியாற்றல் உள்ளவர். சமயப்பற்று மிக்கவர். நான் சமயத் தத்துவங்களுக்கான கதைகளை எழுதியபோது திருவருட்பயன் என்ற நூல் க.பொ.த. சாதாரண பரீட்சைக்குரிய நூல். அதை இலகுபடுத்திக் கதைகளாக எழுதுங்கள் என்று கூறி அதற்கான உதவிகளைச் செய்தார். பின் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திருவருட்பயன் கதைகளை எழுதி வெளியிட்டபோது அதை நல்ல முறையில் விமர்சித்ததோடு ஒரு தொகை நூல்களை வாங்கி மாணவர்களுக்குக் கொடுத்தார். அந்நூல் திருவாவடுதுறை ஆதீனத்தால் மிகச் சிறந்த நூல் என்றமையால் பெற்றது. அதற்குக் காரணமானவர் திரு.வே. ஞானகாந்தன் ஆவார்.

கல்விப் பணியைத் தவிர ஏராளமான பொதுப்பணிகளையும் அர்ப்பணிப்புடன் செய்த திரு.வே. ஞானகாந்தன், தனது ஓய்வு காலத்திலும் கல்விப் பணியிலும் பொதுப் பணியிலும் செய்ய எல்லாம்வல்ல நாகபூஷணி அம்மன் அருளவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தம்பி ஞானகாந்தன்



**திரு. காசிப்பிள்ளை தவராசா**
ஓய்வுநிலை அதிபர்,
யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

"நாகதீப" என்ற இலங்கை மக்கள் எல்லோராலும் மதிக்கப்படும் தீவுகளில் ஒன்றாகிய நயினாதீவு பெரும் கல்வியியலாளர்களை எமக்களித்த தாய் ஆவாள். நாகபூசணி அம்பாளின் அருள் ஒளி வீசும் அரள்பூமி ஆகும். இத்தாயின் மடியிலே வேலாயுதபிள்ளை சிவயோகம்மா தம்பதியர்க்கு 04.01.1957ம் ஆண்டு திரு. ஞானகாந்தன் அவர்கள் மகனாகப் பிறந்தார். நயினை அன்னையின் மடியிலே தவழ்ந்து எழுந்து ஓடி விளையாடி மகிழ்ந்த இவர் பாடசாலைப் பராயத்தை அடைந்தார்.

தமது கல்வியை நயினாதீவு மகாவித்தியாலயத்தில் கற்றுக் கொண்டார். தொடர்ந்து 17.03.1978இல் வ/ பறையனாளங்குளம் அ.த.க. பாடசாலையில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்று தனது கல்விப் பணியினை ஆரம்பித்தார். சிறந்த பக்திமானாகியஇவர் இங்கு கடமையாற்றும் காலத்தில் பூவரசங்குளம் பாலசுப்பிரமணியர் ஆலய பரிபாலன சபை செயலாளராக இருந்து 1986ம் ஆண்டு ஆலய கும்பாபிஷேகத்தை நடாத்தி முடிப்பதற்கு முன்னின்று உழைத்தார். மூன்று வருடங்கள் தமது முதல் நியமனப் பாடசாலையிலேயே கடமையை நிறைவேற்றிய இவர் 12.01.1981இல் வ/ பூவரசங்குளம் மகாவித்தியாலயத்தில் தனது கடமையைப் பொறுப்பேற்று பணிபுரியும் காலத்தில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய மாணவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் சிறந்த ஆசிரிய மாணவராக விளங்கிய இவர் உதவி சிரேஷ்ட மாணவ தலைவராக எல்லோராலும் தெரிவு செய்யப்பட்டுச் செயற்பட்டார். ஆசிரிய பயிற்சியை முடித்துக் கொண்ட இவர் தனது ஆசிரிய சேவையைத் தொடர்ந்து வ/பூவரசங்குளம் மகாவித்தியாலயத்திலேயே தொடர்ந்தார்.

இக்காலப்பகுதியில் 27.12.1986 அன்று தனது சொந்த ஊரைச் சேர்ந்த கேதாரபூரணி என்னும் பெண்மணியைக் கரம்பிடித்தார். இவர்களின் இல்லற வாழ்வின் இனிய முத்துக்களாக இரணைப் பெண்குழந்தைகளையும் ஒரு ஆண் மகனையும் பெற்று இன்புற்றனர். இக்காலத்தில் யா/முத்துத்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். தொடர்ந்து நான்கு ஆண்டுகள் இங்கு கடமையாற்றிய இவர் *05.06.1991 - 08.10.1992* வரை யாழ். கோட்ட ஆசிரிய ஆலோசகராக்க கடமையாற்றினார். கல்விப்பணியாற்றிவரும் காலத்திலே தனது ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதிலும் கவனம் செலுத்தினார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் B.A. பட்டத்தினை பெற்றுக் கொண்ட இவர், தொடர்ந்து Dip. in.Edu, M.Edu பட்டங்களையும் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து இலங்கை அதிபர் பரீட்சையில் சித்திபெற்ற *09.10.1992* அன்று யா/ கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபராகக் கடமைப் பொறுப்பேற்க வந்த காலப்பகுதியிலேயே எனக்கு தம்பி ஞானகாந்தன் அவர்களோடு பழக்கம் ஏற்பட்டது. அன்று யா/கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபராக இருந்த நான் எனது பொறுப்புக்களையும் கடமைகளையும் அவரிடம் ஒப்படைத்து யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். அன்றிலிருந்து அவரும் நானும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு சகோதரர்களாகப் பழக ஆரம்பித்தோம்.

இடப்பெயர்வின் பின் மீளவும் குடியமர்ந்த காலப்பகுதியில் தான் கடமையாற்றிய பாடசாலையான யா/ முத்துத்தம்பி மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றி வரும் காலப்பகுதியில் மீண்டும் எனது பொறுப்புக்களையும் கடமைகளையும் அவரிடமே ஒப்படைக்கும் சூழ்நிலை ஏற்பட்டமை எனது வாழ்வில் மறக்கமுடியாத ஒரு அனுபவம் ஆகும். மீண்டும் *28.01.1998*இல் யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெறும் காலத்தில் அப்பாடசாலையின் அதிபர் பதவி, பொறுப்புக்கள், கடமைகள் அனைத்தையும் மீண்டும் அவரிடமே ஒப்படைத்து ஓய்வுபெற்றது எனது மனதிற்கு மிகவும் திருப்தியான விடயமாக அமைந்தது. ஏனெனில் நான் இவருடன் பழகிய காலப்பகுதியில் இவரது ஆற்றல்களையும் திறமைகளையும் அறிந்திருந்தேன்.

யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபராகக் கடமையேற்ற இவர் பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வந்ததுடன் அகில இலங்கை ரீதியாக பாடசாலையை முதன்நிலையில் பிரகாசிக்கச் செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்காக ஆசிரியர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து செயற்பட்டதுடன் அதில் வெற்றியும் கண்டார். இக்காலப்பகுதியிலே அதிபர் தரம் 1 பரீட்சையில் சித்திபெற்று *16.06.2010* அன்று யா/கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயத்தின் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு இரண்டு வருடங்கள் அதிபராகக் கடமையாற்றிய இவர் 10.10.2012இல் இருந்து யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அதிபர் பொறுப்புக்களைச் செவ்வனே நிறைவேற்றும் காலப்பகுதியில் தனது குடும்பப் பொறுப்புக்களையும் நிறைவேற்றினார். தனது இரண்டு செல்விகளுக்கும் பொருத்தமான மணவாளர்களைத் தெரிவு செய்து திருமணம் செய்து வைத்தார். இரண்டுபேரக் குழந்தைகளையும் கண்டுமகிழ்ந்தார்.

பிறருக்குச் சேவை செய்வதை விரும்பி ஏற்றுச் செயற்படும் பண்பு எல்லோருக்கும் வருவதில்லை. ஒரு சிலரிடமே இந்தப் பண்பு தலைதூக்கி நிற்கும். அந்த ஒரு சிலரில் தம்பி ஞானகாந்தனும் ஒருவராவார். யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுக் கழகத்தின் பொருளாளராக, நல்லைத் தமிழ்ச்சங்கத் தலைவர். யாழ். ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராக மற்றும் பரீட்சை உதவிச் செயலாளர் என இவரது சேவைகள் எண்ணிலடங்கா. இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல 28.05.2008 முதல் அகில இலங்கைச் சமாதான நீதவானாக நியமனம் கிடைத்தமை மிகவும் பொருத்தமாகும்.

அமைதியான சுபாவமும் கவியாற்றலும் நிறைந்த இவர் தனது சேவைக்காலத்தில் செய்த சேவைகளை ஓய்வுக் காலத்திலும் தொடர்ந்தும் செய்யவேண்டும் என்பது எனது அவா. மேலும் தன் மனைவி மக்கள் பேரப்பிள்ளைகளுடன் நீண்டகாலம் இனிது வாழ எல்லாம்வல்ல நயினை நாகபூசணி அம்பாளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

**யா/கனகரத்தினம் ம.ம.வி.**
பாடசாலைச் சமூகம்.

அறுபதாம் அகவை தன்னில் அகமகிழ்ந்திடும் இனிய நாளில் யா/ கனகரத்தினம் ம.ம.வித்தியாலய சமூகத்தினராகிய நாம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். புண்ணியபூமி நயினையம்பதியில் அவதரித்து கண்ணியமான ஆசிரியப்பணியில் இணைந்து 39 வருடங்கள் முழுமதியாய்ப் பிரகாசித்தீர்கள். ஆசிரியப்பணியில் 13 ஆண்டுகளும் 26 ஆண்டுகள் அதிபர் சேவையிலும் அரிய பணியாற்றியுள்ளீர்.

எங்கள் கல்லூரியில் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் ஆற்றியபணி அளவிடற்கரியது. 16-06-2010இல் காலப்பதித்தீர். 09.10.2012இல் விடை பெற்றீர். போரின் வடுக்கள் ஆறாமல் இருந்த கல்லூரியின் மைதானம், மாணவர் விடுதிகள், கலைக்கூடம் என அனைத்தையும் புனரமைத்து புத்துயிரளித்தீர். அன்பு நிறைந்த ஆளுமைக்குள் சிறப்பாகக் கட்டியாண்டீர்கள். ஆசிரிய சமூகத்தையும், மாணவர், பெற்றோர் அனைனவரையும் அரவணைத்து சிறப்பாக வழிநடத்தினீர்கள். விளையாட்டுப் போட்டி, தமிழ்த்தினப் போட்டி என்பவற்றில் தேசியமட்ட சாதனைகளுக்கு வழிகாட்டினீர்கள்.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுடன் கல்விச் செயற்பாடுகளிலும் கல்லூரியைக் கண்ணெனக் காத்தீர்கள். உங்கள் ஓய்வுக்காலம் சிறந்திட வேண்டும். நீங்கள் செய்த அரியபணிகளில் மிளிரும் மாணவர் பரம்பரை உங்கள் சேவையை நினைவிலிருத்தி நன்றி பாராட்டும். "பணியுமாம் என்றும் பெருமை" என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க பெரும் பண்பாளர் நீங்கள் பணிவுடன் வாழ்ந்தீர்கள்.

ஓய்வுக்காலத்தில் பல்வேறு சிறப்புக்களையும் பெற்று மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் மனம் மகிழ்ந்து வாழ எல்லாம்வல்ல இறைவனின் அருள் கிடைக்க வேண்டி நிற்பதுடன் மனமார வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் ஞானகாந்தன் யாழ் இந்து ஆரம்ப பாடசாலையின் ஒரு விடிவெள்ளி



**திருமதி மலர்மகள் பத்மநாதன்** BEd
முன்னாள் ஆசிரியை,
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

யாழ் இந்து ஆரம்ப பாடசாலையின் செழுமைக்கும் புகழுக்கும் பெருமை சேர்த்தவர்கள் பலர். அந்த வரிசையில் பல்லாயிரக்கணக்கான ஆரம்பக்கல்வி மாணவர்களின் வாழ்க்கைப்பயணத்தில் ஒரு விடிவெள்ளியாக உயர்ந்து நிற்பவர் எமது பெருமதிப்புக்குரிய அதிபர் உயர்திரு வே .ஞானகாந்தன் என்றால் மிகையாகாது. இப்பாடசாலையின் புகழுக்கு அடித்தளத்தை இட்டுச்சென்ற பெருமை இவருடையதே எனலாம். 1998 ஆம் ஆண்டில் ஆளுமை மிக்க தனித்துவமான அதிபராக யாழ் இந்து ஆரம்ப பாடசாலையை பொறுப்பேற்றார். இளமைத்துடிப்பும், செயலூக்கமும் நிறைந்த அதிபர் அவர்கள் சைவவிழுமியங்களுடன் அன்பு, அர்ப்பணிப்பு, அளப்பரிய சேவையூடாக இந்து ஆரம்ப அன்னையை சீரும் சிறப்புமிக்க மேலோங்க பாடுபட்டவர் என்றே கூறலாம். அமைதியான, ஆழமான அறிவின் வடிவம் எவரையும் தன்பல் ஈர்க்கக்கூடிய மதியுகமும், மனவுறுதியும் கொண்டவர். தனது ஆசிரிய குழாத்தை ஒன்றிணைத்து நல்லாசிரியர்களை வலுச்சேர்த்தவர். இதேவேளை பாடசாலையயினைத் தாங்கும் தூண்களான பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினரதும், பழைய மாணவர்சங்கத்தினரதும்,பெற்றோரினதும் நல்லுறவை அமைக்கும் பாலமாக விளங்கியவர். இவருடைய ஆளுமைமிக்க நிர்வாகத்தினால் 1998 ஆம் ஆண்டில் 776 மாணவர்கள் கல்வியை கற்று வந்தவர்கள்.

காலப்போக்கில் படிப்படியாக அதிகரிப்பைக்காட்டி 2010ஆம் ஆண்டில் 1438 மாணவர்களை உள்வாங்கி கற்றல், கற்பித்தலில் வீறு நடைபோடத் தொடக்கியவர் எனலாம். ஆசிரியர்களின் வாண்மை நுட்பங்களை சரிவர அறிந்து யார் யாரை எந்த வகுப்பிற்கு அமர்த்தினால் கற்பித்தலை இலகுவாக்கலாம், அதனை வெற்றிகரமானதாக்கலாம்என்பதைக் குறிப்பறிந்து செயல்பட்டவர். இதன் வெளிப்பாடாக புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவரின் தொகை வருடாவருடம் அதிகரித்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. 2003 ஆம் ஆண்டில் 108 மாணவர்களைச் சித்தியடையச் செய்ததன் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், அகில இலங்கைரீதியிலும் பெரும் எண்ணிக்கையான மாணவர்களைச் சித்தியடையச் செய்து இந்து ஆரம்பப்பாடசாலையை தேசிய ரீதியில் மிளிர வைத்த பெருமை அதிபர் திரு.வே.ஞானக்காந்தன் அவர்களையே சாரும் என்பதில் ஐயமில்லை. கற்றல் கற்பித்தல் துறையில் கட்புல சாதனங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்து உயர்நிலை நோக்கிய கற்றல் வளங்களை உருவாக்கி அதனடிப்படையில் ஆரம்பக்கல்வி மூலவளநிலையம் ஒன்றை ஆரம்பித்து அதனோடு நின்றுவிடாது ஆங்கில மொழியின் அவசியத்தை உணர்ந்து ஆங்கில ஆசிரியர்களுடன் இணைந்து மாலைநேர ஆங்கிலமொழியை மாணவர்களுக்கு கற்றலுக்காக ஆரம்பித்தார். இவைகளினது வெளிப்பாடாக 2004 அம் ஆண்டில் 103 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றதோடு யாழ் மாவட்டத்தில் முதலாம், மூன்றாம், நான்காம் நிலையினைப் பெற்று சாதனைகளை படைக்க வித்திட்டார். இவ்வாண்டில் 182 புள்ளிகளைப் பெற்று செல்வன் இரட்ணசிங்கம் பிரணவன் தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டு ஜப்பான் சென்று பாடசாலையின் பெயரினை உலகஅரங்கில் பெயர் பதிக்கச் செய்தார்.

கல்விக்கடலில் தனித்துவ இடத்தை பிடித்த பாடசாலை வாரிசுகளுக்கு சீருடையில் JHP குறியீடு தெளிவாகவும், கழுத்துப்பட்டி அணியும் வழக்கத்தையும் கொண்டு வந்தார். இது பாடசாலையின் பண்பாட்டு வளர்ச்சியை மேலோங்கச் செய்யும் செயற்பாடாக கருதப்படுகிறது. சிறார்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னின்று நெறிப்படுத்தினார். 2005 ஆம் ஆண்டில் செல்வி சோ .திரியம்பவி எழுத்தாக்கச் செயற்பாட்டில் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றார். 2006 ஆம் ஆண்டில் செல்வி க.தரணிகா பேச்சுப்போட்டியில் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றார். இது அவரின் அயராத உழைப்பின் பெறுமதிகளேயாகும்.

மாணவர்களின் நலனில் அதீத அக்கறையுடன் செயற்பட்டவர். அதிபர் JICA செயற்திட்டத்தில் இணைக்கப்பட்ட பாடசாலையாக யாழ் இந்து ஆரம்ப பாடசாலை விளங்கியது. யாழ் வலயத்தில் 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அதனுள் 2006 ஆம் ஆண்டில் அதிபரின் சிறந்த முகாமைத்துவ கட்டமைப்பு, நிர்வகிக்கும் பண்பு போன்றவற்றால் எமது பாடசாலை இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொள்ள வாய்ப்பளித்தார். இச்செயற்திட்டத்தின் ஊடாக மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் சாதனங்கள் உருவாக்கப்பட்டன. 108 வகையான மூலிகைகள் வளர்த்து பச்சைவீட்டுத்திட்டத்தையும், தாமரைத்தடாகம், பூச்சிப்பெட்டிகள் உருவாக்கம் போன்றவையும், ஆங்கில கையேடுகள், சுற்றாடல் சார் செயற்பாடுகளுக்கான பக்கபுரட்டிகள், ஒப்படைகள், மாணவர்களின் உளஆற்றலை மதிப்பீடு செய்ய 100 சதுர கூட்டல், கழித்தல் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

இதனூடாக சிறார்களின் கல்வி வளர்ச்சியில் உயர்ச்சி காணத்துடித்தார். JICA செயற்திட்டத்தின் அடிப்படையில் செயற்படுத்திய செயற்பாடுகளின் தொடர்ச்சியாக அதிபர் அவர்களின் ஆற்றல்மிகு யுக்தியினாலும் வினைத்திறன் மிக்க பாடசாலையாக மாற்றமடைந்து புது யுகத்தினுள் புகுந்தது எனலாம். கணனிக் கற்கை நெறிகள் நடாத்தப்பட்டதால் தகவல்கள் யாவும் கணனிமயப் படுத்தப்பட்டது. கற்பித்தல் செயலில் அலகு ரீதியான இறுவட்டுக்கள் தயாரிக்கப்பட்டன. யூசிமாஸ் நிறுவனத்தின் கணிதச் செயற்பாடுகள், சதுரங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. மீண்டும் 2006 இல் யாழ் மாவட்டத்திலும், தேசிய ரீதியிலும் 185 புள்ளிகளைப் பெற்று செல்வன் சுந்தரேஸ்வரன் வித்தியாசாகர் ஜப்பான் சென்று எமது பாடசாலையின் சின்னத்தை அகிலத்தில் அடையாளம் பதிப்பித்தது போற்றத்தக்கது.

ஆளுமைமிக்க அர்ப்பணிப்போடு சேவையாற்றிய முன்னைய அதிபர்களின் முன்மாதிரியான செயற்பாடுகளின் தொடர்ச்சியாக வழிநடத்துதலில் பெரும் சாதனையையும் பராட்டுக்களையும் அள்ளிக்குவித்தார். ஆரம்ப கல்வி கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் நவீன தொழில்நுட்ப பயன்பாட்டையும், கட்புல செவிப்புல சாதனங்களின் உச்ச பயன்பாட்டையும் வெளியுலகுக்கு எடுத்துக்காட்டி கல்வித்திணைக்கள உயரதிகாரிகளின் பாராட்டுக்களையும் அதன் பாடாக மூன்று தினங்கள் (26-09.2008-28-09.2008)கல்விக்கண்காட்சி நடாத்தி பலரதும் பாராட்டுக்களையும் பெற்றார்.

கவின் கலைமன்றத்தினால் வெளிப்புறக்காட்சிகளுடன் இணைந்து காத்தவராயன் இசைநாடகம், இசையும் அசைவும் இணைந்த ஆடல்பாடல் தொகுதியுமாக "மழலைகள் அமுதம்" என்ற இறுவட்டு வெளியிடப்பட்டது. இதன் மூலம் மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாட்டில் மாணவர்கள் ஈடுபட்டனர் என்பதை தெளிவாக எடுத்துக்காட்டினார். 2009 இல் பாடசாலைக்கான இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்மூலம் பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளும் உடனுக்குடன் உலகெங்கும் யாவரும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டவைத்தார். எந்த நேரத்தில் எது தேவையோ அவற்றை சிரமேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதில் அவருக்கு நிகர் அவரே. இந்து ஆரம்ப பாடசாலை அன்னையை பொறுப்பேற்ற நாளிலிருந்து பாடசாலையின் பௌதீக வளங்களையும் சுற்றுப்புறச் சூழலையும் அழுகுபடுத்துவதில் பெரும்பாடுபட்டார். கல்விப்பாரம்பரியத்தில் கலங்கரை விளக்கெனத்திகழும் யாழ் இந்து பாடசாலையில் ஆளுமை நிறைந்த அர்ப்பணிப்புடன் கூடிய அளப்பரிய சேவையை அதிபர் திரு.வே.ஞானகாந்தன் அவர்கள் செவ்வனே சீரமைப்பதற்கு தோள்கொடுத்து பக்கபலமாக அரும்பணிகளைச் செய்தவர் எமது மதிப்பிற்குரிய அதிபர் திரு சு.தியாகலிங்கம் அவர்கள் ஆவார்.

அதிபர் காலத்தில் பௌதீக வளங்கள் விருத்தியடைந்தன. பல புதிய செயற்பாடுகள் தோற்றம் பெற்றன. திறந்த வெளிமேடை விஸ்திரணப்படுத்தப் பட்டது. மாடிக்கட்டிடங்களில் பயிலும் மாணவர்களுக்கு நீர் வசதி பெற நீர்த்தாங்கி அமைக்கப்பட்டது. அனைத்து மாணவர்களும் பங்கு பற்றக்கூடிய பிரமாண்டமான கொட்டகை கட்டப்பட்டது. ஜேர்மன் தொழில்நுட்ப உதவியுடன் மலசலகூடம் நவீன மயப்படுத்தப்பட்டது. குழந்தைகள் மகிழ்ச்சிகரமாக விளையாடுவதற்கு உபகரணங்களையும், சூழலையும் கொண்ட விளையாட்டு முற்றம், பூங்கா போன்றன அமைக்கப்பட்டன. மாணவச்செல்வங்களின் ஆற்றலை வளர்த் தெடுக்க நூலகம் அமைக்கப்பட்டது. நீண்டகாலம் பூர்த்தி செய்யப்படாத கட்டிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. மகிழ்ச்சிகரமான கற்றல், செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளினூடாக உடல், உளபண்புகள் பொருந்திய எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய மாணவர் சந்ததியை உருவாக்க பாடசாலை சமூகத்தினால் 2010 இல் புதிய மைதானம் ஒன்று பிறக்க வழிவகுத்தார். பாடசாலைச்சமூகம் அதற்கு அவரின் ஞாபகச்சின்னமாக அந்த மைதானத்திற்கு "ஞானகாந்தன்" மைதானம் என்று பெயரிட்டனர். இதுவே இவர் இறுதியாக இந்தப் பாடசாலைக்கு செய்த பெரிய கைங்கரியமாகும்.

இவரின் சேவைக்காலம் யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் ஒரு பொற்காலமாகும். ஏனையோருக்கு எடுத்துக்காட்டாகவும் வழிகாட்டியாகவும் திகழ்கின்றார். எண்ணிய பணிகளை திண்ணியமாக முடிக்கவல்ல கண்ணியமான அதிபர் அவர்களது சேவைக்காலமும் சேவையும் சிறந்து விளங்கியது போல அவரது ஓய்வுகாலமும் ஓய்வும் சிறப்புற விளங்க எல்லாம் வல்ல கொண்டலடி விநாயகனை வணங்கி விடைபெறுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பயணத்தின் திசைகாட்டி



**திருமதி கணேஸ்வரி தனமூர்த்தி**
ஆசிரியை,
யா/இந்து மகளிர் கல்லூரி
(முன்னாள் ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி)

மணிபல்லவத்தில் மாண்புடனே வாழ்ந்திருந்த
மாமயிலோன் நாமமுடை வேலாயுதபிள்ளை;
நாகமுடை நயினையம்பாள் தாழ்பணிந்து
சேமமுடன் பெற்றெடுத்த ஞானவிளக்கே!

அதிபர் பதத்தின் அகராதி தாம்படைத்தீர்
கதிரும் நிலவுமொளிர் காட்சிக்குச் சாட்சியம் நீர்
மனிதம் புனிதமுற மாண்புடைய சேவை செய்தீர்
இனிதாம் ஸ்ரான்லிக் கல்லூரி ஏற்றமுறும்பணியால்

லண்டனில்வாழ் பழையபள்ளி மாணவரைத் தாம் அணுகி
பண்டைய விடுதியினைப் புனரமைக்க உதவி பெற்றீர்
திண்டாடித் திக்கெங்கும் தவித்துநின்ற மாணவரைக்
கொண்டாடி விடுதியிலே குதூகலிக்கக் கல்வி தந்தீர்.

ஆடுகளத்தினிலே மாணவர்தாம் ஆடிநின்ற
பீடுயர்ந்த முன்னேற்றப் பெறுபேற்றுக் காயுழைத்தீர்
உற்சாகமூட்டி விளையாட்டை ஊக்குவித்தீர்
நற்சான்று பெற்றின்று முல்லையிலே வெற்றிகண்டார்.

எழுத்தறியப் பிந்திநின்ற எண்ணிறந்த மாணவர்தம்
எழுத்தாற்றல் மேன்மையுற வகுப்பமைத்து சித்தி கண்டீர்
எண்ணறிவு குறைந்தவரை இனங்கண்டு பயிற்சி தந்து
பண்பாரிய சேவைகளால் பள்ளிப் பாலகர்க்குக் கல்வி தந்தீர்

ஆசிரியர் கழகத்தின் காப்பாளராகி நின்று
ஆர்வமுடன் ஆசிரியர் நலனோம்பும் வகையுணர்த்தி
ஆரெங்கு துவண்டிடினும் போயங்கு வீற்றிருந்த
ஆதரவுக் கரம்நீட்டி ஆற்றுப்படுத்தி நின்றீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியப் பயணத்தின் திசைகாட்டியாய் நின்றீர்
பேசிய பேச்சுப்போட்டியிலும் அரச நடன விழாவிலும்
சோதனைகள் பல நேர்ந்த போதிலும் துவளாது
சாதனைகள் நீர் படைத்தீர் பள்ளிச் சரித்திரத்தில் நீர் உயர்ந்தீர்

கற்றவர் நிறைந்திலங்கும் கனத்த சபைதனிலே
நற்றமிழில் கவிபொழியும் (ஆசு)கவிக் காளமேகமே!
சொற்றமிழில் சோர்வின்றி உரையாற்றும் நாவலரே
பற்றுடனே இயைந்த பணி நிறைந்தீர் வாழி பல்லாண்டினிதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா நாயகனின் வாழ்க்கைப்பாதையில்

சப்ததீவுகளில் ஒன்றான மணிபல்லத்தீவாகிய நயினாதீவு அருள்வளமும், பொருள்வளமும், கல்விவளமும் நிறைந்த ஓர் அழகிய தீவாகும். சூழ் கடலில் இருந்து எழும் அலையோசையும் சங்கொலியும் அங்கு எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கின்ற நாகபூஷணி அம்பாளின் அருட்பிரவாகத்திற்காக இரவு பகல் பாராது தோத்தரித்து நிற்கும் தெய்வீக ஓசையெனக் கொள்ளப்படுகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றி னாலும் பெருமையடைந்த அன்னையின் அருட்கடாட்ச மரபில் வந்த ஶ்ரீமான் வேலாயுத பிள்ளை சிவயோகம் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனாக ஞானகாந்தன் என்னும் திருநாமத்தோடு 04.01.1957 இல் இவர் பிறப்பெடுத்தார். இவர் ஆரம்பக் கல்வியை யா/ நயினாதீவு நாகபூசணி வித்தியாலயத்திலும் இடைநிலை, உயர்தரக்கல்வியை யா/ நயினாதீவு மகாவித்தியாலயத்திலும் கற்றுக்கொண்டார். தைமாதத்தில் பிறந்தமையாலும் இரட்டை வகுப்பேற்றம் பெற்றிருந்தமையாலும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னராகவே தமது கல்வியின் ஒரு பகுதிநிலையை நிறைவு செய்து கொண்டார். அக்காலத்தில் பிள்ளை யின் திறமை அடிப்படையில் பிரிவுகள் பாடசாலைக்கு வழங்கப்பட்டு வந்தமையினால் தரம் 9இல் இருந்து விஞ்ஞானப்பிரிவில் கற்றுத் தேறியமை இவரின் கல்விநோக்கில் விரிந்த பார்வைக்கு எடுத்துக்காட்டாக அமைந்ததெனலாம். தொடர்ந்து உயர்தரத்தில் அப்பாடசாலையில் விஞ்ஞானப்பரிவு இன்மையால் புதிய பாடங்களைத் தேர்ந்தெடுத்து வர்த்தகப்பாடங்களை கற்றுத்தேறியபோது பகுதிநேரம் தொழிலில் ஈடுபட்டு படிக்க வேண்டிய சூழ்நிலை காரணமாக பேராதனைப்பல்கலைக்கழக வெளிவாரி மாணவனாக கலைத்துறையில் இணைந்து கலை (B.A) பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

தொடராக ஐந்து சகோதரிகளும், இரு சகோதரர்களும் அவர்களின் பின் இவராகவும் இருந்த காரணத்தினால் தேடிவந்த உயர்கல்வியை முடித்துக்கொண்டதும், படித்த வாலிபர் திட்டத்தின் மூலம் விவசாயத்திலும், கமநலத்திணைக்களத்தில் கொள்வனவு உத்தியோகத்தாராக செயற்பட்ட வேளை 17.03.1978 இல் வவுனியா மாவட்டத்தில் உள்ள வ/ பறையனாலங்குளம் அ.த.க.பாடசாலையில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்றார். 18 மாணவர்களுடன் இருந்த பாடசாலை ஓராண்டில் 172 மாணவர்களை உள்ளடக்கிய பாடசாலையாக வளர்ச்சியடைந்திருந்தமை இவரின் அடியெடுத்துவைத்த அற்புதத்தின் வெளிப்பாடு என்றால் மிகையாகாது. அங்கு கற்ற பலர் மிகுந்த உயர்வு நிலையில் இருப்பதைக்கண்டு அடிக்கடி கூற கேள்விப்பட்டிருக்கின்றோம். 12.01.1981 இல் இருந்து வ/ பூவரசங்குளம் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய வேளை க.பொ.த(உ/த) மாணவர்களுக்கான கலைத்துறைப் பாடங்களைக் கற்பித்து வந்துள்ளார். அக்காலத்தில் விடுதியில் தங்கியிருந்தமையால் மாலைநேர வகுப்புக்களை நடாத்தியதன் மூலம் மிகக்குறுகிய காலத்திலே பலமாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு செல்லும் வாய்ப்புகள் இருந்தன. 18.01.1982 முதல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்ற வேளையிலே உதவி சிரேஷ்ட மாணவ தலைவனாக ஓராண்டு காலம் சேவையாற்றி கலாசாலை அதிபர், விரிவுரையாளர்களின் அளவிறந்த அன்பையும், பாராட்டுக்களையும் பெற்றிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் 01.01.1984 முதல் வ/ பூவரசங்குளம் மகாவித்தியாலயத்தில் 01.01.1984 முதல் விட்ட பணியினை மேலும் தொடர்ந்து ஆற்றிவந்தார். அக்காலத்தில் அப்பகுதி மக்களின் அன்பிற்கும் பண்பிற்கும் உரிய ஆசிரியராக விளங்கியதுடன், சமூகப்பணிகளுக்கும் உள்ளீர்க்கப்பட்டார். அப்பகுதியில் 14 ஆண்டுகளுக்கு முன் பாலஸ்தாபனம் செய்யப்பட்ட பாலமுருகன் தேவஸ்தானத்தின் புனரமைப்பு வேலைகளைச் செய்து, அப்பணிக்குழுவின் செயலாளராகவிருந்து நெருக்கடியான காலகட்டத்தில் கோயிலுக்கு மகா கும்பாபிஷேகம் செய்து முடித்தார். இதனால் அப்பகுதி மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடம்பெற்றிருந்தார்.

27.11.1986 இல் நயினாதீவு நாகபூசனியம்மனின் ஆதீனகர்த்தா மரபில் தோன்றிய ஸ்ரீமான் குமாரவேலு மகேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி கேதாரபூரணி அவர்களைத் திருமணம் செய்து கொண்டவுடன் 18.05.1987 முதல் முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தின் ஆசிரியராக யாழ். மாவட்டத்தில் தனது பணியை ஆரம்பித்தார். வதிவிடத்திற்கு அண்மையில் இருந்ததாலும், வறுமையும், இழப்பும் மிக்க மாணவர்கள் அங்கு கற்று வந்தமையினாலும் அவர்களிடம் அன்பும், ஆதரவும் காட்டியதோடு ஏனைய சமூக நிறுவனங்களையும் ஒன்றுசேர்த்து கல்வி, சமூகப்பணி ஆகியவற்றை முன்னெடுத்த வேளை 08.10.1992 வரை யாழ்ப்பாணக் கோட்டத்தின் இந்து சமய பாட ஆசிரிய ஆலோசகராக நியமிக்கப்பட்டார். ஆசிரிய ஆலோசகர் பணி பாடசாலையில் இருந்து இருநாட்கள் விடுவித்து செயலாற்றும் வகையில் அப்போது அமைந்திருந்தது. பாடசாலைக் கடமையும் ஆலோசகர் பணியுமாக இருந்த போது 01.06.1991 தொடக்கம் இலங்கை அதிபர் சேவை தரம் மூன்றிற்கான போட்டிப்பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டு நியமனக்கடிதம் வழங்கப்பட்ட கையோடு 09.10.1992 முதல் யா/ கல்வியங்காடு இ.த.க. பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டார். அது தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையிலான வகுப்புக்களை உள்ளடக்கியிருந்தமையால் புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகரித்த மாணவர் சித்தி பெற ஆசிரிய அணியை உருவாக்கி மேலதிக வகுப்புக்கள் மூலம் முதல்முறையாக பத்திற்கும் மேற்பட்ட மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற வழிவகுத்தார். புதிய விளையாட்டு மைதானத்தை உருவாக்கி இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களின் பங்குபற்றலை மேம்படுத்தி வினைத்திறனுடைய பாடசாலையாக உருவாக்கி வரும் வேளையில் 1995 இல் ஏற்பட்ட இடப்பெயர்வு யாவிற்கும் முற்றுப்புள்ளிவைத்தாற் போல் யாவரையும் அள்ளிச்சென்றது. இடப்பெயர்வின் பின் மீண்டும் யாழ் நகருக்கு வந்த போது 12.01.1997 தொடகக்ம் யா/ முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தின் அதிபராக கடமை ஏற்றுக் கொண்டார். இடப்பெயர்வுக்கு பின் இக்கல்லூரியை பொறுப்பேற்றதும் கல்லூரியின் மைதானம், சுற்றுப்புறம் ஆகியவற்றை துப்பரவு செய்யும் பணி அளவிறந்ததாகக் காணப்பட்டது. போர்த்தடயங்களுக்கு மத்தியில் தயார்ப்படுத்தும் பணியில் ஆசிரியர்களுடன் இணைந்து உடலுழைப்பை வழங்கிச் செவ்வைப்படுத்தியமை ஒரு சாதாரண விடயமாக கொள்ளமுடியாது. பாடசாலையை தன் அயலில் உள்ள பாடசாலையாக நேசித்து பரந்த நிலப்பரப்பை ஊடறுத்து பாடசாலைக் கட்டிடங்களையும், தோட்டங்களையும் மையப்படுத்தி அறுக்கைப்படுத்தும் முகமாக வேலிகளிடப்பட்டது. அந்தநேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தமையால் அவர்களின் எழுத்து, எண்ணறிவுத்தாக்கம் விளைவிப்பதாக இருந்தமையாலும் மாலைநேர விசேட வகுப்புகளை உருவாக்கி கற்றல் சாதனங்கள், பானங்கள் வழங்கி உற்சாகப்படுத்தி கற்பித்து வருவதற்கு சமூக நல்லுள்ளம் சார் பண்பாளர்களின் பங்குபற்றலும் உள்வாங்கப்பட்டிருந்தது.

27.01.1998 முதல் இவரின் வியத்தகு சேவையை உணர்ந்தோ என்னவோ யா/ இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார். ஏற்கெனவே ஆரம்ப பாடசாலை ஒன்றில் தடம்பதித்து செயற்படுத்திய செயற்பாட்டு அனுகூலங்களை இப்பாடசாலையில் பிரயோகிக்க தலைப்பட்டதும், ஆசிரியர்களின் ஒருங்கூட்டிய பலமும், சமூகத்தின் நல்லெண்ண உள்வரவும் நாளுக்குநாள், வருடத்திற்கு வருடம் அதிகரிக்க அதிகரிக்க பெறுபேற்றினதும் சாதனைகளினதும் முன்நகர்வுகளும் பாடசாலையை பிரமிக்கத்தக்க உயர்வுநோக்கித் தடம்பதிக்கலாகின. ஒன்பது பரப்பிற்குள் உள்ளடங்கியிருந்த கட்டிடங்கள் ஏற்கெனவே மைதானத்திற்கான முன்னாள் அதிபர் திரு.கா. தவராசா அவர்களால் உருவாக்கப்பட்டிருந்த ஆறு பரப்பு மைதானதிடல் முழுமையாக மூன்று மாடிக்கட்டிடங்களாக உருப்பெற்றன. நூலகம், மலசலகூடம், தண்ணீர்த்தாங்கி, திறந்தவெளிமேடை என பல்பரிமாணக் கட்டிடங்கள் கோடிக்கணக்கான நிதியீட்டங்களுடன் மிக வேகமாக உருப்பெற்றன. இவற்றிற்கெல்லாம் மூல காரணமாக விளங்கிய பாடசாலை அபிவிருத்திச்சங்கமும் பழைய மாணவர்சங்கமும் அதிபர் அவர்களின் நிர்வாகப்பணிக்கு உரம் சேர்த்திருந்தன. பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் உடனிருந்து ஆர்வம் பெருக்கினர். பாடசாலை மீதும் அங்கு கற்பிக்கும் அதிபர், ஆசிரியர்களுடனும் மிகுந்த நல்லுறவைப் பேணிக் கொண்டனர். 5S செயற்திட்டத்தின் மூலம் ஆரம்ப பாடசாலை என்ற அடிப்படையில் முழுமை பெற்றதோடு யாழ் மாவட்டத்தின் இரண்டாம் நிலையை நிலைநாட்டிய போது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் நவீன நோக்கும், நவீன சாதனங்களின் பிரயோகங்களும் எழுச்சி பெற்றன. மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலுடன் வகுப்பறைகள் கவின்நிலை கொண்டதாகவும் 5S செயற்திட்டத்தினூடான மனப்பாங்கு மாற்றத்தை உண்டுபண்ணும் தோரணையுடையதாகவும் காணப்பட்டன. புலமைப்பரிசில் பெறுபேறுகளின் சித்தி வீதம் 75% வரை தொட்டுச்சென்ற வரலாற்றுச் சாதனைகள் உதயமாகின. 12 ஆண்டு காலம் அதிபர் அவர்கள் இப்பாடசாலையில் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்கா என்றே கூற வேண்டும். இறுதிக்காலப்பகுதியில்தான் ஏற்கெனவே திட்டமிட்டு வந்த மைதான உருவாக்கதிற்கான பொருத்தமான வேளை அமைந்திருந்தது. இந்தப்பணி பாடசாலை சமூகத்தை தன்பால் அடக்கி மிகுந்த முயற்சியுடன் இம்மைதானத்தையும் அதனை பாடசாலையோடு இணைக்கும் பாதையையும் உருவாக்கித் தந்திருந்தார். இதன் கொள்வனவுப் பெறுமானம் ஒரு கோடியே எழுபத்திரண்டு இலட்சமாகும். இத்தகு தீர்க்கமான பணியை முன்னெடுத்து வெற்றி கண்டமையால் அதிபர் அவர்களின் பெயரிலே “ஞானகாந்தன் விளையாட்டரங்கு” என்ற பெயரினைச் சமூகம் சூட்டி அவர் பணியை என்றும் நினைவு கூர்ந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் தடம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தின்போது....



பொன்விழாவின்போது....



கொக்குவில் இந்துவில்...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.06.2010 இல் யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திற்கு அதிபராக பணியைத் தொடர்ந்து 12 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட வளமிக்க இப்பாடசாலையில் கிடந்த பற்றைகளையும், இடிபாடுகளையும் அகற்றி மைதானத்தை சீராக்கி தற்போதுள்ள மைதானச் செழுமை இவரது முயற்சி என்றால் மிகையாகாது. தொடர்ந்து மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்னும் நோக்கில் கால் நூற்றாண்டு காலமாக கைவிடப்பட்டிருந்த ஆண்கள், பெண்களுக்கான 200' x 30' சதுர அடி கொண்ட இரு விடுதிகளையும் ஒன்றரைக்கோடி பெறுமதியான வேலைத்திட்டத்தின் மூலம் புனரமைத்தது மட்டுமல்லாது மாணவர்களை விடுதியில் சேர்த்து கல்லூரியின் பெண்கள் விடுதிக்கான பாதுகாப்பு மதில்களை உயர்த்தி மிகுந்த ரம்மியமான சூழலை உருவாக்கினார். மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் அதீத கவனம் மேற்கொண்டதன் பயனாக கணிதம், மொழிவிருத்திச் செயற்பாடுகளில் குறைவானவர்களுக்கு மாலை நேர விசேட வகுப்புகளைத் தானே நடாத்திவந்தமை குறிப்பிடத்தகக்து. மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையும், தரம் ஆறில் புலமைப்பரிசில் சித்திபெற்றவர்கள், அதற்கு அண்மைய புள்ளிகளைப் பெற்றவர்கள் வருகை அதிகரித்தது. இதனால் கல்லூரிச் சமூகத்தின் உள்நகர்வு ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. வழமைபோல உயர்தர வர்த்தகப்பிரிவினர் தமது சாதனைகளை தொடர்ந்தும் செய்து வந்தனர். விடுதியில் மாணவர்கள் தங்கியிருந்தமையால் விளையாட்டுத்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன எனலாம்.

10.10.2010 தொடக்கம் ஓய்வு பெறும் வரை யா/கொக்குவில் இந்துக்கல்லூரியில் அதிபராக பணியாற்றிய வேளை மாணவர் கட்டொழுங்கு தொடர்பாக இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். கல்வித்துறையில் க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகளும், க.பொ.த (உ/த) பெறுபேறுகளும் தேசிய பாடசாலைகளோடு போட்டிபோடத்தக்கனவாகவும், மாகாணப் பாடசாலைகளில் முன்னிலை பெறும் பாடசாலையாகவும் விளங்கிவருதல் குறிப்பிடத்தக்கதாகும். கல்வித்துறையோடு மட்டுமல்லாது இணைபாடவிதானச் செயற்பாடுகளான சாரணீயம், விளையாட்டு, மொழித்திறன், புத்தாக்கம், கலைத்துவம் ஆகிய துறைகளில் தேசிய மட்டங்கள் வரை சென்று சாதனை புரிந்து வருதலும் வெளிப்படையானது. நீண்ட காலத்திற்குப்பின் விளையாட்டு, புத்தாக்கம், விவாதம், வினாடிவினா போட்டிகளில் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய காலமாக அதிபர் அவர்களின் பணிக்காலத்தை அவதானிக்கமுடிகின்றது. கல்லூரிக்கான நிதிவளம் வற்றியிருந்த காலத்தில் அவரால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் சாதாரணமாகக் கருதமுடியாது. கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் கிடைக்கப்பெற்ற வேலைத்திட்டங்களை பாடசாலை அபிவிருத்திக்குழுவின் மூலம் செய்து முடித்து கிடைக்கப்பெற்ற மேலதிக வருமானத்தைக்கொண்டு பல்வேறு புனரமைப்புப் பணிகளையும் மேற்கொண்டார். குறிப்பாக "பற்கிளினிக்" கட்டிடத்தொகுதி, பஞ்சலிங்கம் கேட்போர்கூட மாபிள் பதித்துக் கூரைவேலை செப்பனிடல், அலுவலக மாபிள் பதிப்பு, இரசாயனவியல் கட்டிடத்திருத்தம், வடபகுதி ஆண்கள் மலசலகூட திருத்தம், தென்பகுதி ஆண்கள் மலசலகூட புனரமைப்பு, தென்பகுதி நவீன ஆண்கள் மலசலகூட வேலைத்திட்டம், பாடசாலை முழுவதுக்குமான மின்விளக்கு பொருத்தியமை, குடிநீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழாய்த் திருத்தம், வர்ணப்பூச்சு ஆகியன நிறைவு பெற்று இன்று திறப்பு விழாக்கள் கண்டு அழகுற மிளிர்கின்றன. இவ்வேலைத்திட்டங்களில் கிடைக்கப்பெற்ற வருமானத்தைக் கொண்டு நவீன சிற்றுண்டிச்சாலை ஒன்றை வடபகுதியில் அமைப்பதற்கான வேலைத்திட்டத்தையும் கொண்டிருந்தார். ஐக்கிய இராச்சியத்தின் பழைய மாணவர் சங்கம் வழங்கிய 36 கணனித் தொகுதிகளின் வளங்கள் மிகுந்த அத்தியாவசியத் தேவைப்பாட்டிற்குரியனவாகும். மேலும் சாரணரின் 70 ஆவது ஆண்டு நிறைவையொட்டி கட்டப்பட்ட கீர்த்திகன் ஞாபகார்த்த மண்டபம் இன்று சாரணிய வளர்ச்சிக்கு வரப்பிரசாதமாகவுள்ளது. தொடர்ந்து நவீன உயிரியல் ஆய்வுகூடத்திற்கான வேலைத்திட்டம் கல்லூரியின் பழைய மாணவர்களினால் ரூபா 32 இலட்சம் செலவில் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே பௌதிகவியல் ஆய்வுகூடத்தையும் மிக விரைவில் ஒன்றாகக் கற்ற பழைய மாணவர் அணியினர்கள் உருவாக்கித்தருவதற்கான ஒப்புதலை அதிபர் அவர்களிடத்தில் வழங்கியுள்ளனர். இவ்வாண்டு கல்லூரியின் பழைய மாணவியாகவும் நீண்டகாலம் ஆசிரியராக, பகுதித் தலைவராக, உதவி அதிபராக பணியாற்றியவருமாகிய திருமதி. சுசீலாதேவி திருச்செல்வம் அவர்களின் தனி முயற்சியாகவும் இக் கல்லூரியில் அவர் கொண்டிருந்த அளவிறந்த பற்றுதலை வெளிப்படுத்தும் கருவூலமாகவும் வடபகுதி உள்ளகத் திடலில் கல்வித் தெய்வமாய் சரஸ்வதி தேவியின் திருவடிவத்தையும் அதற்குரிய ஆலயத்தையும் அமைத்துத் தந்திருக்கின்றார்.

இப்பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு வகுப்பறைகள் இல்லை என்ற பெரிய குறையினை நிவர்த்தி செய்யும் முகமாக மத்திய கல்வியமைச்சின் ரூபா 4 கோடி 25 இலட்சம் பெறுமதியான 18 வகுப்பறைகளைக் கொண்ட 3 மாடி கட்டிடத் தொகுதியொன்று வடபகுதியில் மைதானத்திற்கு அருகில் 40 வருட காலமாகப் பயன்படுத்தப்படாத பாடசாலைக்குச் சொந்தமான காணியில் 2017ஆம் ஆண்டில் உருவாக்கப்படுவதற்கான சகல வேலைத்திட்டங்களும் இவருடைய காலத்திலேயே பூர்த்தி செய்யப்பட்டிருப்பது மிகவும் உன்னதமான இவருடைய சேவையினைக் காட்டுவதாக உள்ளது. பௌதிக வளம், மனித வளம் இரண்டும் ஒரு பாடசாலையில் இரண்டு கண்கள் எனலாம். இப்பாடசாலையில் இரண்டு வளங்களும் மிகவும் மேலோங்கிக் காணப்படுவதற்கு துறைசார்ந்தவர்களுடன் இவர் கொண்ட இணக்கமான விட்டுக்கொடுப்புடன் கூடிய செயற்பாடுகள்தான் காரணம் என்றால் அது மிகையாகாது. எதிர்காலத்தில் இவ்வளங்களை திட்டமிட்ட ஒழுங்கமைப்பின் கீழ் கொண்டு வருவதற்கான சமூக ஒன்றுபட்ட தயாரிப்புகளையும் இவர் மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திரு வே.ஞானகாந்தன் அதிபர் அவர்கள் ஓர் வித்தியாசமான பிறவி என்றே கருதுகிறேன். இதுவரை யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் எனது பிள்ளையை இணைத்துக்கொண்டபோதுதான் முதன்முதலில் தெரிந்து கொண்டேன். அன்பானபேச்சும் பண்பான நடத்தையும், யாரையும் ஈர்க்கத்தக்க செயல்வழி நடத்தலும், என்னையும் பாடசாலை அபிவிருத்திச்சங்க நிர்வாக உறுப்பினராகவும், செயலாள ராகவும் இருந்து பாடசாலையின் எழுச்சிக்கு இணைந்து பணியாற்ற வித்திட்டது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறேன். இவரிடம் நிறைந்த ஆத்மீக பலம் உண்டு என்பதை தெரிந்து கொண்டேன். பாடசாலையின் ஐப்பசி வெள்ளியன்று சிவபுராணம் ஓதியபோது அங்கிருந்து சரஸ்வதி சிலையில் மாலை ஆடத்தொடங்கிய நிகழ்வு இன்றும் எனக்கு மெய் சிலிர்க்க வைக்கின்றது. அம்பாளின் நேரடித்தரிசனமாகவே இதனை நோக்க முடியும். ஒரு மாத காலம் வரை இந்நிகழ்வு தொடர்ந்த போது பாடசாலைச்சமூகம், ஆசிரியர், மாணவர்களும் அருட்பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டனர். தம்மை தூய சைவவாழ்வியலில் முழுமையாக அர்ப்பணித்தார். தான் பணியாற்றும் பாடசாலையை அருட்கடாட்சம் மிக்க கோவிலாகக் கண்டு தரிசிப்பவர். அங்குள்ள ஆசிரியர்களும் பூசிக்கப்படும் தெய்வங்களாக அன்பால் புடம்போடும் ஆளுமைமிக்கவர். சிறந்த நிர்வாகி. உண்மையும், சத்தியமும் தவறாதவர். வீட்டை முற்றாக மறந்து பாடசாலையில் இரவு பகலாக நின்று உரமூட்டுபவர். இதனாலன்றோ வரலாறு காணாத திருப்பங்கள் கண்டு அகில இலங்கையும் பெயர் சொல்லும் தலமாக யாழ் இந்து ஆரம்ப பாடசாலையை உருவாக்கியவர். இவற்றை மையப்படுத்தி பார்க்கும் போது இவர் சென்று கடமையாற்றிய பாடசாலைகள் அனைத்திலும் பசுமைப்புரட்சி எழுந்துள்ளமையை எவரும் உய்த்துணர முடியும்.

இவரது பெற்றோர்கள் தலைசிறந்த பண்பாளர்களாகத் திகழ்ந்திருக்கின்றார்கள். நல்லறிவும், ஞானமும் மீதுரப் பெற்றவர்களாவர். ஊரின் மதிப்பாளராக விளங்கிய இவர்களின் கருப்பொருளாக உருவெடுத்தவர் எங்கள் அதிபர் எனலாம். பணிவான தலைஅசைவும், பார்வையில் பட்டவர்களை வசீகரப்படுத்தி பக்குவமாக பணிநிலை நோக்கி நகர்த்தக்கூடிய பண்பு இவரிடம் நிறையவே இருந்திருக்கிறது. 13 ஆண்டுகள் ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும் செயலாற்றி தன் அறிவாற்றலால் அதிபர் சேவைக்குள் பிரவேசித்து 26 வருடங்கள் இந்த மண்ணிலே புகழ் தடம் பதித்து கல்விப்பணியில் கலங்கரை விளக்காகத் திகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தகக்து. தனது வாண்மை விருத்திப் பயணத்தில் பயிற்றப்பட்டவராக, பட்டப்பின் கல்வித்தகைமை பெற்றவராக, கல்விமுதுமாணியாக மிக உயர்ந்து நிற்பதும் அவரைப் பெருமைப்படுத்துவதாகும். நல்லனவற்றை உருவாக்குவதிலும் நல்லனவற்றை காண்பதிலும் கருத்தாகக் கொண்ட இவர் தனது சேவைக்காலத்தில் சமூகத்தினுள் உள்ளிறங்கித் தன்பணியை ஆற்றி சமூக மாற்றத்தை உருவாக்குவதில் முன்முயற்சியோடு செயற்பட்டு வந்துள்ளார்.

1983 காலப்பகுதியில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சியை மேற்கொண்டவர். இவரது பண்பான நடத்தையும், பணிவான எதனையும் தட்டிச் செல்லா செயல்வழியும் கண்ணுற்ற கலாசாலை நிர்வாகம் இறுதியாண்டுப்பகுதியில் சிரேஸ்ட உதவி மாணவர் தலைவராக நியமித்திருந்தது. அக்காலத்தில் ஆற்றிய பணி பயிற்சியாளர் சார்ந்ததாகவும் நிர்வாகம் சார்ந்ததாகவும் இருநிலைகளையும் அணைத்து முரண்பாடின்றி பிணக்குகளற்று எடுத்துச் சென்றமை இன்றும் சக ஆசிரியர்களாலும் விரிவுரையாளர்களாலும் போற்றுதற்குரியதொன்றாகவே அமைந்துள்ளது. 1985 - 1986 காலப்பகுதியில் வவுனியா பூவரசங்குளம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றிய வேளை அங்கு 14 வருடங்களாக பாலஸ்தாபனம் செய்யப்பட்டிருந்த பாலசுப்பிரமணிய ஆலயத்தின் பரிபாலன சபைச்செயலாளராக இருந்து அதன் புனருத்தாரண வேலைகளைச் செய்து மகாகும்பாபிசேகம் செய்தார். அதைத் தொடர்ந்து அப்பிரதேச சமூகத்தின் அன்பிற்கும் அபிமானத்திற்கும் உரியவரானார்.

1993-2000 வரையான காலப்பகுதியில் யாழ் மாவட்ட கல்வி மேம்பாட்டுக்கழகத்தின் பொருளாளராக இருந்த பல இலட்சம் ரூபா கல்வி, விளையாட்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொண்டமையால் இதன் தலைவராக இருந்து வழிநடத்திய பெருமை முன்னாள் மாகாணப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி அம்மாவைச் சார்ந்தது எனலாம்.

1994 -2000 வரை நல்லைத் தமிழ்ச்சங்கத்தலைவராக இருந்து கிராமங்கள் தோறும் உள்ள சனசமூக நிலையங்களின் ஆதரவுடன் அவ்வப்பகுதிக்குச் சென்று அப்பகுதியில் உள்ள இளைஞர், யுவதிகளின் பங்களிப்புடன் கருத்தரங்குகள், விவாதங்கள், கவியரங்குகள் என்பவற்றை நடாத்திக் கிராமிய மட்டத்தில் உள்ள இளைஞர் மத்தியில் உள்ள ஆற்றல்களை வெளிக்கொணரும் களம் அமைத்துக் கொடுத்து வந்துள்ளார்.

1997 முதல் இன்றுவரை ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் நிரந்தர உறுபபினராகவும் பரீட்சை உதவிச்செயலாளராகவும் இருந்து ஆரம்பகாலத்தில் தமிழ்மொழிப் பரீட்சையையும், தொடர்ந்து பாலபண்டிதர், பண்டிதர் பரீட்சைகளையும் நடாத்தி வருவதோடு இச்சங்கத்திற்கு பாரதிபாஷா வித்தியாலயத்தில் தனியான கட்டிடத்தை அமைப்பதற்கும் பங்காற்றிக்கொண்டு இருக்கின்றார்.

2000-2004 வரையான காலப்பகுதியில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் உபதலைவராக இருந்து பாரம்பரிய கலைகளை அடையாளப்படுத்தியதோடு போட்டிகள் நடாத்தி ஊக்குவிக்கப்பட்டமையால் மூலைமுடுக்குளில் உறங்கிக்கிடந்த பாரம்பரிய கலைகள் விழிப்புணர்வடைந்து மேடையேறத்தலைப்பட்டன. அத்துடன் பழம்பெரும் கலைஞர்களை இனங்கண்டு அவர்களின் வரலாறுகளைத்திரட்டி நூலுருவம் செய்வதில் பங்குகொண்டு உழைத்தார்.

யாழ் இந்த ஆரம்பபப்பாடசாலையில் அதிபராகச் செயற்பட்ட காலத்தில் 2000-2004 வடபுலத்தில் உள்ள இருபாடசாலைகள் தேசிய நிறுவனத்தின் "இலங்கையில் பிள்ளைகளை புரிந்து கொள்ளல்" என்ற செயற்பாட்டு நெட்டாங்கு ஆய்வில் தெரிவுசெய்யப்பட்டிருந்தன. இதில் யாழ் இந்து ஆரம்ப பாடசாலையும் ஒன்றாக விளங்கியதால் அதன் ஆய்வாளராக நியமிக்கப்பட்டார்.

2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரை யாழ்ப்பாணம் அரிமாக்கழகத்தின் உறுப்பினராக இருந்து வருவதோடு 2010-2011 காலப்பகுதியில் அதன் தலைவராக இருந்தார். இக்காலத்தில் பலவிருதுகளை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம்போல் வாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# வாழ்வியல் தடங்கள்




MMV

JHP

JHP


JHP

CMMV

CMMV

CMMV

JP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006-2014 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணம் மத்தியஸ்தர் சபையில் உறுப்பினராக இருந்து அப்பகுதியில் இருந்து வரும் பிணக்குகளை உரியவர்களிடம் கலந்துரையாடி சுமூகநிலையை அடைவிப்பதில் வெற்றிகண்டவர். 2013-2014 இல் உதவித் தவிசாளராக கடமையாற்றினார்.

இவரின் சேவைக்கு பரிசாக சமாதான நீதவானாக 28.05.2008 இல் பதவியேற்றார். இவரின் அளவிறந்த தமிழுணர்வும் இலக்கியத்தழுவல்களும் இவரை சிறுவயது முதல் மரபுநிலைக்கவிஞனாக உருவாக்கியிருந்தது. நினைத்தவுடன் கவிபுனையவும் உரிய மரபு மாறா சந்தம் நிறைந்த கவிதைகளை யாத்து நிற்பதில் இவருக்கு நிகர் இவரேயாவார். இவரது பாடல்களை தென்னியந்திய பிரபல பாடகிகளாகிய வாணிஜெயராம், நித்தியஸ்ரீ ஆகியோரால் பாடப்பட்டவகையில் சிறப்பார்ந்த பெருமையும் உண்டு.

இவருடைய நல்வாழ்க்கையின் பேறாக உதித்த இரட்டை பெண்மணிகள் இன்று கரம்பற்றி திருமதி. சுகப்பிரதா இரமணன் கனடாவில் பேர்த்திகள் பிரணிதா, பிரதிக்ஷா ஆகியோருடனும், திருமதி. சுகவரதா பிரியதர்சன் (வங்கி உதவியாளர் DFCC Bank, Revenue Management Executive, Sri Lankan Airlines) கொழும்பிலும், ஏகபுத்திரன் சிவானுஜன் பொறியியலாளராக சிங்கப்பூரிலும் மிளிர்கின்றனர்.

குறிப்பாக ஞானகாந்தன் அவர்களின் அளவிறந்த பணிகளால் வலராற்றுத் தடமாக இன்றைய மணிவிழா சமூகத்தின் ஒட்டுமொத்தமான வெளிப்பாடாகவும், அவரின் வாழ்வும் பணிகளும் மீள மேம்படுத்தப்பட்டு ஓய்வுநிலையில் துலக்கமடைய சந்தர்ப்பம் உண்டு என்றவகையில் தனிமனிதனாக துணிவு, நம்பிக்கை, விடாமுயற்சியுடன் 39 ஆண்டுகள் கல்விச்சேவை, சமூகசேவை ஆகியவற்றுக்குள் புடம்போடப்பட்ட பொன்மனச் செம்மலாக என்றென்றும் குடும்ப நல்லுறவுகளுடன் வளமும் நலமும் பெற்றுப் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல நாகபூஷணி அம்பாளை இறைஞ்சி நிறைவு செய்கிறேன்.

**வைத்தியகலாநிதி கணேஸ் ஸ்ரீதரன்**
செயலாளர்,
மணிவிழாக்குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபராகப் பணியாற்றி

# ஓய்வுபெறும் உயர்திரு. வே. ஞானகாந்தன்

அவர்களின் சேவையைப் பாராட்டி

மணிவிழாக் குழுவினரால் வழங்கப்பட்ட

# வாழ்த்துப் பாமாலை

நீலக்கடல் அலைகள் நித்திலத்தைக் கொட்டுகின்ற
சீலமிகு நயினாதீவுக் குலக்கொழுந்து
சாலச்சிறந்த அன்புச் சாகரத்தால் ஓர் புதிய
பாலம் அமைத்தவனைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

கல்விப் புலமையொடு கடமை புரிந்துயர்ந்து
எல்லவரும் போற்ற இனிதே பணியாற்றி
நல்லவனாய் நாட்டவரின் நன்மதிப்பைப் பெற்றவனின்
வல்லமையைப் பாராட்டி வாழ்த்தி வழியனுப்புகிறோம்.

கொக்குவில் இந்து கொடிகட்டித் தான்உயர
தக்கவழி காட்டித் தடைகளினைத் தான்தகர்க்கப்
பக்கபலமாக இருந்தாய் நீ என்றென்றும்
மிக்க புகழோடு மேன்மையுற வாழ்த்துகிறோம்.

அன்பாலே ஆசிரியர் மாணவரை அரவணைத்து
இன்முகத்தினாலே இனிய சொற்கள் தன்னாலே
பன்னரிய அதிபர் பதவியினைத் துலக்கிய உன்
சொன்னலத்தைப் பாராட்டிச் சொல்லுகிறோம் வாழியநீ!

பணியுமாம் என்றும் பெருமையெனும் மந்திரத்தை[த்]
துணிவுடனே போற்றித் தூயபணி செய்தவனை
மணிவிழா நாயகனை மனதாரப் பாராட்டி
அணிந்தோமே எங்கள் ஆசியெனும் மாலைகளை.


ஐய உன்பணிகள் என்றும் அகல்விளக்காகி நாங்கள்
உய்திடப் பாதைகாட்டி உயர்த்திடும் போதிலேநீ
செய்தநற் செயல்கள் யாவும் செழித்திலங்கு வளரும் அந்த
மெய்மையைப் புகழ்ந்தோம் இந்தமேதினி சிறக்கவாழி!

ஊரெலாம் போற்றும் உத்தமனாகிச் செம்மைச்
சீரினால் உயர்ந்தாய் செய்த செயல்களால் உயர்ந்தாய்
பாரெலாம் நிலைக்கும்தெய்வ பக்தியால் உயர்ந்தாய் நல்ல
பேரினால் உயர்ந்தாய் என்றும் பீடுற இனிதுவாழி!

அன்புடன்
வாழ்த்தி வழங்குவோர்
**மணிவிழாக்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியின்
அதிபர்
உயர்திரு. வே. ஞானகாந்தன்
அவர்களின்

மணிவிழா

60

இடம் : செல்வமஹால் திருமண மண்டபம்
கே.கே.எஸ். வீதி, பூநாறிமரத்தடி, யாழ்ப்பாணம்.

காலம் : 04-01-2017 புதன்கிழமை
மாலை 4.30 மணி

தலைமை : பேராசிரியர் க. தேவராஜா

அனைவரையும் இவ்விழாவில் பங்குபற்றுமாறும்
இராப்போசன விருந்தில்
கலந்துகொள்ளுமாறும்
அன்புடன் அழைக்கின்றோம்.

மணிவிழாக் குழுவினர்

- மலர் வெளியீடு — 'ஞான கலசம்' (வெளியீடு - விழாக்குழு)
- வெளியீட்டுரை — திரு. நா. விஜயசுந்தரம் (பிரதம ஆசிரியர், 'வலம்புரி')
- கௌரவிப்பு
- ஏற்புரை — விழா நாயகன்
- நன்றியுரை — வைத்தியகலாநிதி சிறீதரன் (செயலாளர், மணிவிழாக்குழு)

இராப்போசன விருந்துபசாரம்

வாழ்க வளமுடன்

குறிப்பு : நிகழ்வுகள் யாவும் குறிக்கப்பட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும்.

Print@Print Master. T.P. : 021 205 3322

## நிகழ்ச்சி நிரல்

- மங்கல விளக்கேற்றல்
- தேவாரம்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை — திரு. சு. தியாகலிங்கம் (ஓய்வுநிலை அதிபர், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை, பொருளாளர், மணிவிழாக்குழு)
- ஆசியுரை — சிவஸ்ரீ சிவதாசக் குருக்கள் (பிரதம குருக்கள், கிருபாகர சிவசுப்பிரமணிய தேவஸ்தானம்)
- தலைமையுரை
- வாழ்த்துரைகள்
  - திரு. நா. வேதநாயகன் (அரச அதிபர், யாழ்ப்பாணம்)
  - திரு. ஈ. இளங்கோவன் (கௌரவ ஆளுநரின் செயலாளர்)
  - திரு. என். தெய்வேந்திரராஜா (வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்)
  - திரு. அ. அகிலதாஸ் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்)
  - திரு. அ. பஞ்சலிங்கம் (ஓய்வுநிலை அதிபர், தலைவர், பழைய மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி.
  - திரு. பொ. கமலநாதன் (ஓய்வுநிலை அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி)
  - பேராசிரியர் தி. வேல்நம்பி (பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம், யாழ். பல்கலைக்கழகம்)
  - பேராசிரியர் மா. சின்னத்தம்பி (கல்வியியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
  - திரு. ப. விக்கினேஸ்வரன் (ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்)
  - திரு. இ. செல்வநாதன் (செயலாளர், கொக்குவில் இந்துக் கல்லூரி நம்பிக்கை நிதியம்)
  - திரு. பொ. சந்திரநாதன் (உப தலைவர், பழைய மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி)
  - திரு. மு. வேலாயுதபிள்ளை (உப தலைவர், பழைய மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி)
  - திரு. ச. உமாசுதன் (செயலாளர், ஆசிரியர் கழகம், கொக்குவில் இந்துக் கல்லூரி)
  - திரு. S.K. கண்ணதாசன் (செயலாளர், பாடசாலை அபிவிருத்திக் குழு, கொக்குவில் இந்துக் கல்லூரி)
  - திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை (ஓய்வுநிலை அதிபர், இணுவில் மத்திய கல்லூரி)
  - திரு. E.S.P. நாகரட்ணம் (உரிமையாளர், ஆறுமுகன் ஹாட்வெயார்)
  - திரு.க. ஜெயபாலசிங்கம் (முன்னாள் தலைவர், பழைய மாணவர் சங்கம், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)
  - திரு. நா. சுந்தரராசா (ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர், முன்னாள் செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்வோம்

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் திரு.வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்கள் பிறந்த இன்று (04.01.2017) தமது அறுபதாவது அகவை நிறைவை ஒட்டி யாழ்ப்பாணம் செல்வமஹால் திருமண மண்டபத்தில் மணிவிழாவினைக் கொண்டாடுவதனையிட்டு மிகவும் அகமகிழ்கின்றோம்.

இவர் 1957ஆம் ஆண்டு பிறந்து தமது கற்றல் செயற்பாட்டைத் தொடர்ந்து 1978ம் ஆண்டு தொடக்கம் ஆசிரியப் பணி, ஆசிரிய ஆலோசகர் பணி, அதிபர் பணியுடன் சமூகப் பணிகளும் ஆற்றி, பல அறிவும் ஒழுக்கமும் உள்ள மாணவர் சமூகத்தை இந்த மண்ணுக்காக எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைக் கூறிக்கொள்வதில் மகிழ்கின்றோம்.

இந்த மணிவிழா நிகழ்வுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி, யா/ கனகரெத்தினம் ம.மகாவித்தியாலயம், யா/ இந்து ஆரம்பப் பாடசாலை சமூகத்திற்கும் மற்றும் புத்திஜீவிகளுக்கும் எமது நன்றிகள். திரு.வே. ஞானகாந்தன் அதிபர் அவர்களின் "ஞானகலசம்" மணி விழா மலருக்கு தமது கடமைகள், வேலைப்பழுக்கள் மத்தியிலும் சிரமங்களைப் பாராது ஆசிச் செய்திகள், வாழ்த்துரைகள், கட்டுரைகள் வழங்கிய சமயப் பெரியார்கள், வடமாகாண ஆளுநர், வட மாகாண முதலமைச்சர், வட மாகாண கல்வி அமைச்சர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், ஆளுநரின் செயலாளர், பேராசிரியர்கள் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஓய்வுபெற்ற கல்வியியலாளர்கள், அதிபர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் மற்றும் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மணிவிழா மலரினை மிகக்குறுகிய காலத்தில் மிக அழகாக அச்சிட்டுத் தந்துதவிய பிறிண்ட் மாஸ்ரர் நிறுவனத்தினருக்கும், விழா சிறப்புற நடைபெற தமது மண்டபத்தைத் தந்துதவிய செல்வமஹால் மண்டப உரிமையாளருக்கும், விழா நாயகனை பாரியார் சகிதம் அழைத்துவர சிறப்பு ஏற்பாடுகள் செய்தவர்களுக்கும் எமது நன்றிகள். அதிபர் அவர்களுக்கு தொலைபேசி ஊடாகவும் நேரடியாகவும் வாழ்த்துக்கள் தெரிவித்தவர்களுக்கும் நன்றிகள். எல்லாவற்றுக்கும் மேலாக விழா சிறப்புறவும் மகிழ்ச்சியாகவும் நடைபெறுவதற்கு விழாவில் கலந்து சிறப்பித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் விழா சிறப்புற நடைபெற உதவிய பெருந்தகைகளுக்கும் ஞானகலசம் மணிவிழாக்குழு சார்பாக எங்கள் உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

**செயலாளர்**
**மணிவிழாக்குழு**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org